விலை : 20.00

website : www.valampurii.lk

பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 தை 08 சனிக்கிழமை (21.01.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 033

# முன்னாள் போராளிகள் கைதாவதை நிறுத்துங்கள்

## அவர்களின் வாழ்வுக்கு அங்கீகாரம் அவசியம்

## ஐரோ.ஒன்றிய பிரதிநிதிகளிடம் விக்கி வலியுறுத்து



(யாழ்ப்பாணம்)

நாட்டில் எங்கு குற்றச்செயல்கள் இடம்பெற்றாலும் உடனடியாக முன்னாள் போராளிகளை கைது செய்யும் வழக்கத்தை பொலிஸாரும் இராணுவத்தினரும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்த வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், போராளிகளின் வாழ்க்கைக்கு சிறந்த அங்கீகாரம் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

(23-ம் பக்.)

## ஒற்றுமையை வளர்ப்போம்

### அமைச்சர் முஸ்தபா



(யாழ்ப்பாணம்)

வேற்றுமைக்கு மத்தியில் ஒற்று

23ஆம் பக்கம் பார்க்க....

### மனித உரிமை விடயம்:

## இலங்கை குறித்து ஐ.நா மகிழ்ச்சி

(டாவோஸ்)

இலங்கையின் மனித உரிமை விவகாரங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற சாதகமான முன்னேற்றங்களுக்காக தான் மகிழ்ச்சி தெரிவிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணை

23ஆம் பக்கம் பார்க்க....

## எமது நிபந்தனையற்ற ஆதரவை அரசு சரியாக பயன்படுத்தவில்லை

### சிவசக்தி ஆனந்தன் எம்.பி ஆதங்கம்



(குருமன்காடு)

இந்த அரசாங்கத்திற்கு நாம் வழங்கிய நிபந்தனையற்ற ஆதரவை அவர்கள் சரியாக பயன்படுத்தவில்லை என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், யுத்தத்திற்கு பின்னர் நடைபெற்ற

23ஆம் பக்கம் பார்க்க....

## மோ.சைக்கிள் விபத்து;

## குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிளும், வடி ரக வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கொடிகாமம் கச்சாய் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

### 4 முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் உண்ணாவிரதம்

(குருமன்காடு)

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினர், நான்கு முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி, சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு கையொப்பமிட்டு அறிவுறுத்தல் கடிதம் ஒன்றை நேற்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளனர்.

வவுனியாவில் மாவீரன் பண்டார

23ஆம் பக்கம் பார்க்க....

## அரிசி # வரட்சி ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ அரிசி எக்காரணம் கொண்டும் 76 ரூபாவுக்கு மேல் விற்பனை செய்ய முடியாதென ஜனாதிபதி மைத

04ஆம் பக்கம் பார்க்க....



அமெரிக்காவின் 45வது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் நேற்றிரவு கோலாகலமாக பதவியேற்றுள்ளார். இந்நிகழ்வு தலைநகர் வாஷிங்டனில் நடைபெற்றுள்ளது.

## வடமராட்சிப் பகுதியில் நேற்று போலி நாணயத்தாள்களினை அச்சிட்டு வந்த கும்பல் கைது



(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் போலி நாணயத் தாள்களினை அச்சிட்டு அதனைப் புழக்கத்தில் விட்டு வந்த கும்பல் ஒன்றினை நெல்லியடிப் பொலிஸார் ஆதாரங்களுடன் கைது செய்துள்ளனர்.

நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் வல்லைப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் ஆயிரம் ரூபாய் போலி நாணயத்தாளினை மாற்ற

24ஆம் பக்கம் பார்க்க....

## கிழக்கில் எழுக தமிழ் பெப்ரவரி 10-ல் நடக்கும்

### தமிழ் மக்கள் பேரவை அறிவிப்பு


(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளையும் அன்றாட ஒடுக்குமுறைகளையும் மக்கள் ஒன்றுதிரண்டு வெளிப்படுத்தும் ஜனநாயக எழுச்சியான எழுக தமிழ் நிகழ்வானது கிழக்கு மாகாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தினத்தில் இருந்து தவிர்க்க முடியாத காரணங்களால் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முழுநிலவு தினமாகிய 10-ம் திகதி, வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டிருக்கின்றது என

24ஆம் பக்கம் பார்க்க....

# அதிரடிப் படையினரின் ஜீப் - மோ. சைக்கிள் விபத்து

## குடும்பஸ்தர் படுகாயம்



மாங்குளம் பொலிஸ் நிலையப் பிரிவுக் குட்பட்ட ஏ9, வீதியில் உள்ள மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு முன்பாக அதிரடிப் படையினர் பயணித்த ஜீப் வண்டி, மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதிய விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் படுகாயம் அடைந் துள்ளார்.

இச்சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 6.00 மணியளவில் நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவ தாவது,

கிளிநொச்சியில் இருந்து நெடுங்கேணி நோககி மோட்டார் சைக்கிளில் பயணித்த பிரஸ தாப குடும்பஸ்தர் மாங்குளம் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பு வதற்காக திரும்பிய வேளை, கனகராயன் குளம் பகுதியில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணத்த அதிரடிப் படையினரின் ஜீப் வண்டி வேகக் கட்டுப்பாட்டை இழந்து முன்னால் வந்த மோட்டார் சைக்கிள் மீது மோதியுள் ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பய ணித்த குடும்பஸ்தர் தூக்கி வீசப்பட்டு படு காயமடைந்த நிலையில் மாங்குளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளி நொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற் றப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் வவுனியா நெடுங்கேணி யைச் சேர்ந்த ஓமாந்தரம் - செல்லத்துரை (வயது 42) என்பவரே படுகாயம் அடைந் துள்ளார்.

விபத்து தொடர் பில் தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மாங்குளம் பொலி ஸார் விபத்துக்குள் ளான வாகனங்களை பொலிஸ் நிலையத் துக்கு எடுத்துச் சென்ற துடன் மேலதிக விசா ரணைகளை மேற் கொண்டு வருகின் றனர். (செ-15.281)


## படவரைஞர் பதிவு செய்தல் 2017

மாநகர சபையில் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைந்து சமர்ப்பிக்க விரும்பும் படவரைஞர்கள் மற்றும் பதிவைப் புதுப்பித்துக் கொள்ள விரும்புவோர் எதிர்வரும் **31.01.2017ஆம் திகதிக்கு முன்னர்** தங்கள் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும். தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பு: மேற்குறிப்பிட்ட திகதிக்குள் பதிவுகளைப் புதுப்பிக்கத் தவறும் படவரைஞர்களது பதிவுகள் இரத்துச் செய்யப்படும்.

(C-7304)

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**


# வெள்ளவத்தையில் சீனப் பிரஜை கைது

(கொழும்பு)

வெள்ளவத்தை பகுதியில் சட்டவிரோத மான முறையில் சிகரெட் வைத்திருந்த வெளிநாட்டு பிரஜை கைது செய்யப்பட்டுள் ளார்.

இலங்கைக்கு சட்டவிரோதமான முறை யில் 5 மில்லியன் பெறுமதியான சிகரெட் கடத்திய குற்றச்சாட்டு தொடர்பிலேயே குறித்த வெளிநாட்டு பிரஜை நேற்றுக் கைது செய் யப்பட்டுள்ளார்.

மேலும் மான் தோல், வல்லப்பட்டை உட்பட சந்தனக்கட்டையும் குறித்த வெளி நாட்டு பிரஜையிடம் இருந்து கைப்பற்றப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

சீனாவை சேர்ந்த நபரே சம்பவத்தில் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை முன் னெடுத்து வருகின்றனர். (இ-7)

# நெசவு போதனாசிரியர் ஒன்றுகூடல் விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை நெசவு போதனாசிரியர் சங்க சகஜ மார்க்க ஒன்றுகூடல் விழா இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ். நல்லூர் அரசடி நெசவுப் பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் காப்பாளர் தா. உதயரட்ணம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு ஓய்வுநிலை உதவிச் செயலாளர் க. கனகரத் தினம், சிறப்பு விருந்தினராக தொழிற்றுறை திணைக்கள ஓய்வுநிலை நெசவு மேற் பார்வையாளர் திருமதி வே. ஞானதேவி, கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை சிரேஷ்ட போதனாசிரியர் செல்வி ந. புனிதவதி ஆகி யோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் வட மாகாண அனைத்து நெசவு போதனாசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்களால் கேட் டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ)


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் ஆசிரிய
கலாசாலை விரிவுரையாளர்
**திருமதி பிரபாலினி தனம்**
அவர்களின் அன்பு மாமியார்
**தியாகராஜா நாகேஸ்வரி**
அவர்கள்
கொழும்பில் காலமானதையிட்டு
எமது கண்ணீரைக்
காணிக்கையாக்குகின்றோம்.
அன்னாரின் ஆன்மா சாந்தியடையவதாக

**விரிவுரையாளர் கழகம்**
**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**

## 31ம் நாள் நினைவு அஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
# தம்பிப்பிள்ளை காசிநாதன்

(Former Deputy Registrar
University of Jaffna, Sri Lanka)

தோற்றம்
04.06.1938

மறைவு
22.12.2016

அன்பின் விளைநிலமே! ஆத்மிகத்தின் உறைவிடமே!
அறிவின் பொக்கிஷமே! அமைதியின் அடையாளமே!
எங்கள் அன்பின் ஆரமுதே!

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகிய**
**உங்கள் புனித ஆத்மா என்றும் எங்களை ஆசிக்கட்டும்**
**ஓம் சாந்தி!**

எங்கள் அன்புத் தந்தையின். மரணச் செய்தி கேட்டு நேரில் வருகை தந்தவர் களுக்கும் பல்வேறு வழிகளில் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம், அஞ்சலிப் பிரசுரங்கள், அஞ்சலி உரைகள் வழங்கியவர் களுக்கும் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றவர்களுக்கும் இரு கரம் கூப்பி எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுதுமலை தெற்கு,**
**மானிப்பாய்.**

(C-7306)

**- குடும்பத்தினர்**

# ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால் அரசைக் கவிழ்க்க முடியாது

## ஆளும் தரப்பு அதீத நம்பிக்கை

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சியால் ஒருபோதும் நல்லாட்சி அரசைக் கவிழ்க்க முடியாது எனவும் புதிதாக நிர்மாணிக் கப்பட்ட தொழில் நிறுவனங்களினூடாக அதிக வேலை வாய்ப்புகளை நல்லாட்சி அரசு இளைஞர்களுக்கு பெற்றுக் கொடுத்துள்ளது எனவும் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப் பினர் விஜயபால ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

அரச தகவல் திணைக்க ளத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.

நாம் இது வரையில் பெற் றுக் கொடுத்துள்ள தொழில் வாய்ப்புகளினூடாக 39,000 - 40,000 வரையிலான சம்ப ளத்தினை பெற்றுக் கொண் டிருப்பதாக வேலைவாய்ப் பினை பெற்றுக் கொண்ட இளைஞர்கள் தெரிவித்து ள்ளனர்.

அபிவிருத்திகள் மேற் கொள்ளப்படுமென்றால் அவ ற்றால் நாட்டிலுள்ள மக்க ளுக்கு பிரயோசனம் இருக்க வேண்டும்.

அவ்வாறல்லாமல் கடந்த ஆட்சியில் அபிவிருத்தி என்ற பெயரில் அம்பாந்தோட்டை யில் துறைமுகம், மத்தளயில் விமான நிலையம் மற்றும் வீதி கட்டமைப்புகள் என்பன செய்யப்பட்டன. இவற்றால் எவ்வித பிரயோசனமும் இல்லை.

. ஆனால் நல்லாட்சிக்குள் பத்து இலட்சம் வேலை வாய் ப்புக்களை பெற்றுத்தருவதில் பிரதமரும், ஜனாதிபதியும் சிறப்பாக செயற்படுகிறார்கள்.

அண்மையில் நடை பெற்ற ஊடக சந்திப்பில் பந்துல குணவர்த்தன போர்ட் சிட்டி அமைப்பதற்காக வழங்கப்பட்ட காணியிலும், அது தொடர்பான ஒப்பந்தத் திலும் எந்தவித பிரச்சினை யும் இல்லை எனவும் தெரி வித்தார். (இ-3)

## அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்




கொழும்பில் அமைந்து ள்ள அமெரிக்க தூதரகத்தி ற்கு முன்பாக டொனால்ட் ட்ரம்ப்புக்கு எதிர்ப்பு தெரி வித்து நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அமெரிக்கா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு அமெ ரிக்காவின் 45ஆவது ஜனா திபதியாக தெரிவாகிய டொனால்ட் ட்ரம்ப்பிற்கு தாம் எதிர்ப்பு தெரிவிப்பதாக போராட்டக் காரர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை அமெரிக்க ஜனா திபதி தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்பின் பதவி யேற்பு நிகழ்வு நேற்று இடம் பெற்றது. இலங்கை அரசாங் கம் சார்பில் குறித்த நிகழ்வில் கலந்துகொள்வதற்காக, அமெ ரிக்காவிற்கான இலங்கைத் தூதுவர் பிரசாத் காரியவசம் பங்கேற்றுள்ளமை குறிப்பி டத்தக்கது. (இ-3)

## நட்டத்திற்கு நல்லாட்சி காரணமல்ல

### ஹர்சன எம்.பி.தெரிவிப்பு

ஸ்ரீலங்கா எயார்லை ன்ஸ் விமான சேவையில் ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு நல்லாட்சியை காரணம் காட்ட சிலர் முற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்சன ராஜகருணா தெரி வித்துள்ளார்.

அரச தகவல் திணைக்க ளத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியின் காலப் பகுதியில் மகிந்த ராஜபக்ஷ வின் மைத்துனன் இந்நிறுவ னத்தின் பிரதானியாக செய ற்பட்ட போதே இந்த நட்டம் ஏற்பட்டது. அது மாத்திரமி ன்றி மகிந்தவின் குடும்பத்தினர் அமைச்சரவை அனுமதியில் லாது செயற்பட்ட காலப்பகுதி யில் அவரின் தன்னிச்சை யான முடிவில் விமானங்கள் அதிக விலை கொடுத்து கொள் வனவு செய்யப்பட்டுள்ளது.

ஏனைய பிற நாடுகள் அதேவகை விமானத்தினை குறைந்த பெறுமதியில் பெற் றிருக்க இலங்கையில் அது மிகக்கூடிய பெறுமதியில் கொள்வனவு செய்ததே நட்ட த்திற்கான முக்கிய காரண மாகவும் அமைந்தது.

தற்போது ஜிஎஸ்பி பிளஸ தொடர்பிலும், அபிவிருத்தி தொடர்பிலும் பல பொய்யான கருத்துக்களை பரப்பி, மகிந்த அரசாங்கத்தின் குற்றங் களை மறைப்பதோடு குற்ற வாளிகளை காப்பாற்றும் செயற்பாடே முன்னெடுக்கப் படுகின்றது.

கூட்டு எதிர்க்கட்சியினர் இதற்காக பொய் பிரசாரங் களை மக்களிடம் கொண்டு செல்லும் முனைப்பில் தற்போது செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் கண்டி தலதாமாளிகைக்கு முன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததைப் போன்று காலம் தாழ்த்தப்பட் டாலும் நிறைவேற்று அதிகார முடைய ஜனாதிபதி முறை இல்லாது செய்யப்படும்.

மைத்திரி அரசாங்கத் தின் உறுதி மொழிகள் அடங் கிய கொள்கை புத்தகத்தினை வாசித்திடாத கூட்டு எதிர்க்க ட்சி மற்றும் அரசாங்கத்தில் உள்ள சிலர் குறிப்பிடுவது அவர்களின் தனிப்பட்ட கரு த்தே தவிர நிச்சயமானது அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## நெடுந்தாரகை படகுச்சேவை நேற்று ஆரம்பம்







(படங்கள்:பொ.சோபிகா)



குறிகாட்டுவான்-நெடுந்தீவுக்கான நெடுந்தாரகை பயணிகள் படகுச் சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபாவினால் நேற்றையதினம் குறிகாட்டுவானிலிருந்து ஆரம்பித்து வை[illegible]ள்ளது.

வட்க்கு மா[illegible] செயலாளர் பத்திநாதன் தலைமையில் நடை பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினரா[illegible] சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா, சிறப்பு விருந்தினராக[illegible] முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், சிறுவர், விவகார இராஜாங்க அமைச்சர் திரு[illegible]கலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிறைசி கட்சிசன், வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் , வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி ,விந்தன் கனகரத்தினம் மற்றும் கடற்படை அதிகாரிகள், பொது மக்[illegible]ட்பட பலர் கலந்து கொண்டனர்.

நெல்சிப் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் 150 மில்லியன் ரூபா செலவில் இந்த நெடுந்தாரகை படகு உருவாக்கப்பட்டுள்ளது. 80 பயணிகள் பயணிக்கக் கூடிய போதிய வசதிகளுடன் இப் படகு அமைக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவு மற்றும் குறிகாட்டுவான் மக்களின் நீண்ட நாள் கோரிக்கைக்கமைய இச்சேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-9)

# நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் பங்காளதேஷ் 289 ஓட்டங்களில் சுருண்டது

நியூசிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்சில் 289 ஓட்டங்களில் சுருண்டது.

நியூசிலாந்து- பங்களாதேஷ் அணிகள் மோதும் 2-வது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி நேற்று கிறிஸ்ட்சர்ச் நகரில் தொடங்கியது. நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி துடுப்பாடத் தொடங்கிய பங்களாதேஷ் அணியின் தொடக்க வீரர் தமீம் இக்பால் 5 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். முகமதுல்லா 19 ஓட்டங்களில் வெளியேறினார்.

இதையடுத்து சவுமியா சர்க்கார் - சாகிப் அல் அசன் ஜோடி நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தது. அபாரமாக விளையாடிய சவுமியா சர்க்கார் 86 ஓட்டங்களில் விக்கெட்டை இழந்தார். சாகிப் 59 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். அதன்பின்னர் நியூசிலாந்தின் சிறப்பான பந்துவீச்சில் சீரான இடைவெளியில் பங்களாதேஷ் அணியின் விக்கெட்டுகள் சரிந்தன.





நுருல் ஹசன் (47 ஓட்டம்) தவிர மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் வெளியேற, பங்களாதேஷ் அணியின் முதல் இன்னிங்ஸ் 289 ஓட்டங்களில் முடிவுக்கு வந்தது. அத்துடன் முதல் நாள் ஆட்டம் முடித்துக்கொள்ளப்பட்டது.

நியூசிலாந்து தரப்பில் சவுத்தி அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகள் வீழ்த்தினார். போல்ட் 4 விக்கெட்டும், வோக்னர் 1 விக்கெட்டும் வீழ்த்தினர். இன்று நியூசிலாந்து அணி முதல் இன்னிங்சை தொடங்க உள்ளது. (க)

# மலேசியா மாஸ்டர்ஸ் பட்மிண்டன் அரையிறுதியில் சாய்னா நேவால்



மலேசியா மாஸ்டர்ஸ் கிராண்ட் பிரிக்ஸ் பட்மிண்டன் தொடரில் இந்தியாவின் சாய்னா நேவால் அரையிறுதிக்குள் நுழைந்துள்ளார்.


பட்மிண்டன் உலகத் தரவரிசையில் முன்னாள் நம்பர் வன் வீராங்கனையும், ஒலிம்பிக்கில் வெண்கலப் பதக்கம் வென்றவருமான சாய்னா நேவால் மலேசியா மாஸ்டர்ஸ் கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மிண்டன் தொடரின் காலிறுதி சுற்றில் இந்தோனேசியாவின் பிட்ரியனியை எதிர்கொண்டார்.

சுமார் 40 நிமிடம் நடைபெற்ற இந்த போட்டியில் சாய்னா 21-15, 21-14 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதனையடுத்து சாய்னா தனது அரையிறுதி போட்டியில், ஹொங் கொங்கின் யிப் பியி யின்னை எதிர்கொள்ள உள்ளார். யிப் உடன் நேருக்கு நேர் மோதிய போட்டிகளில் சாய்னா 6-2 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறார்.

இதனிடையே, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் அஜய் ஜெயராம் இந்தோனேசியாவின் அந்தோணி சினிசுகா ஜிண்டிங் கிடம் 21-13, 21-8 என்ற நேர் செட் கணக்கில் தோல்வியை தழுவினார். (க)

# அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் அதிர்ச்சி தோல்வி



அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் 6 முறை சம்பியனான ஜோகோவிச்சை சாய்த்து உஸ்பெகிஸ்தான் வீரர் இஸ்தோமின அதிர்ச்சி அளித்தார்.


'கிராண்ட்ஸ்லாம்' போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி மெல்போர்ன் நகரில் நடந்து வருகிறது. போட்டியின் 4-வது நாளான நேற்று முன்தினம் மிகப்பெரிய அதிர்ச்சி தோல்வி அரங்கேறியது.

ஆண்கள் ஒற்றையர் 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியனும், 2-ம் நிலை வீரருமான நோவக் ஜோகோவிச் (செர்பியா), 'வைல்டு கார்டு' வீரரான டெனிஸ் இஸ்தோமினை (உஸ்பெகிஸ்தான்) எதிர்கொண்டார். எளிதில் வென்று விடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட ஜோகோவிச்சுக்கு, இஸ்தோமின் 5 செட் வரை மல்லுகட்டி வசமாக 'ஆப்பு' வைத்தார். 4 மணி 48 நிமிடங்கள் நீடித்த ஆட்டத்தின் முடிவில் இஸ்தோமின் 7-6 (10-8), 5-7, 2-6, 7-6 (7-5), 6-4 என்ற செட் கணக்கில் ஜோகோவிச்சை வெளியேற்றி 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

2008, 2011, 2012, 2013, 2015, 2016 ஆகிய ஆண்டுகளில் சம்பியனான ஜோகோவிச், இந்த முறையும் மகுடம் சூடி அவுஸ்ரேலிய ஓபனை 7 முறை ருசித்த முதல் வீரர் என்ற வரலாற்று சாதனையை படைக்கும் ஆவலில் இருந்தார். அவரது கனவை தரவரிசையில் 117-வது இடத்தில் உள்ள 30 வயதான இஸ்தோமின் சிதைத்து விட்டார். 2006-ம் ஆண்டுக்கு பிறகு ஆஸ்திரேலிய ஓபனில் ஜோகோவிச்சின் மோசமான தோல்வி இதுவாகும். (க)

# அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடர் சானியா உள்ளே, போபண்ணா வெளியே

அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் இந்தியாவின் சானியா மிர்சா மூன்றாம் சுற்றுக்கு முன்னேறினார். போபண்ணா 2ம் சுற்றில் தோல்வியடைந்தார்.



மெல்போர்ன் நகரில் நடைபெற்று வரும் அவுஸ்ரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியா மிர்சா (இந்தியா) - ஸ்டிரைகோவா (செக் குடியரசு) ஜோடி 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றது.

நேற்று நடந்த 2-வது சுற்று ஆட்டத்தில் சமந்தா (அவுஸ்ரேலியா)- ஷுய் ஜாங் (சீனா) ஜோடியை 6-1, 6-4 என்ற நேர்செட் கணக்கில் சானியா ஜோடி வீழ்த்தியது.

ஆண்கள் இரட்டையர் பிரிவு 2-வது சுற்றில் போபண்ணா (இந்தியா)- பப்லோ சுவாஸ் (உருகுவே) ஜோடி தோற்று வெளியேறியது. 15-ம் தரநிலையில் உள்ள போபண்ணா ஜோடி, தரநிலையில் பின்தங்கியுள்ள அவுஸ்ரேலியாவின் அலெக்ஸ் போல்ட்-பிராட்லி மவுஸ்லி ஜோடியிடம் 6 - 2, 6 - 7(2), 4 - 6 என்ற செட்கணக்கில் தோல்வியடைந்தது.

ஏற்கெனவே முன்னணி வீரரான லியாண்டர் பயஸ், அவரது பார்ட்னர் ஆண்ட்ரே சா மற்றும் புரவ் ராஜா - திவிஜ் சரண் ஜோடி முதல் சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறியது குறிப்பிடத்தக்கது. (க)

# அரிசி ...

ரிபாலசிறிசேன தெரிவித்துள்ளார்.

தனியார் வர்த்தகர்கள் மற்றும் அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு தேவையானவகையில் அரிசிவிலையை அதிகரித்து பொதுமக்களை அசௌகரியத்துக்குள்ளாக்க முடியாது எனத்தெரிவித்த ஜனாதிபதி, எந்த வொரு சந்தர்ப்பத்திலும் சந் தையில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளிக்க முடியாது என்றும் சுற்றுநிருபங்களுக்குள் மட்டுப்படாது மக்களின் தேவைகளை நிறைவேற்று வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது அதிகாரிகளின் பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சிநிலைக்கு மத்தியில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசாங்கத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவும் நியமிக்கப்பட்டுள்ள விசேட ஜனாதிபதி செயலணியை நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்தபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அரிசி இறக்குமதியின்போது பாவனைக்கு பொருத்தமான அரிசி இறக்குமதி செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டுமென ஜனாதிபதி இதன்போது வர்த்தக அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார். அரசுக்கு சொந்தமான களஞ்சியசாலைகளில் இருந்து வழங்கப்பட்டுள்ள நெல்லை பெற்றுக்கொண்டுள்ள நெல் ஆலை உரிமையாளர்கள் அவற்றை அரிசியாக மாற்றி சந்தைக்கு வழங்கியுள்ளார்கள் என்பதை கண்டறிந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி நெல்சந்தைப் படுத்தல் சபைக்கு ஆலோசனை வழங்கினார்.

தமது தனிப்பட்டவேண்டு கோளின் பேரில் இலங்கைக்கு பத்தாயிரம் மெற்றிக் தொன் அரிசியை இன்னும் சிலவாரங்களில் அன்பளிப்பாக வழங்க இந்தோனேசிய அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள வரட்சிநிலைக்கு முகம் கொடுப்பதற்கான அரசாங்கத்தின் குறுகியகால மற்றும் நீண்டகால நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், மாவட்ட மட்டத்தில் நிலவும் பிரச்சினைகளை குறித்த மாவட்ட செயலாளர்களிடம் ஜனாதிபதி கேட்டறிந்தார். அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொடுக்குமாறு ஜனாதிபதி நிதி அமைச்சின் செயலாளருக்கு ஆலோசனை வழங்கினார். மக்களுக்கு தேவையான குடிநீரை பாதுகாத்து அதன் பின்னர் விவசாய நடவடிக்கை களுக்காக நீரை வழங்குமாறு அறிவுரைவழங்கிய ஜனாதிபதி, மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு தேவையான நீர்பௌசர்கள், நீர்பம்பிகள் மற்றும் நீர்த்தாங்கிகளை உடனடியாக குறித்த மாவட்டங்களுக்கு பெற்றுக் கொடுக்குமாறும் கூறினார்.

மக்களுக்கு நாளாந்தம் தேவைப்படும் நிவாரணங்களை வழங்கும்போது எந்தவொருசந்தர்ப்பத்திலும் ஊழியர் தட்டுப் பாடு ஏற்படக்கூடாது என்பதுடன், அதற்கு முப்படையினரின் உதவியை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்தின் போதும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நாளாந்தம் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அனர்த்தமுகாமைத்துவ அமைச்சு மற்றும் நீர்வழங்கல் அமைச்சின் அதிகாரி ஒருவரை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நியமிக்குமாறு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, அந்த அதிகாரிகள் மாவட்ட செயலாளருடன் இணைந்து செயற்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

வரட்சிநிலையுடன் ஏற்பட்டுள்ள சுகாதார பிரச்சினைகள் குறித்துகவனம் செலுத்திவிசேட நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சுக்கு ஆலோசனை வழங்கிய ஜனாதிபதி, மின் சாரத்தையும் நீரையும் சிக்கனமாகப் பாவிப்பது தொடர்பாக மக்களுக்கு அறிவூட்டு வதற்காக விசேட நிகழ்ச்சித்திட்டங்களை தயாரிக்குமாறு ஊடகத்துறை அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார்.

ஐக்கியநாடுகள் சபை உலக வங்கி மற்றும் உலக உணவுத்திட்டத்தின் பிரதிநிதிகளும் இந்த கலந்துரையாடலில் கலந்துகொண்டதுடன் ஏற்படக்கூடிய நிலைமைகளுக்கு முகம்கொடுப்பதற்கு இலங்கைக்குத்தேவையான பொருள் மற்றும் நிதி உதவிகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர்.

அமைச்சர்களான அநுரபிரியதர்ஷனயாப்பா, ராஜிதசேனாரத்தன, சுசில்பிரேமஜயந்த, ரவுப்ஹக்கீம், பீ.ஹெரிசன், ரஞ்சித்சியம்பலாப்பிட்டிய, துமிந்ததிசாநாயக்க, கயந்த கருணாதிலக்க, ரிசாத் பதியுதீன் உள்ளிட்ட அமைச்சர்கள், அனைத்து மாகாண முதலமைச்சர்கள்,

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி.அபேகோன் உள்ளிட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்குபற்றினர். (செ-11)




பல்கலைக்கழக மாணவர்களால் கொள்ளுப்பிட்டியில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தை கண்ணீர்ப்புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகத்தை மேற்கொண்டு பொலிஸார் கலைத்த போது..

# வடக்கு மாகாணத்திலிருந்து தேங்காய், மட்டை ஏற்றுமதி

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையை யாழ். வணிகர்கழகம் கேட்டுக் கொண்டதற் கிணங்க வடக்கு மாகாணத்திலிருந்து தேங்காய் மற்றும் தேங்காய் மட்டை ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு ஏற்றுமதி செய்வதற்கான தேங்காய்களையும் தேங்காய் மட்டைகளையும் மாதாந்தம் பெருமளவில் வழங்கக்கூடிய மொத்த வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் யாழ். வணிகர் கழகத்தில் தங்கள் பெயர், முகவரி, வழங்கக் கூடிய அளவு மற்றும் விலைகள் தொடர்பில் பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். உள்ளூர் உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக்களை உருவாக்கும் முயற்சியில் யாழ். வணிகர் கழகம் தொடர்ந்து ஈடுபட்டு வரும் என்பதால் உள்ளூர் உற்பத்தியாளர்கள் இவ்வாறான வாய்ப்புக்களை பயன்படுத்திக்கொள்ள முன்வர வேண்டும் என யாழ். வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது. மேலதிக தகவல்களுக்கு 021 222 8593 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என யாழ்.வணிகர் கழகச் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார்.(இ

# யாழ். நீதிமன்றத்தின் பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணம் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப் பொருட்கள் இதுவரை உரிமைகோரப்படாத நிலையில் காணப்படுகின்றன. எனவே குறித்த சான்றுப் பொருட்களை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 6 மாத காலப் பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக்கோவையின் 431(2)ன் பிரகாரம் இத்தால் பகிரங்கப் படுத்தப்படுகின்றது.

யாழ்ப்பாண பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்ட சான்றுப் பொருட்கள்

வழ.இலக்கம் MC/2224/PC/16 சான்றுப் பொ.இல. PR/132/16 சான்றுப்பொருள் EPJB 5461 இலக்க HERO HONDA வர்க்க மோட்டார் சைக்கிள், வழ. இலக்கம் AR/40/17 சான்றுப் பொ.இல. PR/115/16 சான்றுப் பொருள் 500-9064 இலக்க MD/90 வர்க்க மோட்டார் சைக்கிள், வழ. இலக்கம் AR/41/17 சான்றுப் பொ.இல. PR/243/16 சான்றுப்பொருள் WPUJ 6523 இலக்க HERO HONDA வர்க்க மோட்டார் சைக்கிள்,வழ. இலக்கம் AR/43/17 சான்றுப் பொ.இல. PR/129/15 சான்றுப்பொருள் NBHI 6643 இல. CD/100 வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/42/17 சான்றுப் பொ.இல. PR/82/16 சான்றுப்பொருள் NPGL 8813 இலக்க MD/90வர்க்க மோட்டார் சைக்கிள், வழ.இலக்கம் AR/44/17 சான்றுப் பொ.இல. PR/487/16 சான்றுப்பொருள் NPXP 5156 இலக்க Pleasure வர்க்க மோட்டார்சைக்கிள், வழ.இலக்கம்AR/45/17 சான்றுப் பொ.இல. PR/65/16 சான்றுப்பொ.இல. 6093-5309 இலக்க லுமாலா வர்க்க பெண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இலக்கம் AR/46/17 சான்றுப் பொ.இல. PR/199/16 சான்றுப்பொருள் 5571162C லுமாலா வர்க்க ஆண்கள் துவிச்சக்கர வண்டி, வழ.இலக்கம் AR/47/17 சான்றுப் பொ.இல. PR/ 597/16 சான்றுப் பொருள் இலக்கமற்ற HERO வர்க்க ஆண்கள் துவிச்சக்கரவண்டி மறுதவணை 20.07.2017 என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (இ


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



நாகலிங்கம் சுபத்திராதேவி

தோற்றம் 27.07.1936 மறைவு 02.02.2016

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வடிவேலு நாகலிங்கம்

தோற்றம் 01.10.1932 மறைவு 11.05.2011

எமது குடும்பத் தலைவி நாகலிங்கம் சுபத்திராதேவி அவர்களின் முதலாம் ஆண்டு சிராத்த தினம் இன்று 21.01.2017 சனிக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்களின் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பூஜைகளில் கலந்து கொள்வதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-7302)

கல்லூரி வீதி, ஆத்தியடி, பருத்தித்துறை.

இவ்வண்ணம் குடும்பத்தினர்

076 529 0272, 077 923 7289


# இராசி பலன்

21.01.2017

(தை 08, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.36 மணிக்கு
நவமி முன்னிரவு 9.17 மணிவரை
சுவாதி முற்பகல் 10.05 மணிவரை
சுபநேரம் 3.35-5.05 மணிவரை
இராகுகாலம் 9.35-11.05 மணிவரை
திருநீலகண்டர்,தாயுமான சுவாமிகள் குருபூசை,அமிர்தசித்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| கேது சுக் | கிரகநிலை சந்திராஷ்டமம் ரேவதி அதிகாலை 5.36இற்கு விரு-சந் | | |
| சூரி | | | ராகு |
| புத | சனி | குரு சந் | |

**மீனம்:** எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செயற்படுவது நல்லது, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல்நலனில் கவனம் தேவை.

**மேடம்:** புகழ்கூடும் நாள், விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**இடபம்:** சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், அதிகம் செலவாகும் என நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

**மிதுனம்:** தொழில் முன்னேற்றமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கும்பம்:** குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் நலன்கருதி எடுத்த முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம், வீண்பழிகள் அகலும்.

**கடகம்:** நினைத்தது நிறைவேறும் நாள், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், வாகன சுகமுண்டு, தொலைதூரத்திலிருந்து சுபதகவல்கள் வந்து சேரலாம்.

**மகரம்:** உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்:** நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், ஆதாயம் அதிகரிக்கும் நாள், சகோதர ஒற்றுமை மேலோங்கும் நாள்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கலாம்.

**துலாம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், சிந்தனை மிகுதியான நாள், பெண்கள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கன்னி:** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

# கழிவுகளால் அவதி



கே.கே.எஸ்.வீதி யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் வேம்படிப் பிள்ளையார் ஆலய தேர் முட்டிக்கு முன்பாக வீதிக்கரையோரமாக பல மாதங்களாக தேங்கிக் கிடக்கும் குப்பைக் கழிவுகளால் அருகிலுள்ள கடைக்காரர்கள் மற்றும் பொதுமக்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். (இ-78)

# உழவர் பெருவிழா நாளை கிறிஸ்தவக் கல்லூரியில்

வடமாகாண விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு நடத்தும் உழவர் பெருவிழா நாளை 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறும். வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக தமிழகம் சூழலியல் விவசாயச் செயற்பாட்டாளர் திருமதி.ரேவதி மாரிமுத்து, பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சேவை உறுப்பினர்கள், ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக அரச உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். பொன் சக்தி கலாகேந்திரா நிறுவனத்தினர் வழங்கும் 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' கிராமிய நடன நிகழ்ச்சியும், தொன்மம் கலைக் குழுவினர் வழங்கும் 'பறை இசை முழக்கம்' பாரம்பரிய இசை நிகழ்ச்சியும் இடம்பெறும். மேலும் இந்நிகழ்வில் 2016ஆம் ஆண்டிற்கான சாதனை விவசாயிகள் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கால்கோள் விழா இன்று

யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரியின் தரம்-6 புதுமுக மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பாடசாலையின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும். பாடசாலையின் பதில் அதிபர் சொ.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் என்.எஸ்.ஆர். சிவரூபன் கலந்து கொள்வார். (இ-3)



கைதடி முதியோர் இல்லத்தில் வசிக்கும் மூத்தோர்கள் சிவபூமி முதியோர் இல்லத்துக்கு நேற்று சென்ற போது...



நீர்வேலி தெற்கு ஸ்ரீலஸ்ரீ சிவசங்கர பண்டிதர் சனசமூக நிலையத்திற்கான மின் இணைப்பு ஆரம்பித்து வைத்தலும் 2016ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களை கௌரவித்தலும் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் அ.பரஞ்சோதி கலந்து கொண்டார். மின் இணைப்பை ஆரம்பித்து வைப்பதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம்.

# இசை இறுவெட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கு சைவத் தமிழ் இளைஞர் மன்றத்தின் அனுசரணையுடன் அராலியூர் ஓதுவார் துரையப்பா மாரிமுத்துவின் தயாரிப்பில் உருவான ஆவரம்பிட்டியின் தாய் எங்கள் முத்துமாரி இசை இறுவெட்டு (CD) வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் இடம்பெறும். (இ-3)

## க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் -2016

**யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி**

**கணிதப் பிரிவு**

பா.பாலகிரி-ஏ2சி, ம.பிரவீன்-3சி.

**வர்த்தகப்பிரிவு**

கு.நிலாஜினி-2பிசி, யோ.தனுசியா-2பிசி, ர.தரணிகா-2பிசி, கு.தீபிகா-பி2சி.

**கலைப்பிரிவு**

தி.சசிகலா-ஏபிசி, ந.சதுஷா-ஏபிசி, செ.மயூரிகா-ஏபிசி, வ.குயின்ஸ்டார்லியா-3பி, ச.றொமின்சன்-ஏ2சி, ப.ஜெயந்திரன்-ஏசிஎஸ், இ.சரத்குமார்-ஏசிஎஸ், பி.சாருஜன்- ஏசிஎஸ், ச.பிரியங்கா-பி2சி, து.ஜென்சிகா-பி2சி.

**யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்**

**கலைப்பிரிவு**

ச.சுகந்தினி-2ஏசி, கி.சிவரஞ்சினி-2ஏசி, செ.ஜென்சிகா-ஏ2பி, ஸ்ரீ.கோகிலமதி-ஏ2பி, செ.ராஜினி-ஏபிசி, தே.தனுசியா-ஏபிஎஸ், தி.குறிஞ்சி-ஏபிசி, தே.லூவண்யா- 2பிசி, க.சோணியா-2பிசி, தி.ஜவநிதா-2பிசி, நா.கயேந்தினி-2பிசி, நா.புர்மினி-2பிசி, ச.தமிழினி-2பிஎஸ், ஜெ.வானுஜா -பி2சி, கஜான்சினி-பி2சி, பா.ஜனரூபி-பி2சி, தே.கௌரிசகானா -பி2சி, சி.தயந்தா-பி2சி.

**வர்த்தகப்பிரிவு**

க.சரண்யா-ஏ2சி, நா.கிருஷா-பி2சி, ச.கமல்ராஜ்-பி2சி, த. விஜிதரன்-3சி.

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க குழுவினர் யாழ். கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு



சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுவின் தலைவர் திருமதி கிளாரி மெய்ரயுட் இலங்கை மற்றும் வவுனியா செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவரான வில்சன் மண்டல் ஆகியோர் யாழ். பாதுகாப்பு படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவை நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்து யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலை தொடர்பில் கேட்டறிந்து கொண்டனர்.

யாழ். குடாநாட்டில் தற்போதைய நிலைமை மற்றும் இராணுவ உறவுகள் மற்றும் செயற்பாடுகள் போருக்குப் பின்னரான சூழலில் ஏற்பட்ட சவால்கள் தொடர்பில் தளபதி விளக்கமளித்ததுடன் நினைவுப்பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார். (இ-9)

# புனர்வாழ்வளிக்கப்பட்ட 61 பயனாளிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு



(படங்கள்: பொ.சோபிகா)

யாழ்.மாவட்டத்தில் உள்ள புனர்வாழ்வு அளித்து சமூகமயமாக்கப்பட்ட பயிலுநர்களுக்கான சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. மீள் குடியேற்ற அமைச்சின் கீழ் உள்ள புனர்வாழ்வு அதிகார சபையினால ஏற்பாடு செய்யப்பட்டு யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பா. செந்தில்நந்தனன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கடற்றொழில், மாடு வளர்ப்பு. கணனி , மின்னியல். தையல், தச்சு வேலை போன்ற துறைகளில் சுயதொழிலை மேற்கொள்ளவுள்ள காரைநகர் பிரதேச செயலக பிரிவினைச்சேர்ந்த 17 பேரும் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவினைச்சேர்ந்த 6 பேரும், சங்கானை பிரதேச செயலக பிரிவினைச்சேர்ந்த 6 பேரும் பருத்தித்துறை பிரிவினைச்சேர்ந்த 6பேரும் ஊர்காவற்றுறை பிரிவினைச்சேர்ந்த 7பேரும் நல்லூர் பிரிவினைச்சேர்ந்த 7பேரும் சண்டிலிப்பாய் பிரதேச பிரிவினைச்சேர்ந்த 6 பேரும் கோப்பாய் பிரிவினைச்சேர்ந்த ஒருவரும் உடுவில் பிரிவினைச்சேர்ந்த 5 பேருமாக 61 பயனாளிகள் இச்சுயதொழில் கடனை பெற்றுக்கொண்டனர்.மொத்தமாக 21 மில்லியன் ரூபாய் அவரவர் சுயதொழிலுக்கேற்ப வழங்கப்பட்டது.இந்நிகழ்வில் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் என்.பத்மநாதன். நிறைவேற்றுப் பணிப்பாளர் என்.புகேந்திரன். புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் பொறுப்பதிகாரி லெப்டினல் கர்னல் மடுகல்ல. இலங்கை வங்கியின் சிரேஷ்ட முகாமையாளர் சேதுகாவலன் மற்றும் யாழ்.மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (இ-9)

# இந்திய கடற்படை அதிகாரியுடன் இலங்.கடற்படைத் தளபதி சந்திப்பு



இந்திய கடற்படையின் போர்க்கப்பல் உற்பத்தி மற்றும் பொறுப்பேற்றல் கட்டுப்பாட்டாளர் வைஸ் அட்மிரல் தேஷ் பாண்டே. நேற்று முன்தினம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இலங்கை கடற்படைத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது. இருதரப்பு நலன்கள் சார்ந்த விவகாரங்கள் குறித்துப் பேச்சு நடத்தப்பட்டுள்ளது. இந் தியாவிடம் இருந்து இலங்கை கடற்படை இரண்டு ஆழ் கடல் ரோந்துப் படகுகளைக் கொள்வனவு செய்துள்ளது.

கோவா கப்பல் கட்டும் தளத்தில் கட்டப்பட்டு வரும் இந்தக் கப்பல்கள் விரைவில் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்படவுள்ள நிலையிலேயே. இந்திய கடற்படையின் போர்க்கப்பல் உற்பத்தி மற்றும் பொறுப்பேற்றல் கட்டுப்பாட்டாளர் இலங்கை கடற்படைத் தளபதியுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளார். (இ)

# குளவித் தாக்குதலுக்கு இலக்கான 28வய்து இளைஞன் பரிதாப மரணம்

(கொழும்பு)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஓல்டன் தோட்டப்பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி 28 வயது இளைஞன் பலியாகியுள்ளதுடன் மேலும் இருவர் காயங்களுக்குள்ளான நிலையில் மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.சம்பவத்தில் உயிரிழந்தவர் கிங்கொரா தோட்டத்தை சேர்ந்த ஜெபமாலை எப்டீபன் என வைத்தியசாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த அந்தோனி செல்வம் (வயது 34). ஞானசேகரன் கருணாநிதி (வயது 25) என்பவர்கள் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தேயிலை கொழுந்தினை உழவு இயந்திரத்தில் ஏற்றிக்கொண்டு வரும் போது திடீரென கலைந்த குளவிகள் இவர்களை தாக்கியுள்ளதாகவும் இதனால் இவர்கள் மயக்க முற்றதாகவும் அதனைத்தொடர்ந்தே பொதுமக்களால் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் சிகிச்சை பலனின்றி ஒருவர் இறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மஸ்கெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)


**கடை விற்பனைக்குண்டு**

ஸ்ரான்லி றோட் யாழ்ப் பாணத்தில் கடை ஒன்று உடன் விற்பனைக்கு உண்டு.

(7314) தொடர்புக்கு:-0779107242



**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



Sivabalan Dilakshan
3A
வர்த்தகப்பிரிவு

Kaneeswary Balasubramaniyam
A2B
(வர்த்தகப்பிரிவு)

Anureka Nadarajah
2BS
(வர்த்தகப்பிரிவு)

இவர்களுடன் கலை மற்றும் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்த ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
யா/பெரியபுலம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம்.

(7567)



**கல்யாண மாலை**

இவர்களுக்கு **மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 34 செவ் 8 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:A/L/தனியார் தொழில்
தொ.இ: B/6784

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: பூசம்
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/6785

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 38
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:சட்டத்தரணி
தொ.இ: B/6788

பிறப்பு: 1989 RC
நட்சத்திரம்: பூரம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L லண்டன்
தொ.இ: B/6791

இவர்களுக்கு **மணமகன் தேவை**

பிறப்பு: 1969 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 24
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: MA/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/3841

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 61 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HNDM/தனியார் தொழில்
தொ.இ: G/3842

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 12 சூரி செவ் 2 இல்
உயரம்: 4'11"
தகைமை/தொழில்:A/L/ சொந்த தொழில்
தொ.இ: G/3852

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 31
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/3858

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015/ 2016 ஆம் ஆண்டுக்கான புதுமுக மாணவர்களுக்கான வருடாந்த விளையாட்டுப்போட்டி பிற்போடப்பட்டது.**

இம்மாதம் 20, 21 மற்றும் 22 ஆகிய திகதிகளில் நடைபெறவிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 2015/2016 ஆம் ஆண்டுக்கான புதுமுக மாணவர்களுக்கான பீடங்களுக்கிடையிலான வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது.

பதிவாளர்

(சி/7303)

# பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து அபிவிருத்திப் பணிக்கு பொருட்கள்



சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது. குறித்த நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. 2016ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட நிதியிலிருந்து இராஜாங்க அமைச்சரி னால் கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் 1325000 ரூபா பெறுமதியான அபிவிருத்தி பணிகள் முன்னெடுக்கப் பட்டிருந்தன. அந்த வகையில் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பொது அமைப்புகளிற்கான பொருட்கள் இராஜாங்க அமைச்சரினால் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி பொன்னகரில் அமைந்துள்ள சிவபாதகலையகம் பாடசாலையில் 4 இலட்சம் பெறுமதியில் சிறுவர் பூங்கா அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)




# இரணைமடுக்குள அபிவிருத்திப் பணிகளை பார்வையிட்டார் அமைச்சர் பைஸர் முஸ்தபா





கிளிநொச்சிக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா இரணைமடு பிரதான வீதியில் அமைந்துள்ள பாலம் ஒன்றை திறந்து வைத்ததுடன் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி பணிகள் இடம்பெற்றுக்கொண்டுள்ள கிளிநொச்சி இரணைமடுக் குளத்தையும் சென்று பார்வையிட்டார்.

இதில் பாராளுமன்ற உறுபபினர்களான அங்கஜன் இராமநாதன், கே.கே.மஸ்தான், வடக்கு மாகாண போக்குவரத்துத்துறை அமைச்சர் டெனீஸ்வரன், மாகாண சபை உறுப்பினர்களான பசுபதிப்பிள்ளை, அரிய ரத்தினம், தவநாதன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் எந்திரி சுதாகரன் மற்றும திணைக்களங்களின் தலைவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.(2-312)

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக மன்னாரில் கண்டன ஆர்ப்பாட்டம்

(மல்லாவி)

இந்தியாவின் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தடையை நீக்கக்கோரி நடைபெற்று வரும் போராட்டத்திற்கு ஆதரவாக மன்னார் மாவட்டத்திலும் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப் பாட்டம் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கண்டன ஆர்ப்பட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைச் சந்தியில் நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-15)

# முன்னறிவித்தலின்றி பொருட்கள் பறிமுதல் வீதிக்கு குறுக்காக படுத்து தர்ணா போராட்டம்





வவுனியா நகரசபை அதிகாரிகள் நடைபாதை வியாபாரிகளின் பொருட்களை முன் அறிவித்தல் இல்லாமல் பறிமுதல் செய்ததால் வியாபாரிகள் வீதிக்கு குறுக்காக படுத்து தர்ணா போராட்டம் செயத சம்பவம் நடைபெற்றது. குறித்த போராட்டம் நேற்று வவுனியா இலுப்பையடியிச் சந்தியில் நடைபெற்றது.

இச்சம்பவம் குறித்து தெரிய வருவதாவது.

நடைபாதை வியாபாரிகளை அகற்றும் பணியை மேற்கொண்ட நகரசபை அதிகாரிகள் இலுப்பையடிச் சந்தியில் நடைபாதை வியாபாரத்தில் ஈடுபட்ட வியாபாரிகளின் பொருட்களை முன்னறிவித்தலின்றி அள்ளிச் சென்றதால் கவலை அடைந்த வியாபாரியொருவர் வீதிக்கு குறுக்காக படுத்து தனது பொருட்களை திருப்பிக்கொடுக்கும்வரை எழுந்திருக்க போவதல்லையென தெரிவித்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார். அவருக்கு ஆதரவாக மற்றொரு வியாபாரியும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இது குறித்து கருத்து தெரிவித்த அவர்,

கடந்த காலங்களில் தொடர்ச்சியாக நகரசபை அதிகாரிகள் தங்கள் வியாபாரப் பொருட்களை அள்ளிச் செல்வதில் குறியாக இருப்பதாகவும் வியாபாரம் செய்வதற்கு ஒரு இடம் ஒதுக்கித் தருவதற்கு முன்வராத நகர சபை அதிகாரிகள் ஏன் இவ்வாறு செய்கிறார்கள் என அவர்கள் கேள்வியெழுப்புகின்றனர். நடைபாதையில் செய்யும் வியாபாரத்தை நம்பித்தான் தங்கள் வாழ்வாதாரம் இருப்பதுடன் குழந்தைகளை படிக்க வைப்பதற்கு இந்த வியாபாரத்தை தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லையென தெரிவித்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்த போக்குவரத்து பொலிஸார் போராட்டம் செய்தவருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் பொருட்களை நகரசபை அதிகாரிகளிடமிருந்து பெற்றுத்தருவதாக வாக்குறுதி அளித்ததுடன் போக்குவரத்தையும் சீர்செய்தனர். (2-250)

# பாடசாலையில் ஆபத்தான கட்டடங்களில் மாணவர்கள் கல்வியைத் தொடர்கின்றனர் பெற்றோர் சுட்டிக்காட்டு

முல்லைத்தீவு மாவட்டத்தின் மு/ கலைமகள். வித்தியாலயத்தில் பல கட்டடங்கள் மிகவும் பழைமை வாய்ந்ததாகவும் ஆபத்தான நிலையிலும் காணப்படுவதால் மாணவர்கள் பெரும் அச்சத்துடனேயே அக் கட்டடங்களுக்குள் தமது கல்வியை தொடர்ந்து வருகின்றனர் என பெற்றோர் அச்சம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பாடசாலையில் தரம் ஒன்று முதல் தரம் 11 வரையான சுமார் 700 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் இப்பாடசாலையில் காணப்படும் கட்டட வசதிகளைப் பொறுத்த மட்டில் பெரும் பற்றாக்குறையாகவும் அதே நேரம் தற்போது காணப்படும் வகுப்பறைகள் சில மிகவும் ஆபத்தான கட்டடங்க ளிலேயே இயங்கிவருவதால் மாணவர்கள் நாளாந்தம் பெரும் ஆபத்துக்களை எதிர் நோக்குவதையும் அவதானிக்க முடிவதாக பெற்றோரும் சமூக ஆர்வலர்களும் சுட்டிக் காட்டுகின்றனர்.

மாணவர்கள் பாதுகாப்பான சூழலில் கல்வியை தொடர்வதற்கு சிறந்த கட்டடங்களை அமைத்துத் தருமாறு பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் ,சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# கழுத்தில் கட்டி விளையாடிய கயிறு இறுகி சிறுவர்கள் காயம்

வவுனியா பாரதிபுரம் ஐம்பதாவது வீட்டுத்திட்டம் பகுதியில் வசித்துவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள் இருவர் விளையாட்டிற்கு மரத்தில் கயிறுகளைப் போட்டு கழுத்தில் கட்டி விளையாடிக்கொண்டிருந்த போது எதிர்பாராமல் இருவரின் கழுத்தில் கயிறு இறுக்கி கழுத்தில் காயங்களுடன் அயலவர்களின் உதவியுடன் நேற்று முன்தினம் பிற்பகல் 5.30 மணியளவில் மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

பாரதிபுரம் ஐம்பதாவது வீட்டுத்திட்டம் பகுதியில் வசித்துவரும் குறித்த சகோதரர்கள் இருவரின் தாய் வெளிநாட்டில் பணிப் பெண்ணாக பணியாற்றி வருகின்றார்.தந்தை வேலைக்குச் சென்றுள்ளார். இருவரும் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார்கள்.

இருவரும் மரத்திற்கு கயிறுகளை போட்டு அதனை தமது கழுத்தில் கட்டி விளையாடிக்கொண்டிருந்தபோது எதிர்பாராமல் கயிறு கழுத்துப் பகுதியில் இறுகி இருவருக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. குறித்த சிறுவர்கள் இருவர்களின் கூக்குரலினையடுத்து அயலில் உள்ளவர்கள் சென்று இருவரையும் மீட்டனர்.

12 மற்றும் 13வயதுடைய இரு சிறுவர்களே இவ்வாறு விளையாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது விபரீதத்தை எதிர்கொண்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-250)






வவுனியா பூந்தோட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களினால் அமைக்கப்பட்ட ஆறுமுக நாவலர் சிலை திறப்பு விழா நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்ட போது... (படங்கள்:- குருமன்காடு செய்தியாளர்)

# கமநல அபி. திணைக்களத்திற்குச் சொந்தமான குளத்துக் காணியில் அத்துமீறி பாதை அமைப்பு

## உதவி ஆணையாளரின் தலையீட்டையடுத்து முறுகல் நிலை





(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவின் கீழ் காணப்படும் மாங்குளத்தில் பொதுமகன் ஒருவர் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான குளத்துக் காணியில் அத்துமீறி பாதை அமைத்ததையடுத்து முறுகல் நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவின் கீழ் காணப்படும் மாங்குளத்தில் பொதுமகன் ஒருவர் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு சொந்தமான குளத்துக் காணியில் அத்துமீறி பாதை அமைத்ததையடுத்து, அதனை நிறுத்துமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தினால் இரண்டு தடவைகள் கடிதம் மூலம் உத்தியோகபூர்வமாக அறிவித்தல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த பொதுமகனால் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு இப் பாதையை ஒரு சில வாரங்களில் அப்புறப்படுத்துவதாக பதில் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

எனினும் குறித்த பாதை அகற்றப்படாததையடுத்து நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் சம்பவ இடத்திற்கு விரைந்து குளத்தினுள் பொதுமகன் ஒருவரால் அமைக்கப்பட்ட பாதையினை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, பொதுமக்கள் ஒன்றுதிரண்டு அப்புறப்படுத்துவதை நிறுத்துமாறு தெரிவித்தனர். இதனால் அவ்விடத்தில் சற்று பதற்ற நிலை காணப்பட்டது. இதனையடுத்து செட்டிகுள பொலிஸாரின் தலையீட்டால் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் ஆர்.விஜயகுமார் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதாக தெரிவித்து அவ்விடத்தில் இருந்து சென்றுள்ளார்.

அத்துடன் செட்டிகுள பிரதேச பிரிவில் காணப்படும் முல்லைக்கல் குள காணியிலும் அடாத்தாக பாதை அமைத்து கொண்டிருந்த நிலையில் அதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறும் கோரி கமநல சேவைகள் திணைக்கள உத்தியோகத்தரால் செட்டிகுள பொலிஸில் 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 83 ஆவது பிரிவின் கீழ் முறைப்பாடும் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# மாங்குளம் ஏ-9 வீதியில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

ஜப்பானிய அரசாங்கத்தின் 35 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் யூ.என். ஹபிராட் நிறுவனத்தின் அனுசரணையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட மாங்குளத்தின் ஏ-9 வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபத் திறப்பு விழா நிகழ்வு மாங்குளம் கிராம மட்ட பொது அமைப்புகளின் ஒழுங்குபடுத்தலில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு பொது நோக்கு மண்டபத்தை திறந்து வைத்துள்ளார்.

இதில் பாடசாலைகளின் அதிபர்கள், பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் கிராம மட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த பொதுநோக்கு மண்டபத்தில் மாங்குளம் கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அலு



வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் யதுகுசிங் - அனுருத்தனன் வலர் அலுவலகம் உட்பட கிராமமட்ட பொது அமைப்புகளின் செயற்பாடுகளும் நடைபெற்றுள்ளதாக கருத்துரையாற்றும் போது பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2-15-281)

# 85 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் பிரதான வீதிகளுக்கு காப்பெற் பணிகள்



அமைச்சர் றிசாத் பதியுதீனின் 85 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வேப்பங்குளம், பிச்சை வாணிபக்குளம், அளக்கட்டு ஆகிய கிராமங்களுக்கான பிரதான வீதிகளை காப்பெற் வீதியாக புனரமைப்புச் செய்யும் வேலைத் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை அமைச்சர் றிசாத் பதியுதீனின் இணைப்புச் செயலாளரான எம்.முஜாஹிர் தலைமையில் நடைபெற்ற போது வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் றிப்கான் பதியுதீன் வைபவரீதியாக வீதிப் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந்த வீதிப் புனரமைப்பு வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வில் முசலி பிரதேச சபையின் முன்னாள் வேட்பாளர் எம்.றிபாயி, பள்ளி வாசல் நிர்வாகிகள் மற்றும் கிராம மக்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (2-15)

# ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் யானைகளின் அட்டகாசம் அதிகம்

## மாலை நேரங்களில் அச்சத்துடன் பயணிப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்

(பனிக்கன்குளம்)



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்து காணப்படுவதாலும் வீதியில் கூட்டம் கூட்டமாக நிற்பதாலும் அச்சத்தில் பயணிக்க வேண்டியுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக் கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் அண்மைய நாட்களாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் மாலை மூன்று மணிக்கே யானைகள் வீதி ஓரத்தில் நடமாடுவதாகவும் வீதியில் செல்பவர்களை விரட்டுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்

வேலைகளின் நிமித்தம் செல்லும் பெண்கள் மீண்டும் வீடுதிரும்பிச் செல்லும்வேளையில் அச்சத்துடன் செல்வதாகவும் வீதியோரம் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-281)




# யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

யெகோவாவின் சாட்சிகளின் மாநாடு நாளை கண்டி வீதி கிளிநொச்சியில் உள்ள கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இம் மாநாடு "எப்போதும் யெகோவா மீது அன்பு காட்டுங்கள்" எனும் தலைப்பில் இடம் பெறும். இந்த மாநாட்டின் குடும்பங்களுக்கு, இளைஞர்களுக்கு, பெற்றோர்களுக்கு, பிள்ளைகளுக்கு என அனைத்துதரப்பினர்களுக்கும்தேவையான தகவல்கள் அடங்கிய பைபிள் சொற்பொழிவுகள் வழங்கப்படும். இந்த மாநாட்டின் முக்கிய பைபிள் சொற்பொழிவு "கடவுள்மேல் அன்பு காட்டுகிறவன் தன் சகோதரன் மேலும் அன்பு காட்ட வேண்டும்" என்பதாகும். (2)

# உள்ளூராட்சி எல்லை நிர்ணய மீளாய்வு குறித்து பைசர் முஸ்தபாவிடம் த.தே.கூ. எடுத்துரைப்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச சபைக்கான உள்ளூராட்சி எல்லை நிர்ணயத்தில் நிலவும் குறைபாடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எடுத்துரைத்துள்ளது.

வவுனியா வடக்கு கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொழில்நுட்ப ஆய்வுகூட திறப்பு விழாவுக்கு வருகை தந்த அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் இந்தக் கோரிக்கையை தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் முன்வைத்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட குழுக்களின் பிரதித் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் மற்றும் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சரின் சார்பில் அவரது பிரத்தியேக செயலாளர் சத்தியசீலன் அடங்கிய குழுவினர் இந்தக்கோரிக்கையை அமைச்சரிடம் முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வடக்கு பிரதேச சபையுடன் புதிதாக நான்கு வட்டாரங்கள் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குள் காணப்படும் சிங்களக் குடியேற்றக் கிராமங்களை உள்ளடக்கிய நான்கு வட்டாரங்கள் கடந்த அரசாங்கத்தினால் வவுனியா வடக்கு பிரதேச சபையின் கீழ் இணைக்கப்பட்டிருந்தன.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தின் நிர்வாக பிரதேசத்துடன் நேரடியாக தொடர்புபடாத நிர்வாக ரீதியாக முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இந்தக்கிராமங்களின் உள்ளூராட்சி மன்றம் வவுனியா மாவட்டத்துடன் இணைக்கப்பட்டிருந்தது.

இதனால் நிர்வாக ரீதியில் பாரிய பிரச்சினையை மேற்படி வட்டாரங்கள் எதிர்நோக்கியிருந்த நிலையில் வடக்கு பிரதேச சபையின் 47ஆவது அமர்வில் தாங்கள் வவுனியா வடக்கிலிருந்து பிரிந்து செல்ல சம்மதிப்பதாக தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# 'சமாதான நல்லிணக்க செயற்றிட்டம்'

# அனைத்து கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும்

## முள்ளியவளை பொலிஸ் பொறுப்பதிகாரி கோரிக்கை

கரித்தாஸ்கியூடெக்வன்னி நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சமாதான நல்லிணக்க செயற்றிட்டமானது முல்லைத்தீவு மாவட்டத்தின் குறித்த சில கிராமங்களில் மட்டுமல்லாது மாவட்டத்தின் அனைத்து கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என முள்ளியவளை பொலிஸ் நிலையத்தினுடைய பொறுப்பதிகாரி நமேஸ் ரத்தினசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி நிகழ்ச்சித்திட்டத்திற்கமைவாக முள்ளியவளை வடக்கு கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற சர்வமதத்தினரும் இணைந்து கொண்டாடிய பொங்கல் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்ச்சி திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் கரித்தாஸ் அவுஸ்திரேலியா நிறுவனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளான மைக்கல், பிரைங் ஆகியோரிடமும் கரித்தாஸ் கியூடெக் வன்னி நிறுவனத்தின் இயக்குநரிடமும் அவர் மேற்கண்டவாறு கோரிக்கையை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது. (2-310)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–103

# உவர் நீரும் நன்னீரும்; நீரின்றி இவ்வுலகம் ஏது?



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினியஉறவுகளே!

உலகம் சிறக்கநீர் இன்றியமையாதது ஆகும். நீர் இன்றி உயிர்கள் ஏது? நாம் வாழ அத்தியாவசியமானதும் அவசியமானதும் நீர் ஆகும். பூமிப் பந்தின் மூன்றில் இரண்டு பங்குநீராலானது. ஆனாலும் நாம் பயன்படுத்துவதற்கு ஏற்றநீர் சிறிய அளவே ஆகும். உலகில் நீருக்காக நாடுகளுக் கிடையேயும் நாடுகளுக்குள்ளேயும் போர்கள் நடைபெற்றிருக்கின்றன. மனிதன் வாழுவதற்கு அடிப்படையில் தேவையானதும் இயற்கை எமக்குத்தந்த பொக்கிஷங்களிலும் நீர் கொண்டுசெல்வதுடன் இப்படியாக ஒரு இக்கட்டில் நாம் எல்லோரும் சேர்ந்து என்ன செய்யலாம் என்பதனையும் கவனத்திற் கொள்ளவும் வேண்டும். வீடுகளில்,கிராமங்களில், நகரங்களில் இன்னும் அலுவலகங்களில் எவ்வாறான நீர் முகாமைத்துவத்தை பயன்படுத்தலாம் என்பதனைப் பற்றி நாம் முன்கூட்டியே தீர்மானித்து மக்களை அதன்படி வழிநடத்தவேண்டும். பேரிடர் எம்மை நோக்கி வருகின்றது எனத் தெரிந்தும் நாம் அதற்கு எம்மை தயார்ப்படுத்த வில்லை எனில் நாம் வேறென்ன செய்யப் போகின்றோம். பலரையும் ஒன்று சேர்த்து எமக்கான இயக்கமாக நாம் முன்னிற்கவில்லையெனில் வழிவகைகளையும் விரைந்து பலமட்டங்களில் கண்டாக வேண்டும். மழையாக வருகின்ற நீரினை நிலத்தினுள் உட்புகவைப்பதற்கு மரங்கள் அவசியமானதாகும். மரங்கள் அதிகமாக இருக்கின்ற பூமியில் நீரின் ஏந்துகை அதிகமாகவும் அந்தநீர் நன்னீராகவும் குடிப்பதற்கு உகந்ததாகவும் அமைகின்றது. குடிநீருக்கே பஞ்சம் வந்துவிடுமே என்னும் அளவிற்கு நாம் அங்கலாய்க்க வேண்டிவரும் என்பதனை கவனத்திற் கொள்ளல் அவசியமாகின்றது.


வடமாகாணத்தில் மரம் நடுகையை ஊக்குவிப்பது நல்லது. இம்மாகாணத்தில் மரம்நடுகைவாரம்,மாதம் என டுக்கப்படுகின்ற நீருக்கு மாற்றீடாக மண்ணின் உள்ளேயிருக்கும் நீர் வில்லையிலிருந்து கிணற்றுக்குநீர் வந்தாலொழிய கிணற்றுநீரின் மட்டத்தை எவ்விதத்திலும் நாம் சமனாக்க முடியாது. எனவே கிடைக்கின்ற மழைநீரை இயன்றளவிற்கு வீணாக கடலுக்கு செல்லவிடாது அதனை எமது மண்ணுக்குள்ளேயே பிடித்து வைத்திருத்தல் வேண்டும். இதற்காக கடற்கரை யோரங்களில் பல அளவுகளில் மண்திட்டுக்கள் இருப்பது இதனை உறுதிசெய்வதாக இருக்கும். எமது வீடுகள் மற்றும் பொது இடங்களில் நீரை நிலத்துக்குள் விடுவதற்கான ஆண்டுகள் பல பயிர்வகைகளுக்கு பயன்படுத்துவதற்கு ஏதுவாயிருக்கும். ஒவ்வொரு பயிருக்கும் அதற்கேற்ற நீர்த்தேவை உள்ளது. அதனை சரியாக கணிப்பிட்டால் தேவையான நீரினை அந்தப் பயிர்களுக்கு வழங்கமுடியும். இதன் மூலம் நீரினை நாம் மிகவும் வினைத்திறனாக

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 119

மிகமுக்கியமானது ஆகும். அண்டை நாட்டில் காவிரிப் பிரச்சினை தொடங்கி எமது நாட்டில் எழுந்த நீர்ப்பிரச்சினை வரை அனைத்துமே வேறுபல விளைவுகளை ஏற்படுத்தியிருந்தமையையும் நாம் அனுபவத்தில் பார்த்திருக்கின்றோம். நீருக்கான இந்த போட்டியில் யார் வெற்றி பெறுகின்றார் என்பது முக்கியமல்ல. அனைவருக்கும் நீரை கிடைக்கவழி செய்யப்பட்டுள்ளதா என்பதுவே முக்கியமானது. குடிநீருக்கான பணம் கொடுத்து போத்தலில் பெறவேண்டிய அளவுக்கு எமது வாழ்வாதாரம் நகர்த்தப்பட்டிருக்கின்றது என்பதனை நாம் இன்னும் நம்ப மறுக்கின்றோம்.

இந்த ஆண்டு (2017) நீர் ப்பற்றாக்குறை ஏற்படும் என பல ஆருடங்கள் கூறியிருக்கின்றன. இந்நிலையில் எமது நாடு இந்த நீர்ப்பற்றாக்குறையை எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்பது பற்றி பல மட்டங்களிலும் கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளுக்கு ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. இது ஒரு தேசத்தின் பிரச்சினையாக மட்டுமல்லாது மக்கள் மயப்பட்ட பிரச்சனை.

எனவே இதனை எதிர்வு கொள்வதற்கு மக்களை அவசியம் தயார்ப்படுத்தல் வேண்டும். பணியாளர்கள், மாணவர்கள், விவசாயிகள் எனப் பலரினதும் உதவிக்கரங்களைப் பெற்று இந்த செய்தியை மக்களுக்கு அவசியம்



எம்மால் எதனையும் சாதிக்கமுடியாது.

நீர்த்தட்டுப்பாடு எழும் போது நாம் விரைந்து நாடுவது வேறுவகையில் எவ்வாறு நீரைபெறலாம் என்பது மட்டுமே. மாறாக இதனை நீண்டநோக்கில் கவனித்தால் அதன் அர்த்தம் இலகுவாகப் புரியும். எமது பிரதேசத்தில் நாம் எதிர்நோக்குகின்ற பாரிய பிரச்சினையான நீரினைப்பற்றி இன்னும் பலமாக நாம் கலந்துரையாடல் அவசியமாகின்றது. இந்தவகையில் கிடைக்கின்ற நீரினைநாம் சேமித்து எமது பூமியை குளிரவைக்கும் கைங்கரியத்தை ஒவ்வொருவரும் கடைப்பிடிக்க ஆரம்பித்தால் நிச்சயமாக இதற்கான தீர்வாக அது அமையும். மக்கள் எந்த பிரச்சினைக்கும் தம்மை இணைத்து பழக்கிக் கொண்டவர்கள். ஆதலினால் இந்த நீர்ப்பிரச்சினைக்கு உடனடியாக இலகுவாக பிரச்சினையை தீர்க்க கொண்டாடப்படுவது இதனை மேலும் ஊக்குவிக்கின்றது. மேலும் மரம் நடுகையினை வருடம் முழுவதுமே மேற்கொள்ள முடியும். மரங்கள் செறிந்த பூமிவளங்கள் நிறைந்த பூமியாகும். இதனைக் கருத்திற் கொண்டு நாம் மரநடுகையை பரந்துபட்ட அளவில் அனைத்து இடங்களிலும் முன்னெடுக்க வேண்டும்.

மழைமூலம் கிடைக்கின்ற நீரில் 35 வீதம் கடலுக்கு வீணாகப் போகின்றது எனவும் அதேநேரத்தில் 37 வீதம் ஆவியாக மேலே செல்கின்றது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆவியாக செல்வதனை தடுக்க முடியாவிட்டாலும் மழைமூலமாக கிடைக்கின்ற நீரை அநியாயமாக கடலுக்கு செல்லவிடாது நாம் தடுத்து அந்தநீரை உள்ளுக்குள் உள்ள நீர்நிலைகளை செப்பனிட்டு சேமித்துவைத்தால் அதன் அருகிலுள்ள கிணறுகளில் நீரின் மட்டத்தை சீராக வைத்திருப்பதற்கு அது உதவும். கிணற்றிலிருந்து வெளியெ வழிவகைகளைந ாம் ஏற்படுத்திக்கொண்டாலன்றி எதிர்காலத்தில் நீருக்கான தட்டுப்பாட்டைநாம் நிவர்த்தி செய்யமுடியாமல் போய்விடும். பாதையோரங்களில் நீர் வழிந்தோடி மண்ணுக்குள் செல்வதற்கான வழிவகைகளையும் நாம் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.இருக்கின்ற பலவகையான தொழில்நுட்பங்களை இயன்றளவு நாம் பயன்படுத்த முயற்சிசெய்தல் வேண்டும்.இளையவர்களை இதற்காக நாம் தயார்ப்படுத்தல் வேண்டும். வயது, பால்,சாதி மொழி மற்றும் இனவேறுபாடின்றி அனைவரும் இணைய வேண்டியதாக இந்த இடர் முகாமைத்துவம் எம்மை குறித்து நிற்கின்றது. அனைவரும் இணைந்தால் முடியாதது எதுவும் இல்லை.

விவசாயத்தில் நீர்முகாமைத்துவத்தை நாம் இன்னும் கவனமாக ஆராயலாம். நீரைப் பயன்படுத்துவதில் நீர்பாய்ச்சுதலில் முக்கிய கவனம் செலுத்துதல் நல்லது. பயிர்களுக்கான பாத்திமுறை நீர்ப்பாய்ச்சுதலை குறைத்து அல்லது தவிர்த்து நுண்நீர்ப்பாசன முறைகளில் கவனஞ் செலுத்தலாம். தூவல் மற்றும் விசிறல் நீர்ப்பாசனமுறைகளை இதற்காக நாம் பயன்படுத்தலாம். இதன் மூலம் நீரை தேவையான ளவுக்கு பயிர்களுக்கு பயன்படுத்துவதோடு வினைத்திறனாகவும் பயன்படுத்த முடியும். நுண்ணீர்ப்பாசன முறைகளை சரியான தொழில்நுட்ப அறிவுடன் பயன்படுத்துவது இன்னும் அதனை தொடர்ச்சியாக பல பயன்படுத்தமுடியும். இனிவருங்காலத்தில் நீரின் தேவை அதிகரிக்கும் போதும் நீரினை எளிமையாக பயன்படுத்த முனையும் போதும் இத்தகைய நுண்ணீர்ப்பாசன முறைகளை நாம் அவசியம் பயன்படுத்த வேண்டும்.

பாடசாலைகளில் குடிநீர் பற்றியும் அதனை எவ்வாறு பயன்படுத்துவது பற்றியும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு தெளிவுபடுத்தலாம். மாணவர்களை பயன்படுத்தி மக்களுக்கு விளக்கமளிக்க கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தலாம். பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல பல்கலைக்கழக மாணவர்களையும் இதற்காக பயன்படுத்தலாம். இது எமக்கான பிரச்சினை நாமே இந்த பிரச்சினையை எதிர்வு கொள்ள வேண்டும். எவ்வாறு எதிர்வு கொள்ளலாம் எனத் திட்டமிட்டு நாம் செயலாற்ற வேண்டும்.

மனிதனின் அன்றாட தேவைகளுள் ஒன்றான நீருக்காக் வரக்கூடிய எந்தப் பிரச்சினையையும் எதிர்வுகொள்ள இயக்கமொன்றை ஆரம்பிப்பதற்கான தருணமிது. இதன் மூலம் நாம் வரவிருக்கும் பேரிடரை துணிந்து எதிர்வு கொள்வோம். இது உறவுகளை அவர்களின் உயிர்களை வாழவைக்கும் தருணம். எம்மால் இது முடியும் என்று நாமும் இதனை துணிந்து எதிர்வு கொண்டு இவ்வருடத்தில் வரவிருக்கின்ற பேரிடர்களை எதிர்வு கொள்ள தயாராவோம்.

# தாய், தந்தையரின் கல்லறைகளை புனரமைத்த கோத்தா! படையெடுத்த விசாரணைப்பிரிவினர்

மெதமுலனவில் அமைந்துள்ள மகிந்தவின் தந்தை "டி.ஏ.ராஜபக்ஷ அருங்காட்சியகம்" மற்றும் அதனை அணமித்துள்ள பகுதிகளில் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.


பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மற்றும் அரச மதிப்பீட்டு அதிகாரிகள் இணைந்து நேற்று முன்தினம் காலை குறித்த பகுதியை சோதனையிட்டுள்ளனர்.

இறுதி மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே இந்த தேடுதலை முன்னெடுத்திருந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

"வீரகெட்டிய திட்டம்" என்ற பெயரில் திட்டமொன்றை ஆரம்பித்து தமது தாய் ,தந்தையரான டி.ஏ. ராஜபக்ஷ தம்பதிகளின் கல்லறைகளைப் புனரமைத்தல் மற்றும் அருங்காட்சியகமொன்றை நிர்மாணிப்பதற்காக 9 கோடி ரூபா செலவிடப்பட்டதாக கடந்த காலத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த விசாரணைகளுக்காகவே இந்த சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கோத்தபாய ராஜபக்ஷ பாதுகாப்பு செயலாளராக செயற்பட்ட காலப்பகுதியில் அந்த அமைச்சுக்கு சொந்தமான காணிகளை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக குறித்த நிதி ராஜபக்ஷ அமைப்பிற்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)



கேலிச்சித்திரம்

# ஜல்லிக்கட்டு எழுச்சிப்பேரணி தமிழரின் தன்மானப்புரட்சி!

## அமைச்சர் மனோ ஆதரவு

(கொழும்பு)

**ஜல்லிக்கட்டு தடையை தமிழ் கலாசாரத்தின் மீதான தாக்குதலாகவே உலகம் முழுக்க வாழும் தமிழர்கள் பார்க்கிறார்கள். ஜல்லிக்கட்டு எழுச்சிப் பேரணி தமிழரின் தன்மானப் புரட்சி என்பதை இந்திய அரசு புரிந்துகொள்ள வேண்டும் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சரும் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**



தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கான மாணவர்க ளால் மெரினா கடற்கரையை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்டு வரும் ஜல்லிக்கட்டு தொடர்பான அமைதி போராட்டத்தை பற்றிய கருத்துகளை தனது முகநூல், டுவிட்டர் தளங்களில் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தொழிற்சாலைகளில் மிருக வளர்ப்பு, தோலுக்காக மிருகங்களை வேட்டையாடுவது, தந்தத்துக்காக யானைகளை கொல்வது, பிராணிகளில் நிகழ்த்தப்படும் பரிசோதனைகள் என்ற வரிசையில் ஜல்லிக்கட்டை பார்க்கக்கூடாது. அப்படியானால் உலகில் மாமிச உணவை தடை செய்ய வேண்டும். மிருகக்காட்சிசாலைகளையும் மூடிவிட வேண்டும்.

ஸ்பெயின் நாட்டில் உருவாகி இன்று தென் அமெரிக்க நாடுகளிலும் நடைபெறும் மாட்டுச்சண்டை (BULL-FIGHT) என்பதற்கும், ஜல்லிக்கட்டுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை "பீட்டா" (PETA) போன்ற விலங்குரிமை அமைப்புகள் புரிந்து கொண்டு, அவசியமானால் புதிய நெறிமுறைகளை உருவாக்க ஒத்துழைக்க வேண்டும். ஜல்லிக்கட்டை இன்னமும் நெறிப்படுத்தி, காளைகளுக்கு துன்பம் விளைவிக்கப் படக்கூடிய உத்தேச சந்தர்ப்பங்களுக்கு எதிராக முன்னர் உருவாக்கப்பட்ட விதிகளை இன்னமும் நவீனப்படுத்தி அமுல் செய்து, ஜல்லிக்கட்டை அனுமதிப்பதையே இன்று இந்திய அரசு செய்ய வேண்டும்.

சமூக ஊடகங்களின் மூலம் தகவல்களை உடனுக்குடன் பெறும் உலக தமிழர்கள், இன்று ஜல்லிக்கட்டு சாத்வீக போரில் குதித்துள்ள தமிழக மாணவர்களை, தன்மான தமிழ் சின்னங்களாக பார்க்க தொடங்கி விட்டார்கள் என்றும், ஜல்லிக்கட்டு என்ற விவகாரம், இன்று உலகெங்கும் தமிழரின் தன்மான புள்ளி ஆகிவிட்டது என்றும், ஆகவே அதில் கைவைப்பவர்கள், யாராயினும் இனி கொஞ்சம்மாற்றியோசிக்க வேண்டும் என்றும் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.(இ-3)

## ஹெரோயின் வைத்திருந்த அரச ஊழியர் கைதானார்!

தியத்தலாவ பகுதியில் அரச ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு தொடர்பிலேயே குறித்த ஊழியர் கைது செய்யப்பட்டுள்ளார். மொனராகலை பிரதேச த்தை சேர்ந்த ஊழியரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரும் அவரது மனைவியும் அரச ஊழியர்கள் என்றும் இருவரும் தியத்தலாவ பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு தங்கியுள்ளனர் எனவும் பொலி ஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபரிடம் இருந்து 93 பைக்கற்றுக்கள் ஹெரோயின் கைப்பற்றப் பட்டுள்ளது.சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் 27-ம் திகதி

யாழ்ப்பாணம் தமிழ்ச்சங்கம் நடத்தும் சி.வை.தாமோதரம்பிள்ளை நினைவரங்கம் எதிர்வரும் 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்குயாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.யாழ்ப்பாணத்தமிழ்ச்சங்கத்தலைவர் பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## பாடசாலைப் பிள்ளைகளே பேண்தகு அபிவிருத்தியின் சமூகப் பொறுப்புடைய யதார்த்த செய்தியாளர்கள் ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

பாடசாலைப் பிள்ளைகளே பேண்தகு அபிவிருத்தியின் சமூக பொறுப்பு மற்றும் கடமைகளை நிறைவேற்றும் செயற்பாட்டில் உண்மையான செய்தியாளர்கள் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முற்பகல் திகன, கெங்கெல்ல மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற "பேண்தகு அபிவிருத்தி பாடசாலைக் கழகங்களை நிறுவும் செயற்திட்ட" ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்துக்காக உடனடியாக செயற்பட வேண்டிய காலம் இதுவே என்பதனால் எம்மால் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் தாமதமின்றி மேற்கொள்ளப்பட வேண்டுமென தெரிவித்த ஜனாதிபதி , பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை ஒரு போதும் ஒத்திப் போடக் கூடாதெனவும் தெரிவித்தார்.

அபிவிருத்தியை நோக்கிய செயற்பாடுகளின் போது பூமி வெப்பமடைந்து, வளிமண்டலம் மாசடைந்து மனித சமூகத்துக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது, எமக்கு எச்சரிக்கை விடுக்கும் மற்றும் ஆலோசனை வழங்கும் உலக வல்லரசுகளே எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி இயற்கை மற்றும் சுற்றாடல் பெறுமானங்களை மதிக்காமல் அவர்கள் செயற்படுவதனால் மனிதர்கள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ்வதில் பெரும் சவாலுக்கு முகம்கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

சுற்றாடல் வளத்தை பாதுகாக்கும் நாடாக மாறுவதாயின் எமது நாட்டின் வனப்பகுதிகளை ஆகக்குறைந்தது நூற்றுக்கு ஐம்பது வீதமாக அதிகரிக்க வேண்டுமென குறிப்பிட்ட ஜனாதிபதி நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்காவிட்டால் எமது எதிர்காலமும் பாரதூரமான சவாலுக்கு உள்ளாகும். அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பை கருத்திலெடுக்காமல் செயற்பட்ட அனைவரும் இதற்கான பொறுப்பை ஏற்க வேண்டுமெனவும் தெரிவித்தார். (இ-3)

# வாடிவாசல் திறக்கும் வரை வீடு-வாசல் திரும்பமாட்டோம்

## ஜல்லிக்கட்டு; போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள் திட்டவட்டம்

(டில்லி)

**வாடிவாசல் திறந்து காளைகள் சீறிப்பாயும் வரை வீடு வாசல் திரும்பமாட்டோம் என ஜல்லிக்கட்டு நடத்தக்கோரி போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இளைஞர்கள், மாணவர்கள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர்.**







இதேவேளை ஜல்லிக்கட்டு ஓரிரு நாட்களில் நடைபெறும் என உறுதியளித்துள்ள முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் போராட்டத்தை கைவிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இது இவ்வாறு இருக்க ஜல்லிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து தான் வகித்து வந்த தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் நிர்வாக குழு உறுப்பினர் பதவியை சமூக ஆர்வலரான கார்த்தி கேய சிவசேனாபதி இராஜினாமா செய்துள்ளார்.

தமிழக அரசு தரப்பிலிருந்து ஏதாவது அவசர நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே தீர்வு என்று சட்ட நிபுணர்கள் முதல்வரிடம் கூறியுள்ளனர்.

அப்போதுதான் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடக்கும். ஆதரவு போராட்டங்கள் ஓயும். இதைக் கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் டில்லியில் இருந்தபடியே, சென்னை தலைமைச் செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சில உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

இதற்கான சில நடவடிக்கைகளை டில்லியில் இருந்தபடியே செய்துமுடிக்கவும் திட்டமிட்டிருக்கிறார்.

இந்த நிலையில் ஜல்லிக்கட்டுக்கு அவசர சட்டம் கொண்டு வர தமிழகத்திற்கு அதிகாரம் உள்ளது என மூத்த சட்டத்தரணி முகுல் ரோத்தகி தெரிவித்துள்ளார்.


இனிமேல் எங்களுக்கு இந்தியன் என்ற அடையாளம் தேவையில்லை, நாங்கள் இனி தமிழர் மட்டுமே என்று கோஷமிட்டனர். கோஷமிட்டது மட்டுமின்றி இந்திய அரசு வழங்கிய ஆதார் அட்டைகள், வாக்காளர் அட்டைகள் ஆகியவற்றை தூக்கி எறிந்தனர். (இ-7)

# பந்து அபாயகரமானது என்பதால் கிரிக்கெட்டை தடை செய்வீர்களா?

## சத்குரு ஜக்கி வாசுதேவ் கேள்வி

(ஜெய்ப்பூர்)

கிரிக்கெட் பந்து அபாயகரமானது என்பதால் கிரிக்கெட்டைத் தடை செய்வீர்களா? என ஈஷா அறக்கட்டளை சத்குரு ஜக்கி வாசுதேவ் கேள்வி எழுப்பியுள்ளார்.



தமிழகத்தில் ஜல்லிக்கட்டு தொடர்பாக அவசர சட்டம் கொண்டுவர வேண்டும். பீட்டா அமைப்பைத் தடை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி. இளைஞர்கள் தமிழகம் முழுவதும் தொடர்ந்து 5ஆவது நாளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இது தொடர்பாக டில்லி சென்று பிரதமர் மோடியை தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்தார். எனினும் இந்த சந்திப்பின் மூலம் தீர்வு எதுவும் எட்டப்படவில்லை.

அவசர சட்டம் இயற்றப்படாத வரையில் தங்கள் போராட்டத்தைக் கைவிட மாட்டோம் என இளைஞர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் கிரிக்கெட்டைத் தடை செய்வீர்களா? என ஈஷா நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார்.

ஜெய்ப்பூரில் நேற்று முன்தினம் நடந்த நிகழ்ச்சியில் ஜக்கி வாசுதேவ் பேசும்போது. "கிரிக்கெட் பந்து ஆபத்தானது. இதனால் பல வீரர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது. அதனால் கிரிக்கெட்டைத் தடை செய்வீர்களா?" என கேள்வி எழுப்பியுள்ளார். (இ-7)

# ஜல்லிக்கட்டு தடைக்கு பீட்டா காரணமில்லை

## விளக்க அறிக்கை வெளியீடு

தமிழ்நாடு முழுவதும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாகவும், அமெரிக்காவின் பீட்டா தனியார் அமைப்புக்கு எதிராகவும் பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த போரட்டத்தில் மாணவர்கள். இளைஞர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அவசர தீர்மானம் கொண்டு வரப்பட்டு இன்னும் சில நாட்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்படும் என தமிழக முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இந்த எல்லா பிரச்சினைகளுக்கும் பீட்டா தான் காரணம் என கூறப்பட்டு வரும் நிலையில் அந்த அமைப்பு ஒரு முக்கிய அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது.

அதில். நாங்கள் ஜல்லிக்கட்டுக்கு தடை வாங்கும் மிருக வதைச் சட்டத்தை உருவாக்கவில்லை. இது தவறாக பரப்பப்படும் விஷம செய்தி ஆகும்.

மதுரையைச் சேர்ந்த நாகராஜன் என்பவர் தான் 2006இல் இந்த விளையாட்டுக்கு எதிராக முதலில் வழக்குத் தொடர்ந்தவர்.

பின்னர் இந்திய விலங்குகள் நல வாரியம் உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இவ்வழக்கில் நாங்கள் 2011இல் தான் இணைந்தோம். இவ்வாறு பீட்டா அமைப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது. (இ-7)

## மதுரையில் ஆர்ப்பாட்டம் நடத்த பெப்ரவரி 3ம் திகதி வரை தடை

தமிழகம் முழுவதும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடந்து வரும் நிலையில் மத்திய அரசால் எதுவும் செய்ய முடியாது என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந் நிலையில் மதுரையில் பெப்ரவரி 3ஆம் திகதி வரை 15 நாட்களுக்கு ஆர்ப்பாட்டமோ. ஊர்வலமோ நடத்த தடை விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மதுரையில் இலட்சக்கணக்கான மக்கள் போராட்டம் நடத்தி வரும் நிலையில் அரசின் இந்த அறிவிப்பு மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்தினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்என மதுரை நகர பொலிஸ் ஆணையர் சைலேஷ் குமார் யாதவ் தெரிவித்துள்ளார். மேலும் ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடத்த வேண்டுமெனில் ஐந்து நாட்களுக்கு முன் அனுமதி பெற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-7)

# விஸ்வரூபமெடுத்தது ஜல்லிக்கட்டு விவகாரம்

(சென்னை)

**தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடத்தக் கோரி இளைஞர்கள் மற்றும் பொது மக்கள் சார்பில் போராட்டம் நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் சாதாரணமாகக் கருதப்பட்ட போராட்டம் தற்போது விஸ்வரூபமெடுத்துள்ளது.**

இதன் காரணமாகவே தமிழக முதல்வரான பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் பிரதமரைச் சந்தித்து ஜல்லிக்கட்டு விவகாரம் தொடர்பாக அவசரச்சட்டம் கொண்டு வருவது குறித்து எடுத்து கூறியதாக தகவல்கள் வெளியாகின.

டில்லியில் பிரதமர் மோடியை சந்தித்து பேசிய பிறகு, உடனடியாக தமிழகம் திரும்பும் முடிவில் இருந்தாராம் முதல்வர்.பின்னர் கட்சி எம்.பிக்களிடம் தனியாக பேசும் போது, பிரதமரிடமிருந்து ஒரு சாதகமான பதில் கிடைத்துள்ளது. அதை தெரிந்து கொண்ட பிறகு தான் சென்னை திரும்ப நினைக்கிறேன் என்று சொன்னாராம்.

இதன் காரணமாக முதல்வர் சென்னை திரும்புவது தாமதமாகியுள்ளது.

அ.தி. மு.க எம்.பிக்களை செல்ல சொல்லிவிட்டு, முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சட்ட நிபுணர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

தமிழக அரசின் ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், தலைமை செயலாளர் கிரிஜா வைத்தியநாதன் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் முதல்வருடன் டில்லியில் முகாமிட்டிருக்கிறார்கள்.

உச்சநீதிமன்றம் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் சற்று கெடுபிடியாக இருக்கிறது. அதையே சுட்டிக்காட்டி மத்திய அரசும் கைவிரித்து விட்டது.

இந்த நிலையில், தமிழக அரசு தரப்பிலிருந்து ஏதாவது அவசர நடவடிக்கை எடுப்பதுதான் ஒரே தீர்வு என்று சட்ட நிபுணர்கள் முதல்வரிடம் கூறியுள்ளனர்.

அப்போதுதான் தமிழகத்தில் ஜல்லிக்கட்டு நடக்கும். ஆதரவு போராட்டங்கள் ஓயும் இதை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் டில்லியில் இருந்தபடியே, சென்னை தலைமைச் செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சில உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார்.

இதற்கான சில நடவடிக்கைகளை டில்லியில் இருந்தபடியே செய்துமுடிக்கவும் திட்டமிட்டிருப்பதாக கூறப்படுகிறது.

இதுபற்றி தலைமைச் செயலக உயர் அதிகாரி ஒருவர் கூறுகையில், சட்டசபையை கூட்டி அனைத்து உறுப்பினர்கள் ஆதரவுடன் சிறப்பு தீர்மாணம் கொண்டு வரலாமா என்று யோசித்ததாகவும், இந்த கருத்தை எதிர்க்கட்சித்தலைவர் மு.க.ஸ்டாலின் ஊடகங்களிடம் ஏற்கனவே கூறிவிட்டதால், அவர் சொல்லி இதை அரசு செய்ததாக அர்த்தமாகிவிடும் என்பதால், அந்த யோசனையை கைவிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அடுத்து, அமைச்சரவையை கூட்டி தீர்மானம் நிறைவேற்றலாமா என்று ஆலோசனை நடநததாகவும் அதுவும் வேணடாம் என்று பிறகு கைவிடப்பட்டது எனவும் கூறப்படுகிறது.

ஜல்லிக்கட்டு விளையாட்டை தமிழகத்தில் நடத்தலாம் என்று தமிழக அரசு தரப்பில் அவசரச் சட்டம் கொண்டுவருவது பற்றி ஆலோசனை தற்போது நடந்து வருகிறது என்றும் அவசர சட்டத்திற்கு முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் கையெழுத்திட்டாலே போதும். அதை ஜனாதிபதியின் ஒப்புதலுக்கு அனுப்புவது சம்பிரதாயம் தான் எனவும் அந்த சம்பிரதாயத்திற்காகத்தான், முதல்வர் டில்லியில் தங்கியிருக்கிறார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. (இ-7)

## ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக டுபாயில் தமிழர்கள் போராட்டம்



(டுபாய்)

டுபாயில் வசித்து வரும் தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அறவழியில் போராட்டம் நடத்தினர்.

ஜல்லிக்கட்டு நடத்த மத்திய அரசு அவசர சட்டம் கொண்டு வரக்கோரி தமிழகம் முழுவதும் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்லாயிரக்கணக்கானோர் தீவிர போராட்டத்தில் குதித்து உள்ளனர். இதற்கிடையே வெளிநாடுகளில் வசிக்கக்கூடிய தமிழர்களும் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில் டுபாயில் வசித்து வரும் தமிழர்கள் ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக அறவழியில் போராட்டம் நடத்தினர். அங்கு உள்ள ஜபீல் பூங்கா மற்றும் அல் கிஸ்சஸ் பகுதியில் உள்ள பூங்கா ஆகிய இடங்களில் தமிழக மக்கள் ஒன்று கூடி ஜலலிக்கட்டுக்கு ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் இளைஞர்கள், பெண்கள், சிறுவர்-சிறுமிகள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

அவர்கள் 'பீட்டாவை தடை செய்' 'மத்திய அரசே ஜல்லிக்கட்டுக்கு அவசர சட்டம் கொண்டு வா' 'நாங்கள் ஜல்லிகட்டுக்கு ஆதரவு அளிக்கிறோம்' என்ற வாசகங்களை கொண்ட பதாகைகளை கையில் ஏந்தியபடி கோஷம் எழுப்பினர். (இ-7)

# சேலத்தில் 40 மணித்தியாலங்களுக்கும் மேலாக புகையிரதத்தை மறித்து மாணவர்கள் போராட்டம்

ஜல்லிக்கட்டுக்கு ஆதரவான மாணவர்களின் மறியல் போராட்டத்தால் சேலத்தில் 40 மணி நேரத்திற்கும் மேலாக பெங்களூர் காரைக்கால் வரை சேவையில் ஈடுபடும் புகையிரதம் நிறுத்தி வைக்கப்பட்டது.

ஜல்லிக்கட்டு நடத்த அனுமதி கேட்டு தமிழக முதலமைச்சர் பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் பிரதமர் மோடியை சந்தித்து பேசினார். அப்போது வழக்கு நிலுவையில் உள்ளதால் ஒன்றும் செய்ய முடியாது என்று பிரதமர் கூறி விட்டார்.

இதனால் ஆத்திரம் அடைந்த மாணவர்கள் பிற்பகல் 1.30 மணியளவில் பெங்களூரில் இருந்து காரைக்கால் நோக்கி சென்ற பயணிகள் புகையிரதத்தை மறிக்க பெரியார் மேம்பாலம் அருகே வந்தனர். அப்போது புகையிரதம் வந்து கொண்டிருந்தது.


காம்பவுண்ட் சுவரை தாண்டி திபு திபுவென புகுந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் புகையிரததை மறந்தனர். இதனால் சாரதி புகையிரதத்தை நிறுத்தி விட்டு இறங்கி சென்று விட்டார். உடனே மாணவர்கள் புகையிரதப் பெட்டி மீது ஏறி புகையிரதத்தைச் சிறை பிடித்தும், தண்டவாளத்தில் அமர்ந் தும தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து அங்கு வந்த புகையிரத பாதுகாப்பு படையினர் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சு வார்த்தை நடத்தினர். ஆனால் பேச்சுவார்த்தையில் எந்த உடன்பாடும் ஏற்படாததால் புகையிரத மறியல் போராட்டம் நேற்றும் நீடித்தது. ஏராளமான இளைஞர்கள் தண்டவாளத்தில் அமர்ந்தும் அந்த புகையிரதம் மீது அமர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் 40 மணி நேரத்திற்கும் மேலாக புகையிரதம் சேலம் பெரியார் மேம் பாலப்பகுதியிலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் சேலம விருத்தாச்சலம் மார்க்கத்தில் புகையிரதத்தை இயக்குவதில் தடை ஏற்பட்டுள்ளது.

வழக்கமாக 6.10 மணிக்கு சேலம் ஜங்சனில் இருந்து விருத்தாச்சலம் புறப்பட்டு செல்ல வேண்டிய பயணிகள் புகையிரதம் இரவு 7.45 மணக்கு டவுன் புகையிரத நிலையத்தில் இருந்து இயக்கப்பட் டது.


இந்த மார்க்கத்தில் இரவு 9 மணிக்கு சேலத்தில் இருந்து புறப்படும் சேலம்-சென்னை எழும்பூர் எக்ஸ்பிரஸ் புகையிரதம் சேலம் விருத்தாச்சலம் மார்க்கத்திற்கு பதிலாக ஜோலார்பேட்டை, காட்பாடி, அரக்கோணம், வழியாக இயக்கப்பட்டது.



புதுச்சேரி-மங்களூர் வாராந்திர எக்ஸ்பிரஸ் புகையிரதம விருத்தாச்சலம்-சேலம் மார்க்கத்திற்கு பதிலாக ஜோலார்பேட்டை, காட்பாடி, கரூர், ஈரோடு, திருப்பூர், கோவை வழியாக மங்களூருக்கு இயக்கப்பட்டது. சென்னை எழும்பூரில் இருந்து நேற்றுக்காலை சேலம வந்த சேலம் எக்ஸ்பிரஸ் புகையிரதம் ஜங்சன் புகையிரத நிலையத்திற்கு செல்ல முடியாததால் டவுன் புகையிரதம் நிலையத்திலேயே நிறுத்தப்பட்டது. (இ-7)

# இந்தியாவின் ஐந்து மாநிலங்களுடன் தனித்தனி வர்த்தக உடன்படிக்கை

## இலங்கை அரசாங்கம் திட்டவட்டம்



(கொழும்பு)

**இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடு நடைமுறையில் இருக்கும் நிலையில் எட்கா உடன்பாட்டையும் செய்து கொள்ளவுள்ள அரசாங்கம் இந்தியாவின் ஐந்து மாநிலங்களுடன் தனித்தனியாக உடன்பாடுகளையும் செய்து கொள்ளவுள்ளது. லாவோசில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் அனைத்துலக வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.**

சீனா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான சுதந்திர வர்த்தக உடன்பாடும், இந்தியாவுடனான எட்கா உடன்பாடும் எதிர்வரும் ஜூன் மாதத்துக்குள் இறுதி செய்யப்படும்.

இந்த உடன்பாடுகளின் மூலம், 2.5 பில்லியன் மக்களைக் கொண்ட சந்தைக்குள் இலங்கை நுழைய முடியும்.

இதைவிட, ஐந்து தென்னிந்திய மாநிலங்களுடனும் தனித்தனியான உடன்பாடுகளைச் செய்து கொள்ளும் திட்டமும் உள்ளது.

ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய ஐந்து மாநிலங்களுடன் தனித்தனியான உடன்பாடுகளைச் செய்து கொள்வதன் மூலம், 500 பில்லியன் டொலர் பிராந்திய பொருளாதாரத்துக்குள் இலங்கை நுழைய முடியும்.

மேலும் பங்களாதேஷ், இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, மியன்மார் போன்ற வங்காள விரிகுடா நாடுகளுடன், மேலும் உடன்பாடுகளைச் செய்து கொள்வதற்கும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

ஜப்பான், பாகிஸ்தானுடனும் சுதந்திர வர்த்தக உடன்பாட்டை செய்து கொள்வதற்கும் பேச்சுக்கள் நடத்தபடுகின்றன." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## ஸ்ரீலங்கன் விமான சேவை இரகசியங்கள் ஓரிரு தினத்தில் வெளிவரும் -கபீர் ஹாசிம்

ஸ்ரீலங்கன் விமான சேவையை நட்டமடையச் செய்தவர்களை இன்னும் ஓரிரு தினங்களில் வெளிப்படுத்தவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் அமைச்சர் கபீர ஹாசிம தெரிவித்தார்.

ஸ்ரீலங்கன்விமானசேவை நிறுவனத்துக்கு விமானமொன்றைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையொன்றை அமைச்சரவை அனுமதியில்லாமல் இரத்து செய்ததன் மூலம், அரசாங்கத்துக்கு 150 மில்லியன் ரூபாவை நட்டம் ஏற்படுத்தினார் என கூட்டு எதிர்க்கட்சி அமைச்சருக்கு எதிராக முன்வைக்கும் குற்றச்சாட்டு குறித்து வினவியபோதே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

கடந்த அரசாங்கத்தில் ஸ்ரீ லங்கன் விமான சேவை நிறுவனத்தை நாசமாக்கியவர்கள் யார் என்பதை நான் கூற ஆசைப்படுகின்றேன். மகிந்த ராஜபக்ஷவின் மைத்துனரை இந்நிறுவனத்தின் தலைவர் பதவிக்கு நியமித்தனர். இதன் மூலம் இந்த நிறுவனத்தை வங்குரோத்து நிலைக்கு கொண்டு வந்தது யார் என்பதை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிந்துள்ளனர்.

கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்எறிய வேண்டாம் என நாம் ஒவ்வொரு முறையும் கூறுகின்றோம். இது கூட்டு எதிர்க்கட்சி வாங்கிக் கட்டிக் கொள்ளும் நடவடிக்கையாகவே நான் பார்க்கின்றேன் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-3)

## பொருளாதாரத்தடை உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் அழுத்தங்களிலிருந்து மகிந்தவை மைத்திரியே காப்பாற்றினார்

### மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

"யுத்தத்தின் போது இடம் பெறறதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல் தொடர்பான சர்வதேசத்தின் அழுத்தங்களிலிருந்து, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே காப்பாற்றினார்" என்று, திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேனவுக்கு, சர்வதேசத்தால் கிடைக்கப் பெற்ற புகழும் அங்கீகாரமுமே, முன்னாள் ஜனாதிபதியை சர்வதேச அழுத்தத்திலிருந்து பாதுகாத்தது. மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியின் செயற்பாடுகள் காரணமாகவே, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கப்பட விருந்த அறிக்கையும் செப் டெம்பர் மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார். "சர்வதேச நாடுகள் அனைத்தும், எமது நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதிப்பதற்குத் தயாராக இருந்தன. இந்தப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்ட முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ, அவருடைய பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர், ஜனாதிபதி தேர்தலை இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடத்துவதற்குத் தீர்மானிததார்.

"மகிந்தவின் சர்வ தேச கொள்கைகளை எதிர்த்து தான் மக்கள், அவருக்கு வாக்களிக்கவில்லை எனக் கூற முடியாது. ஆனால், சிறுபான்மையினரைக் கருத்தில் கொள்ளாமை அல்லது அவர்களுக்கான வழிவகைகளைச் செய்து கொடுக்காமை மற்றும் அளுத்கமை விவகாரம் போன்ற காரணங்களுக்காகவே, மக்கள் அவருக்கு வாக்களிககவில்லை. இந்த நாட்டின ஜனாதிபதியாக அவர் வருவதை, மக்கள் விரும்பவிலலை என்பதே உண்மை" என்று அவர் மேலும் தெரிவித்தார். "நாட்டுக்குச் சிறப்பான சேவையாற்றியும் ஒரு தேர் தலில் தோற்றுப்போகக்கூடிய நபராக மகிந்த ராஜபக்ஷ இருக்கவில்லை" என்று கூறிய அவர், "கடந்த ஜனாதிபதித் தேர் தலின போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்காகவே 100 சதவீதம் களத்திலிருந்தேன் எனவும் தெரிவித்தார். (இ-3)

## அலிபாபா இலங்கையில் முதலீடு



உலகின் மிகப் பிரபல மான சீன இணைய வணிக நிறுவனமான அலிபாபா, இலங்கையில் முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருவதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. லாவோசில் நடைபெறும் உலக பொருளாதார மாநாட்டில், அலிபாபா நிறுவனத்தின் தலைவரான ஜக்மாவை, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று முன்தினம் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்பின் போதே, இலங்கையில் முதலீடு செய்வதற்கான உடனடி நடவடிக்கையை ஆரம்பிக்கப் போவதாக, அலிபாபாவின் தலைவர் ஜாக்மா தெரிவித்துள்ளார். தமது முதலீட்டு திட்டம், நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்குவேலை வாய்ப்பை அளிக் கும் வகையில் அமைந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

## வரட்சி சவால் குறித்து அவதானம் செலுத்தவும்

இலங்கை, எதிர்காலத்தில் முகங்கொடுக்கவுள்ள வரட்சி சவால் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு உலக உணவுத்திட்டத்தின் நிறைவேற்று பணிப்பாளர் Ertharine cousine தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பணிப்பாளர் Ertharine cousine க்கு இடையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். விசேடமாக விவசாயத்துறை முகங்கொடுக்கும் பிரச்சினை, நீர்மின்சார உற்பத்தி தொடர்பில் முகங்கொடுக்கக்கூடிய பிரச்சினை குறித்தும் கவனஞ்செலுத்துமாறும் அறிவுறுத்தியுள்ளார்.

எனினும், மின்சார உற்பத்திக்காக எரிபொருளைப் பயன்டுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக, பிரதமர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார். இந்நிலையில், எதிர்வரும் 10ஆம் திகதியன்று, இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

## வசீம் தாஜுடீன் கொலை வழக்கு; மர்ம வாகனத்தை ஆராய அனுமதி

(கொழும்பு)

பிரபல றக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுடீன் கொலை செய்யப்பட்ட தினத்தன்று, அவரது வாகனத்துக்குப் பின்னால் பயணித்த மற்றுமொரு வாகனம் தொடர்பான சீ.சீ.ரீ.வி பதிவு அடங்கிய இறுவெட்டை, கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதற்கு, கொழும்பு நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் ஜெயராம் ட்ரொஸ்கி, நேற்று முன்தினம் அனுமதியளித்தார்.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தாஜுடீன் கொலை செய்யப்பட்ட தினத்தன்று, அவரது வாகனத்துக்குப் பின்னால் பயணித்த மற்றுமொரு வாகனம் தொடர்பான சீ.சீ.ரீ.வி கமெரா பதிவு அடங்கிய இறுவெட்டை, கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு அனுப்பி ஆராய்வதற்கு,சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் டிலான் ரத்நாயக்க அனுமதி கோரினார்.

அத்துடன், மாலபேயிலுள்ள சைற்றம் (மருத்துவம் மற்றும் தொழில்நுட்பத்துக்கான தெற்காசிய நிறுவகம்) நிறுவகத்திலிருந்து குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் பெறப்பட்ட உடற்பாகங்கள் தொடர்பிலான மரபணுப் பரிசோதனைகள் இடம்பெற்று வருவதாகவும் அவர், மன்றில் தெரிவித்தார்.

பிரதான சட்ட வைத்திய அதிகாரியான ஆனந்த சமரசேகர மற்றும் ஏனைய இரு சட்ட வைத்திய அதிகாரிகள், தாஜுடீனின் சடலத்தை முறையாக பிரேத பரிசோதனை செய்யவில்லை என்ற குற்றச்சாட்டுத் தொடர்பில், கொழும்பு மருத்துவ சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் தற்போதைய நிலைமை தொடர்பிலும் நீதவானின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

சீ.சீ.ரீ.வி பதிவை கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அனுப்ப அனுமதித்த நீதவான், வழக்கு தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்க, நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலைய குற்றப் பிரிவின் முன்னாள் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோரை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறும் உத்தரவிட்டார்.

வசீம் தாஜுடீன், 2012 ஆம் ஆண்டு மே மாதம் 17ஆம் திகதியன்று, நாரஹேன்பிட்டிய சாலிகா விளையாட்டு மைதானத்துக்கு அருகில் காரொன்றுக்குள் இறந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். (இ-3)

# மக்களின் இருப்புக்குறித்து இலங்கையில் சவால் எழும்

## ஜனாதிபதி மைத்திரி எச்சரிக்கை

(கொழும்பு)

**இயற்கை வளங்களை பாதுகாக்கத் தவறினால் இலங்கை மக்களின் இருப்புக் குறித்த சவால் எழும் என ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே ஜனாதிபதி இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அபிவிருத்திப் பணிகளுக்காக வளிமண்டலத்தில் தீய வாயுக்களைச் சேர்த்து உலக வெப்பநிலையை அதிகரித்து மனித குலத்திற்கு பெரும்பாதிப்பை ஏற்படுத்திய வல்லரசுகள் இலங்கைக்கு ஆலோசனைகளை வழங்கி வருவதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை ஒருபோதும் பிற்போட முடியாது. இந்த நாடுகள் இயற்கை பெறுமானங்களை புறக்கணித்து செயற்படுகின்றன.


இதன் காரணமாக மனிதர்களும் ஏனைய உயிரினங்களும் உயிர் வாழ்வது பெரும் சவாலாக மாறியுள்ளது.

இலங்கையை இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் நாடாக மாற்ற வேண்டுமாயின், வன வள அடர்த்தியை 50 சதவீதம் வரையிலாவது உயர்த்த வேண்டும்.

இயற்கை வளங்களை பாதுகாக்கத் தவறும் பட்சத்தில், இலங்கை மக்களின் இருப்புக் குறித்த சவால் எழும என்று ஜனாதிபதி மைத்திரி தெரிவித்தார். (இ-3)

# கொழும்பு துறைமுகத்தில் அமெரிக்க நாசகாரி






(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் வழிகாட்டல் ஏவுகணை நாசகாரி கப்பலான யு.எஸ். எஸ். ஹொப்பர், நான்கு நாட்கள் பயணமாக நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

அமெரிக்க நாசகாரி கப்பலுக்கு, கொழும்பு துறைமுகத்தில் இலங்கைப் கடற்படையினரால் பாரம்பரிய முறைப்படி வரவேற்பு அளிக்கப்பட்டது.

விமான எதிர்ப்பு, நீர்மூழ்கி எதிர்ப்பு மற்றும் தரை இலக்குகளைத் தாக்கும் பலநோக்கு போராயுத வசதிகளைக் கொண்ட இந்த நாசகாரி கப்பல், பேர்ள் ஹாபரில்இருந்து இயங்கிவருகிறது.

தற்போது இந்த நாசகாரி, இந்தோ-ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான கண்காணிப்பு பணியில் ,ஈடுபட்டுள்ளது. இதன் ஒரு கட்டமாகவே கொழும்பு துறைமுகத்துக்கு வந்துள்ளது.

நாளை மறுதினம் 23 ஆம் திகதி வரை கொழும்பு துறைமுகத்தில் தரித்திருக்கும் அமெரிக்க நாசகாரி கப்பல், இலங்கை கடற்படையினருடன் இணைந்து பயிற்சிகளிலும் பங்கேற்கவுள்ளது.



கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளும் ஐந்தாவது அமெரிக்கப் போர்க்கப்பல் இதுவாகும்.

ஏற்கனவே கொழும்பு துறைமுகத்துக்கு யு.எஸ்.எஸ். புளூ ரிட்ஜ், யு.எஸ்.எஸ். நியூ ஓர்லியன்ஸ், யு.எஸ்.எஸ். பிராங்க் கேபிள் ஆகிய அமெரிக்க போர்க்கப்பல்கள் கொழும்பு துறைமுகத்துக்கும், யு.எஸ். எஸ் .சோமசெற் போர்க்கப்பல் திருகோணமலை துறைமுகத்துக்கும் கடந்த ஆண்டில் பயணம் மேற்கொண்டிருந்தன.

அதேவேளைகடந்தஆண்டு செப்ரெம்பர் மாதம், இலங்கை கடற்பரப்புக்கு அருகாக பயணத்தை மேற்கொண்டிருந்த போது யு.எஸ்.எஸ். ஹொப்பர் நாசகாரியின் மாலுமி ஒருவருக்கு ஏற்பட்ட சுகவீனம் காரணமாக, இந்தப் போர்க்கப்பல் இலங்கை கடற்பரப்பில் நுழைந்திருந்தது.

அந்த மாலுமி இலங்கை கடற்படையினரால் மீட்கப்பட்டு கொழும்பில் சிகிச்சை அளிக்கப்பட்டு காப்பாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

# கூட்டு எதிர்க்கட்சி பகல் கனவு காண்கின்றது

கூட்டு எதிர்க்கட்சி புதிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும் பகல் கனவை கண்டு கொண்டிருப்பதாகவும் தலைகளை மாற்றினாலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது எனவும் மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் திலிப் வெத ஆராச்சி தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தின் மூலம் மக்களுக்கு பல பாரிய நிவாரணங்கள் கிடைதன.

மீன்பிடித் தொழிலை மேம்படுத்தி, மீனவர்களின் உரிமைகளை பாதுகாத்து, மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்யும் போது கூட்டு எதிர்க்கட்சி சீர்குலைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

பாசாங்குத்தனமாக இந்த அரசியல் சீர்குலைப்பு நடவடிக்கைகளில் கூட்டு எதிர்க்கட்சியினர் ஈடுபட்டு வருகின்றனர்.

நாங்கள் அம்பாந்தோட்டையில் அதனையே பார்த்தோம். அம்பாந்தோட்டை மக்கள் அதற்கு பதிலளித்தமை குறித்து நன்றி தெரி வித்துக் கொள்கிறோம். அம்பாந்தோட்டை மக்கள் நாட்டின் கௌரவத்தை பாதுகாத்தனர்.

கூட்டு எதிர்க்கட்சி புதிய அரசாங்கத்தை அமைக்க பகல் கனவு காண்கின்றது.

தலைகளை மாற்றினாலும் அரசாங்கத்தை கவிழ்க்க முடியாது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எந்த நாடாளுமன்ற உறுப்பினரையும் பணம் கொடுத்து வாங்க முடியாது. கூட்டு எதிர்க்கட்சி கோஷ்டியிடம் அடிமையாக மாட்டோம்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திட்டம் மூலம் 10 இலட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்க முயற்சித்தோம். ஆனால் அதனை சீர்குலைக்க இவர்கள் முயற்சித்து வருகின்றனர்.

ஜி.எஸ்.பி.பிளஸ் நாட்டுக்கு கிடைக்கவுள்ளது. கடன் சுமையில் இருந்து மீள துறைமுகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அம்பாந்தோட்டையில் நடத்தப்பட்ட தாக்குதல் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல் எனவும் திலிப் வெத ஆராச்சி மேலும் தெரிவித்தார். (இ-3)

# இன்று ஒரு தகவல்

## பிறந்தகத்துப் பெருமைகளைப் பேசலாமா?

பிறந்த வீடா, புகுந்த வீடா என்று கேட்டால் பல பெண்கள் பிறந்த வீட்டுக்குத் தான் கையைத் தூக்குகிறார்கள். நியாயம், மனச்சாட்சி எல்லாம் தூள்,தூள்! அப்படி ஒரு கண்மூடிப் பாசம்.

இந்த ஆண்கள் இருக்கிறார்களே , இவர்கள் சுத்த மோசம்! திருமணமானதும் இவர்களுள் பலர் தாய்,தந்தை அண்ணன், தம்பிகள், அக்கா, தங்கைகளைப் புறக்கணித்துவிட்டு,மாமன்,மாமி, மச்சான், சகலை, கொழுந்தியாள், மச்சினி என்று இவர்களது படையில் சேர்ந்து கொண்டுவிடுகிறார்கள்.

அது மட்டுமல்ல தாயையும் தந்தையையும் சுடப்பிறந்தவர்களையும் குறையாகச் சொன்னால் இவர்களுக்குக் கோபமே வருவதில்லை. இவர்களைப் பற்றித் தன் மாமியார் வீட்டில் யார் வேண்டுமானாலும் பேசலாம் , எப்படி வேண்டுமானாலும் விமர்சிக்கலாம் என்று இடங்கொடுக்கிறார்கள். பெண்களிடம் இத்தகைய நிலையை எதிர்பார்க்க முடியாது.

தனக்கு ஒரு மருமகள் வந்துவிட்டாலும் சரி, தனது பிறந்தகத்தை யாரேனும் சொல்லிவிட்டால்,தொலைந்தார்கள்! கோபம் பொத்துக் கொண்டு வருகிறது சிலர் இதை விட ஒரு படி மேலே போய் ,நான் பிறந்த இடம் ரொம்ப ஓவியமாக்கும் நான் வாக்கப்பட்ட(வாழ்க்கைப்பட்ட) இடம் ரொம்ப மட்டமாக்கும் என்று பேச ஆரம்பித்து விடுவார்கள். எங்க அம்மா வீடு மாதிரி வராது. எங்க ஆத்தா வீடு மாதிரி இல்லை என்று ஒரே பிரஸ்தாபம் தான்.

பிறந்தகத்தைப் பற்றி இவர்களே பெருமை பேசக்கூடாது.மற்றவர்கள் தாம் பேசும்படி செய்ய வேண்டும். இது இவர்கள் கையில் தான் இருக்கிறது. சாத்தியமும் கூட முதல்கட்டமாக,

புகுந்த வீட்டில் தொடர்ந்து ஒட்டுறவு இல்லாமல் நடந்து கொள்ளும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். கணவன் மூலம் கிடைத்த புதுச் சொந்தங்களை நன்கு அங்கீகரித்து பாசம் காட்டிப் பழக வேண்டும்!

இது கணவரையும் சேர்த்து வளைத்துப் பிடிக்கச் சிறந்த உத்தியாகும். புகுந்த வீட்டைப் பற்றிப் பிறந்த வீட்டினர் குறை கூறினால்கூட அதைத் தூண்டிவிடக்கூடாது.

பொறுப்பு மிக்க மருமகளாக ,பாசம் மிக்க மருமகளாக , குடும்பத்தைக் கூறு போடாத மருமகளாக நடந்து கொண்டாலே போதும். இவள் வந்ததும் தான் எங்கள் வீடு நல்லபடி ஆனது என்று புகுந்த வீட்டில் பாராட்டுப் பெற முடியும்.

இதைச் செய்தால் போதும். புகுந்த வீட்டினரே ஒரு பெண்ணின் பிறந்தகப் பெருமைகளை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல ஆரம்பித்துவிடுவார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# மைசூர் முதல் '81 போயஸ் கார்டன்' வரை...

# ஜெயலலிதா டயரி குறிப்புக்கள்






## 'எனக்கு மூட நம்பிக்கை இல்லை!'

"நாம்" வேறொன்றுக்கு மிகத் தீவிரமாக திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது... சம்பந்தமே இல்லாமல் நமக்கு வேறொன்று நடக்கும். அது தான் வாழ்க்கை". இது 'மேரி ஒர்த்' காமிக் கதையை எழுதிய ஏலன் கூறியது. ஜெயலலிதா அப்போது எதற்காக திட்டமிட்டுக் கொண்டிருந்தார் என்று தெரியவில்லை. அப்போது அவர் எதிர்பாராதது எல்லாம் நடந்தது. அவர்



உதறித் தள்ளிய பா.ஜ.க தலைமையில் மத்தியில் ஆட்சி. அதில் சர்வாதிகாரங்களுடன் தி.மு.க. என அவர் எதிர்பாராதது அல்லது விரும்பாததெல்லாம் நடந்து கொண்டிருக்க... அல்லது இதை எப்படி எதிர் கொள்வது என்று திட்டமிட்டுக் கொண்டிருக்க... ஏலன் கூறியது போலவே, ஜெயலலிதாவுக்கு வேறொன்று நடந்தது. ஆம், மிலேனியம் ஆண்டின் முதல மாதமே, அதாவது ஜனவரி 12, 2000 அவருக்கு சந்தோஷம் தருவதாக இல்லை. அவர் கட்சியின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மல்லிகாவுக்கு ஒரு ஊழல் வழக்கில் ஏழு ஆண்டு கால சிறைத தண்டனை வழங்கப்பட்டது. ஜெயலலிதா உள்ளுக்குள் உடைந்துதான் போனார். ஏனென்றால், அடுத்த நாள் சென்னை உயர் நீதிமன்றத்தில் டான்சி வழக்கில் தீர்ப்பு. அதில் ஜெயலலிதா தான் முதல் குற்றவாளி. தீர்ப்புக்காக பதைபதைப்புடன் காத்திருந்தார்... அவர் பதைபதைப்புக்குக் காரணம் இல்லாமல் இல்லை... சில தினங்களுக்கு முன்பு தான் அவரது ஆஸ்தான ஜோதிடர்கள், அவருக்கு இப்போது நேரம் சரியில்லை... நட்சத்திரங்களின் நகர்வு சரியில்லை என்று கூறி இருந்தார்கள். இதற்கு முன்பே கணித ஜோதிடத்தின் படி Jayalalitha என்ற தன் பெயரை Jayalalithaa என்று மாற்றி இருந்தார். ஜோதிடர்கள் சொன்னபடி எல்லாவற்றையும் பச்சை வண்ணத்துக்கும் மாற்றி இருந்தார். இருந்தும் இப்போது ஜோதிடர்கள் கஷ்ட காலம் என்கிறார்கள்... ஆனால், அவர்களே சில பரிகாரங்களும் சொல்லி இருந்தார்கள். அனைத்தையும் ஜெயலலிதா சிரமேற் கொண்டு செய்தார்.

விடிந்தது ஜனவரி 13... அது அந்த நாளுக்கான புது விடியலாக மட்டும் இல்லை. ஜெயலலிதாவுக்கும் மன இறுக்கத்திலிருந்து ஒரு விடிவாகத் தான் இருந்தது. ஆம், டான்சி வழக்கிலிருந்து ஜெயலலிதாவை நீதிபதி எஸ். தங்கராஜ் விடுவித்தார். ஜெயலலிதா பெருமூச்சு விட்டார். 'தர்மம் வென்றது' என்றார். வெகு நாட்களுக்குப் பின் உண்மையாக இறுக்கம் தளர்ந்து புன்னகைத்தார். ஆனால், அந்த புன்னகை வெகுநாட்கள் நீடிக்கவில்லை.

### 'கொளுத்தப்பட்ட மாணவிகள்'

ஆம். வரிசைகட்டி நின்ற வழக்குகளில் ஒன்றான கொடைக்கானல் 'பிளசண்ட் ஸ்டே' ஹோட்டல் வழக்கு தீர்ப்பு நாள் குறிக்கப்பட்டது. நிலக்கரி இறக்குமதி வழக்கிலிருந்து, ஜெயாவை விடுவித்த நீதிபதி வி. ராதாகிருஷ்ணன்தான், இந்த வழக்கையும் விசாரித்தார். ஜெயலலிதா கொஞ்சம் நம்பிக்கையாகத் தான் இருந்தார். ஆனால், இந்த முறை அவர் நம்பிக்கை உருப்பெறவில்லை. ஆம், ஜெயலலிதாவுக்கு இந்த வழக்கில் ஓராண்டு சிறைத் தண்டனை விதித்து ராதா கிருஷ்ணன் தீர்ப்பளித்தார். அவருக்கு மட்டுமல்ல... அவருடன் சேர்த்து முன்னாள் அமைச்சர் செல்வகணபதி, இந்திய ஆட்சிப் பணி அதிகாரி பாண்டே, பிளசண்ட் ஸ்டே வின் உரிமையாளர்கள் ராகேஷ் மிட்டல், சண்முகத்துக்கும் இந்த வழக்கில் தண்டனை வழங்கப்பட்டது. தீர்ப்பு வந்ததும் ஜெயலலிதா நிலைகுலைந்து போனார்.

இதனால்தானோ என்னவோ, பின்னொரு நாள் கரண் தபாருக்கு அளித்த பேட்டியில் கோபமாக, "நான் ஒன்றும் மூடநம்பிக்கை கொண்டவள் இல்லை. எனக்கு ஜோதிடத்தில், ஜாதகத்தில் நம்பிக்கை இல்லை" என்று சொன்னாரா என்று தெரியவில்லை.

சரி, விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம்... தீர்ப்பு குறித்த செய்தி 4G வேகத்தில் பரவியது. பெப்ரவரி 2, 2000 ஆம் ஆண்டு, தமிழகமெங்கும் வன்முறை வெடித்தது... பேருந்துகள் கொளுத்தப்பட்டன... ஒரு கட்டத்தில் வன்முறை எல்லை மீறிச் சென்றது... தருமபுரி மாவட்டத்தில்... ஆட்சியர் அலுவலகத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கியம்பட்டி பகுதியில், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக மாணவிகள் பயணித்த பேருந்து தீ வைத்துக் கொளுத்தப்பட்டது. உயிருடன் மூன்று மாணவிகள் காயத்ரி, கோகிலவாணி, ஹேமலதா பேருந்துக்குள்ளேயே தீயில் கருகி உயிரிழந்தனர். தமிழகமே விக்கித்து நின்றது.

இப்போது கட்சித் தலைமையிடம் நல்ல பேர் எடுப்பதற்காக, போராட்டம் செய்வதற்கு முன் அனைத்து நிருபர்களுக்கும் தகவல் கொடுக்கிறார்கள் அல்லவா கட்சிக்காரர்கள்... அப்போதும், அதுபோல தான் செய்திருந்தனர். அனைத்து தொலைக்காட்சிகளுக்கும் தகவல் கொடுத்தனர்... அவர்கள் முன்னிலையில் தான் பேருந்தை எரித்தனர். அதனால், அனைத்து தொலைக்காட்சி கமராக்களிலும் இந்த சம்பவம் பதிவாகி இருந்தது.





அவர்களும் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பினர்.

### 'பயம் தான் பயம் கொள்ள வேண்டும்'

அ.தி.மு.க மற்றும் ஜெயலலிதாவின் நிலை இவ்வாறாக இருக்க... உச்ச நீதிமன்ற தலையீட்டால் மீண்டும் டான்சி வழக்கு விசாரணைக்கு வந்தது. சிறப்பு நீதிமன்றம் விசாரித்தது. இந்தமுறை அந்த வழக்கில் ஜெயலலிதாவுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இன்னும் சில மாதங்களில் சட்டமன்றத் தேர்தல்... என்ன செய்வதென்று தெரியாமல் ஜெயலலிதா கொஞ்சம் திணறித்தான் போனார். சிலநாட்கள் போயஸ் கார்டனிலிருந்து வெளியே வராமல் இருந்த ஜெயலலிதா... கும்பகோணம் கும்பேஸ்வரர் கோயில் சென்றார்... மனம் உருக வேண்டினார்... பின் அ.தி.மு.கவின் 29ஆம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அந்த உரை 'நான் வீழ்ந்து விடவில்லை' என்பதாக இருந்தது.

அந்த உரை, "நாம் பயம் கொள்வதற்கு ஒன்றும் இல்லை... பயம் தான் பயம் கொள்ளவேண்டும்... என்னை மக்கள் மன்றத்தில் வீழ்த்த திராணியற்ற கருணாநிதி... பொய் வழக்குகள்... சிறப்பு நீதிமன்றங்கள் மூலம் என்னை வீழ்த்தப் பார்க்கிறார். எத்தனை கருணாநிதி வந்தாலும் என்னை எதுவும் செய்ய முடியாது... மீண்டும் நான் ஆட்சிக்கு வந்தால்... நிச்சயம் கருணாநிதியை கைது செய்வேன்.." என்றார்.

அதுவரை துவண்டிருந்த அ.தி.மு.கவினர் உற்சாகம் கொண்டனர்... தேர்தலுக் குத் தயாராகினர்.

(தொடரும்)





தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு வார நிகழ்வு கடந்த வாரம் காரைநகர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஈ.தயாரூபன் தலைமையில் நடைபெற்றது. பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வளவாளர்களாக ச.நிகேஸ் மற்றும் எஸ். முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உத்தியோகத்தர்களுக்கு நல்லிணக்கம் தொடர்பாக விளக்கமளித்தனர். நிகழ்வின் ஆரம்பத்தில் தேசிய நல்லிணக்கம் தொடர்பான பிரகடனத்தை உத்தியோகத்தர்கள் அனைவரும் வாசித்தனர். பின்னர் பிரதேச செயலாளர் நல்லிணக்கம் தொடர்பான விளக்க உரையொன்றை ஆற்றினார். தொடர்ந்து உதவித் திட்டமிடல் பணிப்பாளர் வீ.சிவகுமார் தேசிய ஒருங்கிணைப்பின் முக்கியத்துவம் தொடர்பாக உரையாற்றினார். இறுதியாக குழுச் செயற்பாடு பின்னூட்டல் என்பன இடம்பெற்றன. யுத்தத்திற்கு பின்னரான நிலையில் நாட்டு மக்களிடம் நல்லிணக்கம் தொடர்பான புரிதல்களை ஏற்படுத்தும் நோக்குடன் தேசிய நல்லிணக்கச் செயற்பாடுகள் நாடளாவிய ரீதியாக இடம்பெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (படங்கள்: பொ.சோபிகா)

# ஆளுநர் தலையிட முடியாது

## காணி விவகாரம் குறித்து சிறிதரன் எம்.பி. கருத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு என தீர்மானிக்கப்பட்ட காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்க அனுமதிக்க முடியாது என தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் இவ்விடயத்தில் ஆளுநரும் தலையிட முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக் கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்திய சாலைக்கு எதிரே உள்ள 4 பரப்பு தனியார் காணியை கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் பயன்படுத்தி வந்ததாகவும் பின்னர் அதை அரசு தமக்கென சுவீகரித்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு வழங்குவதாக தீர்மானிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது குறித்த காணியை பொலிஸ் திணைக்களத்துக்கு வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலைக்கென வழங்கப்படவிருந்த காணி தற்போது பொலிஸாருக்கு வழங்க வேண்டும் என வடமாகாண ஆளுநர் தெரிவித்து வருகிறார்.

ஏற்கனவே பொலிஸாருக்கு யாழ்.நகரில் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மேலும் காணிகள் தேவையென கேட்கிறார்கள்.

ஆனால் மேற்படி காணி வைத்தியசலைக்கு தான் வழங்க வேண்டும். இவ்விடயத்தில் தனது அரசியலை ஆளுநர் செய்து வருகிறார்.

அவர் இதில் தலையிட முடியாது. பொலிஸாருக்கோ அதிரடிப்படையினருக்கோ இக் காணியை வழங்க முடியாது.

புலி இருந்த இடம் அனைத்தும் அரச படைகள் தான் இருக்க வேண்டும் என்பதை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது.

அத்துடன் பண்ணைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் உள்ள காணியும் விடுவிக்கப்பட வேண்டும் என தெரிவித்தார். (இ-9)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 964

Search for people, places and things · Nagendram · Home

பானு




திரன்




துசி





வதி




சிந்து




நரேன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வெள்ளை அறிக்கையும் சீனா- இலங்கை உறவும்



கடந்த வாரம் சீனாவினால் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையானது, ஏன் இலங்கைக்கு தற்போதும் எதிர்காலத்திலும் சீனாவின் உதவி தேவை என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளது.

ஆசிய-பசுபிக் பாதுகாப்பு ஒத்துழைப்புடன் தொடர்புபட்ட சீனாவின் கோட்பாடுகள் அடங்கிய வெள்ளை அறிக்கை, இப்பிராந்தியத்தில் நில்வும் பிரச்சினைகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு எத்தகையது என்பதைத் தெளிவாகக் காண்பித்துள்ளது.

சீனாவானது இலங்கையின் அபிவிருத்திப் பங்காளனாக விளங்கியுள்ளது. இலங்கையின் ஆட்சியைப் புதிய அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் சீனாவுடனான உறவில் சில அச்சுறுத்தல்கள் ஏற்பட்ட போதிலும் தற்போது மீண்டும் இந்த உறவு சுமுகமாக உள்ளாகியுள்ளது போல் தெரிகிறது.

2015 ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களிலும் மே 2016 இலும் மலேசியா, மியன்மார் மற்றும் இலங்கை ஆகிய நாடுகள் வெள்ளப் பெருக்கினால் அதிகம் பாதிப்பைச் சந்தித்த போது, இந்த மூன்று நாடுகளுக்கும் சீனாவினால் உடனடியாக நிவாரண உதவிகள் வழங்கப்பட்டதாக சீன அரசாங்கத்தால் கடந்த வாரம் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனாவானது இலங்கை தொடர்பில் தனது பங்கை ஆற்றுவதற்குத் தயாராக உள்ளது என்பதையே சீன அரசாங்கத்தின் இந்த அறிக்கையின் மூலம் அனுப்பப்பட்டுள்ள செய்தியாக உள்ளது.

ஆனால் இலங்கை இதற்கு கைமாறாக எதையாவது செய்ய வேண்டியுள்ளது என சீன அரசாங்கத் தால் வெளியிடப்பட்ட அறிக்கை குறித்து நிற்கவில்லை.

'ஆசிய-பசுபிக் பாதுகாப்பு ஒத்துழைப்பு' தொடர்பான சீன அரசாங்கத்தின் வெள்ளை அறிக்கையானது அந்நாட்டு அரச சபை தகவல் அலுவலகத்தால் வெளியிடப்பட்டது.

இந்த அறிக்கையானது சீனாவின் பொதுவான, முழுமையான, ஒத்துழைப்பு சார்ந்த, நீடித்து நிலைத்து நிற்கக்கூடிய பாதுகாப்பு எண்ணக் கருக்கள் மற்றும் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் ·சமரதானம் மற்றும் நிலைத் தன்மையை அடைந்து கொள்வதற்கான சீனாவின் அணுகு முறை போன்றன தொடர்பாக விரிவாக விளக்கியுள்ளது.

பொது அபிவிருத்தியை அதிகரித்தல், பங்காளர்களைக் கட்டியமைத்தல், ஏற்கனவே நடைமுறையிலுள்ள பல்தரப்பு செயற்பாடுகளை முன்னேற்றுதல், ஆட்சியமைத்தல், இராணுவப் பரிமாற்றங்கள், பல்வேறு முரண்பாடுகளைக் களைவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்றன தொடர்பாகவும் சீன அரசாங்கத்தின் கொள்கை வகுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிய-பசுபிக் பிராந்தியமானது பல்வேறு நாடுகளையும் உலகின் 60 சதவீதமான மக்கள் தொகையையும் கொண்டுள்ள பாரிய பிரதேசமாகும். உலகின் 60 சதவீதமான பொருளாதார செயற்பாடுகளும் 50 சதவீத வர்த்தக செயற்பாடுகளும் இடம் பெறும் பிராந்தியமாக இது காணப்படுகிறது.

இப்பிராந்தியமானது உலக வரைபடத்தில் கேந்திர முக்கியத்துவ அமைவிடத்தைக் கொண்டுள்ளது. அண்மைய ஆண்டுகளில், ஆசிய,பசுபிக் பிராந்திய அபிவிருத்தியானது மக்களின் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. உலகின் மிகப்பலமான இயங்குநிலைப் பிராந்தியமாகவும் இது காணப்படுகிறது.

அனைத்துத் தரப்பினரும் இப்பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து இங்கு முதலீடுகளை மேற்கொண்டுள்ளனர். அனைத்துலக சமூகத்துடனான உறவுநிலை வடிவமானது ஆசிய-பசுபிக் பிராந்திய நிலைப்பாட்டிற்கேற்ப மாற்றமுற்றுள்ளது.

இப்பிராந்தியத்தில் சமாதானம் மற்றும் நிலைத் தன்மையை அதிகரிப்பதில் சீனா தன்னை அர்ப்பணித்துள்ளதாக கூறியுள்ளது. அத்துடன் சமாதான சகவாழ்வின் ஐந்து கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு அனைத்து நாடுகளுடனும் சீனாவானது சமாதான அபிவிருத்தி மற்றும் பரஸ்பர நலன் பயக்கும் மூலோபாயம் போன்றவற்றைக் கட்டியெழுப்பி வருகிறது. பிராந்திய ஒருமைப்பாட்டிலும் இது பங்களிப்பை வழங்கியுள்ளது.

பாரம்பரிய மற்றும் பாரம்பரியமற்ற பாதுகாப்பு சவால்களுக்கு பதிலளித்தல், நிலையான சமாதானத்திற்கு பங்களிப்பை வழங்குதல், ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் பொதுவான செழுமை போன்றவற்றுக்காக சீனாவானது பல்வேறு பயனுள்ள நகர்வுகளை முன்னெடுத்து வருவதாகவும் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

தற்போது, ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் சூழலானது முற்றிலும் ஸ்திரமானதாகக் காணப்படுகிறது. இங்கு சமாதானம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான பலமான இயங்குவிசை காணப்படுகிறது. இது பூகோள தரையம்சத்தில் முக்கியதொரு பங்காகக் காணப்படுகிறது.

ஆசிய - பசுபிக் பிராந்தியத்தின் முக்கியமான உறுப்பு நாடு என்ற வகையில், சீனா இப்பிராந்தியத்தின் எதிர்காலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ள தனது சமாதான அபிவிருத்தி தொடர்பில் முழுமையாகக் கவனம் செலுத்தியுள்ளது. சீனா தனது சொந்தப் பொறுப்பில் பிராந்திய செழுமை மற்றும் நிலைத்தன்மையை முன்னேற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

கலந்துரையாடல் மற்றும் ஒத்துழைப்பு போனறவற்றின் ஊடாக பிராந்திய நாடுகளுடன் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு சீனா தயாராக உள்ளதாகக் கூறியுள்ளது.

'முதலாவதாக, நாங்கள் பொதுவான அபிவிருத்தியை அதிகரிக்க வேண்டும். அத்துடன் ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மைக்கான உறுதியான பொருளாதாரத் தளத்தை இடவேண்டும். பொருளாதார நலன்களை அதிகரிப்பதானது நாடுகளுக்கு இடையிலான உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு முக்கியமாக அமைகிறது.

அத்துடன் பல்வேறு பாதுகாப்பு விவகாரங்களை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பொருளாதார ஒத்துழைப்பில் கணிசமானளவு சாதனைகள் எட்டப்பட்டுள்ளன. இந்த அடிப்படையில், பொருளாதார ஒத்துழைப்பை மேலும் துரிதப்படுத்துவதுடன், இப்பிராந்தியத்தில் சுதந்திர வர்த்தக வலயங்களை உருவாக்க வேண்டும். இதற்கும் மேலாக, முழுமையான பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான தொடர்பையும் பேண வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலை நிலையான அபிவிருத்தி என வரையறுக்கும் விதமாக நாம் அதனை அமுல்படுத்த வேண்டும்.

இதன் மூலம் நாடுகளுக்கு இடையிலான குறுகிய அபிவிருத்தி இடவெளியை நீக்க முடியும். ஆகவே அனைத்து நாடுகள் மற்றும் அனைத்து சமூக மட்ட மக்களும் அபிவிருத்தியின் பங்கிலாபங்களை அனுபவிக்க முடியும்.

இதன் மூலம் நாடுகளின் நலன்கள் மேலும் நெருக்கமானதாக மாறிவிடும்' என சீன அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட கொள்கை விளக்கவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இருதரப்பு நலன் பயக்கும் அனைத்துலக உறவுகள் தொடர்பான புதிய மாதிரி ஒன்று கட்டியெழுப்பப்பட வேண்டும் எனவும் சீனா அழைப்பு விடுத்துள்ளது.

(தொடரும்)

# ஓரிரு நாட்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்படும்



## தமிழக முதலமைச்சர் அறிவிப்பு

ஜல்லிக்கட்டு நடத்த தமிழக அரசு அவசர சட்டம் கொண்டு வர முடிவு செய்துள்ளது. அதன்படி, மிருக வதை தடை சட்டத்தில், மாநிலம் சார்பில் திருத்தம் செய்யப்பட்டு, வரைவு அவசர சட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த வரைவு சட்டம் உள்துறை அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பாக, குடியரசுத் தலைவர், பிரதமரிடம் ஒப்புதல் பெற்று இந்த சட்டம் பிறப்பிக்கப்படும்.

இதனைத்தொடர்ந்து இன்று பத்திரிகையாளர்களை சந்தித்த பன்னீர்செல்வம், ஜல்லிக்கட்டுக்கு ஓரிரு நாட்களில் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும் என்றும் ஓரிரு நாட்களில் ஜல்லிக்கட்டு நடத்தப்படும் எனக் கூறியுள்ளார்.

இதனால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பொதுமக்கள், மாணவர்கள் மற்றும் பலவேறு அமைப்பினர் போராட்டத்தை கைவிட வேண்டும் எனத் தெரிவித்தார்.

பன்னீர் செல்வத்தின் இந்த அறிவிப்பை மாணவர்கள வரவேற்றுள்ளனர். இருப்பினும் வாடிவாசல் திறந்து, அதனுள் இருந்து காளைகள் சீறிப்பாயும் காட்சியை பார்க்கும் வரை நாங்கள் போராட்டத்தில் இருந்து பின்வாங்க மாட்டோம் என கூறியுள்ளனர்.

மேலும், இது உலக தமிழர்களுக்கு கிடைத்துள்ள முதல் வெற்றி எனவும் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3)

# தெற்கை ஆட்டிப்படைத்த மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடைய ஆறுபேர் கைது; பல ஆயுதங்களும் மீட்பு

அண்மையில் தெற்கை உலுக்கும் விதமாக அம்பலாங்கொடை மற்றும் மீட்டியாகொட பகுதிகளில் இடம்பெற்று வந்த தொடர் மனிதப் படுகொலைகளுடன் தொடர்புடையதாக கூறப்படும் 6 பிரதான சந்தேகநபர்களை அம்பலாங்கொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எல்பிட்டிய தீர்க்கப்படாத குற்றம் தொடர்பிலான விசாரணைப் பிரிவினர் முன்னெடுத்த சிறப்பு விசாரணைகளின் அடிப்படையிலேயே அப்பிரிவுக்கு உட்பட்ட அம்பலாங்கொடை பொலிஸ் குழுவினரால் இந்த திட்டமிட்ட கொலை கும்பல் கைது செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இவர்களைக் கைதுசெய்ததாகவும் அவர்களிடமிருந்து கொலைகளுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ரீ-56 ரக துப்பாக்கி உள்ளிட்ட மூன்று துப்பாக்கிகளும் அவற்றுக்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்களையும் கொலைக்கு பயன்படுத்தப்பட்டதாக நம்பப்படும் கார் ஒன்றையும் கைப்பற்றியதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த ஜயகொடி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டவர்கள் களனி, மீட்டியாகொட மற்றும் ஹிக்கடுவ ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்களில் ஐவர் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் ஒருவர் 48 மணி நேர தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த 2016.12.05 ஆம் திகதி அம்பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இடம்தொட்ட பகுதியில் வைத்து இளம் தாய், தந்தை மற்றும் மகன் ஆகியோர் அவர்களது வீட்டில் வைத்து அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து அதே குடும்பத்தின் தூரத்து சொந்தம் என கருதப்படும் பழ வர்த்தகர் ஒருவர் 2016.12.12 அன்று மீட்டியாகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அந் நகரத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இக்கொலைகள் தொடர்பில் பல்வேறு மட்ட விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் அம்பலாங்கொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கீழ் எல்பிட்டிய தீர்க்கப்படாத குற்றங்கள் தொடர்பிலான விசாரணைப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்தனர். இதன் காரணமாகவே சந்தேகநபர்கள் அறுவர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களிடமிருந்து ரீ- 56 ரக துப்பாக்கி ஒன்றும் அதற்கு பயன்படுத்தப்படும் தோட்டாக்கள் ஆறும் மீட்கப்பட்டுள்ளன. இதனைவிட மைக்ரே ரக கைத்துப்பாக்கியும் அதற்கு பயன்படுத்தப்படும் ஒரு தோட்டாவும் ரிவோல்வர் ஒன்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 5 தோட்டாக்களும் கார் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந் நிலையிலேயே கைதான அறுவரும் நேற்று பலப்பிட்டிய நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இதன்போதே ஐவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதுடன் ஒருவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகிறார்.

அம்பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (இ-3)

# திரைச்சீலை பயன்படுத்தும் வாகனங்களுக்கு சிக்கல்

(கொழும்பு)

மோட்டார் வாகனங்களின் முன்பக்க கண்ணாடிகளுக்கு நிறமூட்டல் அல்லது திரைச்சீலைகள் பயன்படுத்துபவர்களுக்கு எதிராக கடுமையான சட்டத்தைப் பின்பற்றவுள்ளதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வாறான வாகனங்கள் தொடர்பில் கண்டறிவதற்கு நர்டளாவிய ரீதியில் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படும் போது வாகன சாரதி மற்றும் வாகனத்தில் உள்ளவர்களை அடையாளம் காணும் பொருட்டு குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (இ-3)

# பனிச்சரிவில் சிக்கி 30 பேர் உயிரிழப்பு




மத்திய இத்தாலியை தாக்கிய தொடர் நிலநடுக்கங்களை தொடர்ந்து மலைப் பகுதிகளில் ஏற்பட்ட பனிச்சரிவில் சிக்கி சுமார் 30 பேர் வரையில் உயிரிழந் துள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் சிறிய ஹோட்டல் ஒன்றில் இருந்த பொதுமக்களே இவ்வாறு உயிரிழந்திருப்பதாக நம்பப்படுகின்றது.

மத்திய அப்ருசோ பகுதியில் கிரான் சஸோ மலையில் அமைந்துள்ள Rigo piano ஹோட்டலில் இருந்து சிலரது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன.

குறித்த பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவைதவிர வேறு தகவல்கள்எவையும்இதுவரை வெளியாக வில்லை. (இ-7)

# தெஹ்ரானின் பழைமையான கட்டடம் இடிந்து வீழ்ந்தது



(தெஹ்ரான்)

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் 17 மாடி கட்டடமொன்றின் மேல் மாடியில் ஏற்பட்ட தீ விபத்தை அடுத்து குறித்த கட்டடம் முழுமையாக இடிந்து விழுந்துள்ளது.

குறித்த கட்டடத்தில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்துவதற்காக சுமார் 200 தீயணைப்பு வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த நிலையில், அவர்களில் 38 பேர் குறித்த பணியின போது காயமடைந்தனர்.

1962ஆம் ஆண்டு காலப்பகுதியில் தெஹ்ரானின் மிக உயர்ந்த கட்டடமாக விளங்கிய குறித்த கட்டடத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் தீ பரவியுள்ளது. அதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் தீயைக் கட்டுப்படுத்த போராடினர்.

சுமார் மூன்றரை மணி நேரமாக வீரர்கள் தீயை கட்டுப்படுத்த போராடி வந்த நிலையில், குறித்த கட்டடம் இடிந்து விழுந்துள்ளது. இதனை தொடர்ந்து குறித்த பகுதி முழுவதும் புகையால் சூழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தை அடுத்து விபத்து நேர்ந்த பகுதியில் வாயு கசிவு ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ள நிலையில், தெஹ்ரானிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்பட்டு வருகின்றன. (இ-7)

# ட்ரம்புக்கு ஒபாமா நிர்வாகம் எச்சரிக்கை

சீனாவுடன் பகைமை பாராட்டினால் ஆபத்தில் முடியும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகம்புதிய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.

குறிப்பாக ஒரே சீனா எனற கொள்கையை ட்ரம்ப் மீண்டும் கிளப்புவது அபாயகரமானது என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும், சீனாவுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு விவகாரங்களை மீண்டும் ஆரம்பிப்பதால் அமெரிக்கா சாதிக்கப்போவது ஒன்றுமில்லை என்றும்மாறாக ஆபத்திலேயே முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ஒபாமா நிர்வாகத்தில் உள்ள உதவி தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் தெரிவிக்கையில், 'சீனா எவ்வித பேச்சுவார்த்தைகளுக்கும் வராது. எனவே ஒரே சீனா போன்ற ஆபத்தான கொள்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதால் எந்த பயனும் இல்லை. அமெரிக்கா மற்றும்சீனா ஆகிய நாடுகளுக்குஇடையில்உலகிலேயே முக்கியமான இரு தரப்பு உறவுகள் இருந்து வருகின்றன. எமது முக்கிய அயல்நாட்டு கொள்கைகளில் பெரும்பாலானவை அமெரிக்க-சீன கூட்டுறவால் சாதிக்கப்பட்டதே. எனவே சீனாவுடன் சுமுகமான உறவுகளை கொண்டிருப்பதன் மூலமே பயன்களை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் தெரிவித்தார். (இ-3)



# சிறுவர் அரங்கம்

## கடவுளை காட்டுங்க!

..."இப்போது நீங்கள் பறித்துக் கொண்டிருப்பது என்ன மூலிகை?" என்றான்.

"இது பாம்புக் கடிக்கான மூலிகை. இந்த மூலிகையின் சாறை பாம்பு கடித்தவன் வாயில் விட்டால், விஷம் இறங்கிவிடும். நீ காட்டு வழியில் சுற்றுகிறாயே... இந்த மூலிகையை கொஞ்சம் வைத்துக்கொள்," என்று சில இலைகளைக் கொடுத்தான்.

அவற்றை பத்திரமாக வைத்துக்கொண்ட சைதன்யன், "ஐயா, குடிக்க தண்ணீர் கிடைக்குமா?" என்று கேட்டான்.


"அருகில் ஒரு கிணறு உள்ளது!" என்று கிணறு இருக்கும் இடத்தைக் காட்டினான்.

அந்தக் கிணற்றை அடைந்து தாகம் தீரத் தண்ணீர் குடித்த பின், ஒரு மரத்தடியில் அமர்ந்து உணவு உண்டுவிட்டு அப்படியே உறங்கிவிட்டான் சைதன்யன். அவன் மீது ஏதோ இடித்துவிட்டு ஓடுவது தெரிந்து திடீரெனக் கண் விழித்த சைதன்யன் கண்களில் வேகமாக ஓடும் ஒரு முயல் தென்பட்டது.

திடீரென மரத்தில் ஏதோ சத்தம் கேட்க, நிமிர்ந்து பார்த்தால் ஒரு பெரிய கிளை ஒடிந்து கீழே விழ இருந்தது. உடனே நகர்ந்து விட தற்செயலாக உயிர் தப்பினான் சைதன்யன்.

அங்கிருந்து பயணத்தைத் தொடர்ந்த சைதன்யன் இருட்டும் நேரத்தில் சுசாந்த நகரை அடைந்தான். அங்கு பசியால் வாடிய ஒரு பிச்சைக்கார குடும்பத்திற்கு எஞ்சிய உணவுகளை கொடுத்துவிட்டு அன்று இரவு ஒரு சத்திரத்தில் தங்கினான்.

நடு இரவில் ஏதோ சத்தம்



கேட்டு திடுக்கிட்டு எழுந்த சைதன்யன் தன் அருகில் உறங்கிக் கொண்டிருந்த மனிதனின் வாயில் நுரைதள்ள முனகிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

கொஞ்ச தூரத்தில் ஒரு விஷப் பாம்பு ஓடிக்கொண்டிருப்பதை பார்த்தான். அந்த மனிதனின் அபாய நிலையை உணர்ந்த சைதன்யன் உடனே தன்னிடமிருந்த விஷக்கடி மூலிகைகளை எடுத்து சாறு பிழிந்து அந்த மனிதனின் வாயில் விட்டான். சற்று நேரத்திற்க்கெல்லாம் அவன் சாதாரண நிலையை அடைந்தான்.

அந்த நபர் யாருமல்ல! குடிமக்களின் குறைகளை அறிய மாறுவேடம் பூண்டு இரவில் திரிந்த அந்த நாட்டு அமைச்சர்.

சைதன்யனுக்குத் தன் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்த அமைச்சர், "நீ என் உயிரைக் காப்பாற்றினாய். அதற்க்கு செய் நன்றியாக உனக்கு மன்னரிடம் வேலை வங்கித் தருகிறேன்," என்றார்.

"மிகவும் நன்றி ஐயா. ஆனால, நான் முக்கிய அலுவலாக பவானிபுரம் சென்று கொண்டிருக்கிறேன். சில தினாங்கள் கழித்து உங்களை சந்திக்கிறேன்," என்று கூறி அமைச்சரிடமிருந்து விடைப் பெற்றுக்கொணடான்.

மறுநாள் காலை பவானிபுரத்தை அடைந்து குருவின் சகோதரரை சந்தித்து சேமலாபங்களை விசாரித்து அறிந்து, பிறகு தன் குருவிடம் திரும்பினான் தான் சென்று வந்த விவரங்களையும், அவரது சகோதரனைப் பற்றியும் விளக்கிக் கூறினான்.

"மகனே, நினைவிருக்கிறதா? கண்ணால் காண முடியாத கடவுள் எங்கே என்று வினவினாய் அல்லவா? அந்த சந்தேகத்திற்கு நான் ஏதும் விளக்கம் கூறாமல் உனக்கு விடை கிடைத்து விட்டது. கடவுளைப் பார்த்து விட்டாய் அல்லவா?" என்றார்.

"நானா! நான் எங்கே கடவுளைப் பார்த்தேன்? பார்க்கவில்லையே!" என்றான் ஆச்சரியத்துடன் சைதன்யன்.

"மகனே கடவுள் எப்போதும் எல்லா இடங்களிலும் காணப் படுகிறார். ஆனால், ஒரே உருவத்தில் அவர் உனக்குத் தோன்றவில்லை." என்றார்.

"எந்த குருட்டு முதியவர் உனக்கு பாம்பின் விஷக்கடிக்கான மூலிகை தந்தாரோ, அவர் கடவுள். காட்டிலும் கூட கிணற்றின் தேவை ஏற்ப்படும் என்று எண்ணி, யாரோ ஒருவன் கிணறு தோண்டி இருந்தானே, அவனும் கடவுள் தான். உன்னுடைய உயிரைக்காப்பற்றிய முயலும் கடவுள் தான். எந்த மந்திரியை பாம்புக் கடியிலிருந்து நீ பிழைக்க வைத்தாயோ, அவருக்கு நீ கடவுள். இவ்வளவு உருவங்களில் கடவுளைக் கண்ட பிறகுமா கடவுளை நான் காணவில்லை என்று நீ கூறுகிறாய்?" என்றார்.

குருவின் வார்த்தைகளில் இருந்த உண்மையை அறிந்து உணர்ந்ததும் சைதன்யனுக்கு ஞானோதயம் உண்டாயிற்று. தனக்கு ஞானோதயம் உண்டு பண்ணிய குருவை விழுந்து வணங்கி விட்டு, அவரிடமிருந்து விடை பெற்றான்.

இதற்குப் பிறகு சைதன்யன் தன் பெற்றோரை அழைத்துக் கொண்டு சுசாந்த நகரை அடைந்து அமைச்சரை சந்தித்தான். அமைச்சரின் உதவியால் அவனுக்கு அரசாங்கத்தில் நல்ல வேலையும் கிடைத்தது.

(முற்றும்)

## 01.2017 21 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1643 - ஏபல் டாஸ்மான் தொங்காவில் இறங்கிய முதல் ஐரோப்பியர் ஆனார்.
- 1793 - பிரான்சின் பதினாறாம் லூயி மன்னன் அரசத்துரோகக் குற்றச்சாட்டுகளுக்காக மரணதண்டனைக்கு உட்படுத்தப்பட்டான்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜெபர்சன் டேவிஸ் ஐக்கிய அமெரிக்காவின் செனட்டில் இருந்து விலகினார்.
- 1924 - சோவியத் தலைவர் விளாடிமிர் லெனின் இறந்தார்.
- 1925 - அல்பேனியா குடியரசாக அறிவிக்கப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: அவுஸ்திரேலிய மற்றும் பிரித்தானியப் படைகள் லிபியாவின் டோபுருக் நகரைத் தாக்கின.
- 1947 - முதலாவது சிங்களத் திரைப்படம் (கடவுணு பொரன்டுவ) திரையிடப்பட்டது.
- 1954 - உலகின் முதலாவது அணுசக்தியாலான நீர்மூழ்கிக் கப்பல், USS நோட்டிலஸ், ஐக்கிய அமெரிக்காவில் வெள்ளோட்டம் விடப்பட்டது.
- 1960 - மேர்க்குரி விண்கலத்தில் சாம் என்ற பெண் குரங்கு விண்வெளிக்குப் பயணமானது.
- 1972 - திரிபுரா, மேகாலயா, மணிப்பூர் ஆகியன இந்தியாவின் தனி மாநிலங்களாக்கப்பட்டன.
- 2004 - நாசாவினால் செவ்வாய்க் கோளுக்கு அனுப்பப்பட்ட ஸ்பிரிட் தளவுளவியின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. எனினும் இது பூமியில் தன்னியக்க முறையில் திருத்தப்பட்டு பெப்ரவரி 6 இல் தொடர்புகள் மீண்டும் பெறப்பட்டன.
- 2008 - அலாஸ்காவின் இயாக் மொழி பேசும் கடைசி பழங்குடி இறந்தார்.
- 2009 - செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் அமைக்கப்பட்ட தினம்.

**பிறப்புகள**

- 1912 - கொன்ராட் எமில் புளொக், நோபல் பரிசு பெற்ற ஜேர்மானியர் . (இ. 2000)
- 1953 - பால் ஆலன், மைக்ரோசாப்ட் நிறுவனர்களில் ஒருவர்.
- 1963 - அகீம் ஒலாஜு/வான், நைஜீரியக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

**இறப்புகள்**

- 1793 - பிரான்சின் பதினாறாம் லூயி . (பி. 1754)
- 1924 - விளாடிமிர் லெனின், மார்க்சியப் புரட்சியாளர். (பி. 1870)
- 1926 - கேமிலோ கொல்கி, இத்தாலிய மருத்துவர், நோபல் பரிசு பெற்றவர் . (பி. 1843)
- 1945 - ராஷ் பிஹாரி போஸ், இந்திய செயல்முறையாளர் . (பி. 1886)
- 1950 - ஜார்ஜ் ஆர்வெல், இந்திய-ஆங்கிலேய எழுத்தாளர். (பி. 1903)
- 1989 - பில்லி டிப்டன், அமெரிக்க பியானோ வல்லுனர். (பி. 1914)
- 1989 - சு. வித்தியானந்தன், ஈழத்துத் தமிழறிஞர், பேராசிரியர்.
- 2002 - சொக்கலிங்க பாகவதர், தமிழ் திரைப்பட நடிகர்.

**சிறப்பு நாள்**

- புனித ஆக்னஸ்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 50 | 50 | 50 | 50 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 95 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 220 | 250 | 200 | 250 | 170 | 200 | 200 |
| தக்காளி | 100 | 80 | 120 | 80 | 120 | 120 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 60 | 80 | 80 | 50 |
| கோவா | 30 | 20 | 20 | 30 | 30 | 40 | 30 |
| கரட் | 100 | 40 | 60 | 60 | 70 | 120 | 50 |
| பூசணி | 50 | 40 | 35 | 60 | 60 | 60 | 60 |
| புடோல் | 80 | 40 | 50 | 60 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 80 | 80 | 70 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 90 | 120 | 100 |
| பாகற்காய் | 260 | 200 | 150 | 220 | 220 | 200 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 70 | 120 | 80 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 50 | 100 | 50 | 50 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 200 | 100 | 80 | 120 | 140 | 100 | 120 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 80 | 120 | 80 |
| பீற்றூட் | 40 | 100 | 50 | 60 | 80 | 100 | 80 |
| கறிமிளகாய் | 200 | 100 | 170 | 200 | 170 | 300 | 160 |
| முருங்கைக்காய் | 550 | — | 500 | — | 600 | 600 | 700 |
| போஞ்சி | 100 | 100 | 70 | 80 | 90 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 20 | 40 | — | 40 | 40 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 20 | 30 | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 150 | 250 | 150 | 250 | 220 | 400 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50 | 50 | 40 | 50-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 250 | 150 | 160 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 200 | 120 | 140 | 200 | 120 |
| முள்ளங்கி | 80 | 100 | 60 | 60 | 60 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 30 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 20 | 20 | 25 | 20 |
| ஈரப்பலா | .80 | 50 | 50 | 60 | 60 | 80 | 60 |

அற்ப குணம் படைத்தோர் பேச்சாளராக வர வேண்டாம்.

*~ ஹென்றி வார்டு டீச்சர்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## எழுக தமிழ் பேரணி என்றதும் தீர்வு வருகிறது என்றுரைப்பதோ!

பனங்கட்டி என்ற ஒரு சிறந்த மருத்துவப்பண்டம் கற்பகதருவின் கொடையில் என்று முன்பெல்லாம் தேனீர் அருந்துவதற்கு பனங்கட்டியையே அனுமானமாக கொள்வர். ஆடிப்பிறப்பில் ஆடிக்கூழ்; ஆடி அமாவாசையில் களி இவற்றிற்காக நம் தமிழ் மண்ணில் பனங்கட்டி வியாபாரம் களைகட்டும். அந்தளவிற்கு பனங்கட்டிக்கு மவுசு அதிகம்.

இப்போது பனங்கட்டி வாங்குவார் இல்லை என்பதோடு விலையும் அதிகமாயிற்று.

இவை ஒருபுறம் இருக்க, கருப்பணியை நன்றாக காய்ச்சி பனங்கட்டி தயாரிப்பது வழக்கம். நம் கிராமத்து குடிசைக் கைத்தொழிலாக பனங்கட்டி உற்பத்தி நடைபெற்றது. கருப்பணியை காய்ச்சும் போது அது நன்றாக கொதித்தெழும். அவ்வாறு கொதித்தெழுவதை தணிப்பதற்காக கருப்பணி காய்ச்சப்படும் சட்டிக்குள் ஏதாவது போடவேண்டும்.

நம் முன்னோர்களின் வாய்மொழிக் கதைப்படி கொதிப்பை அடக்க மண்ணைக்கூட போட்டதாக அறிய முடிகிறது.

இதில் எந்தளவு உண்மை உண்டோ நாம் அறியோம்! ஆனால், பனங்கட்டியில் மண் கரகரக்கும் போதெல்லாம் கருப்பணியின் கொதிப்பை அடக்க மண்ணைப் போட்டுள்ளார்கள் என்று சொல்வது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இதன் உண்மை பொய் பற்றிய ஆய்வுகள் இப்போது தேவையற்றவை.

இருந்தும் மனக்கொதிப்பை அடக்க சிலர் மண்ணைப் போடுவது வழக்கம் என்பது மட்டும் உண்மை.

இதற்கு நல்ல உதாரணம் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியாகும். எழுக தமிழ் எழுச்சிப் பேரணி கிழக்கு மாகாணத்தில் நடத்தப்படுவதற்கான அத்தனை ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், இதோ இனப்பிரச்சினைக்கான தீர்வு வருகின்றது! தமிழர்கள் தங்களைத் தாமே ஆள்வதற்கு புதிய அரசியலமைப்பு வழிசெய்கிறது என்று சொல்வார்கள்.

இன்னும் ஒரு படி மேலே சென்று தமிழ் மக்கள் பேரணிகள் நடத்தினால் அது கிடைக்கின்ற தீர்வைத் தடுத்து விடும் என்று சொல்கிறார்கள்.

உண்மையில் இனப்பிரச்சினைக்கு தீர்வேதும் வருவதாக இருந்தால், அதற்குக் காரணம் தமிழ் மக்கள் நடத்திய போராட்டம் என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

நிலைமை இதுவாக இருந்தும் தமிழ் மக்கள் தங்களின் அடிப்படைப் பிரச்சினைகளை ஜனநாயக வழியில் அகிம்சை முறையில் வெளிப்படுத்துவது கண்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அச்சம் அடைகிறது.

தங்களின் முயற்சியும் தங்களிடம் இருக்கக்கூடிய இராஜ தந்திரமுமே இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கக் காரணம் என்று நினைப்பவர்களும் நம் மத்தியில் இருக்கின்றனர்.

இந்த நினைப்புக்கள் அடிப்படை நியாயமற்றவையாயினும் அரசாங்கத்தை காப்பாற்றுவதை உள்நோக்கமாகக் கொண்டு எல்லாமும் நடந்தாகிறது.

எது எப்படியாயினும் எழுக தமிழ் எழுச்சிப் பேரணியை அடக்கும் நோக்கில் தீர்வு வருகிறது என்று கூறி தமிழ் மக்களின் உணர்வுகளை அடக்க நினைப்பது எம் இனத்திற்கு செய்யும் மிகப்பெரும் கொடுமைத்தனம் ஆகும். உண்மையாகவே தமிழ் மக்களிற்கான தீர்வு வருமாக இருந்தால் அது வரவேற்கப்பட வேண்டும். ஆனால் தீர்வு என்பது ஏமாற்று நாடகமாக இருக்கும் போது, எழுக தமிழை அடக்குவதற்காக மண்ணைக் கொட்டுவது அநியாயமானதல்லவா?

# ஜல்லிக்கட்டுக்கு ஆதரவாக உணவு தவிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பேரவையினால் ஒருங்கமைக்கப்பட்டுள்ள " தமிழரின் பாரம்பரிய விளையாட்டான ஏறுதழுவுதலுக்கு தடை நீக்கக் கோரி" இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பொதுநூலகம் முன்பாக அறவழி உணவு தவிர்ப்பு போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

கடந்த 16 ஆம் திகதி அலங்கா நல்லூரில் குறைந்த எண்ணிக்கையிலான இளைஞர் தலைமையில் தொடங்கப்பட்ட இந்த அறவழிப் போராட்டமானது சமூக வலைத்தளங்களின் மூலமாக மாணவர்கள், இளைஞர்கள், பெண்கள், சமூக ஆர்வலர்கள் என தற்போது பல நிலைகளைக் கடநது இரவு, பகல், வெயில், குளிர், பசி, தாகம் என எதையும் பொருட்படுத்தாது பல்லாயிரக்கணக்கான தமிழனின் உரிமைக்குரலாகவும் வியாபித்து தமிழகம் முழுவதும் பரவிக் கிடக்கிறது.

இந்த ஆண்டு எப்படியாவது நமது பாரம்பரிய விளையாட்டான ஜல்லிக்கட்டை நடத்தியே தீரவேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு எதிராகவும் நீதிமன்ற ஆணைக்குழுவிற்கு எதிராகவும் தமிழர்கள் "தமிழன்" என்ற உணர்வுடன் அறவழிப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர் என அந்த அமைப்பினர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ)

# இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி! மூன்று வருடங்களின் பின்னர் வழக்கு விசாரணைக்கு

(கொழும்பு)

தூய குடிநீரை பெற்றுத் தருமாறு கோரி கம்பஹா வெலிவேரிய பகுதியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கிறிஸ்தவ தேவாலயம் மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கு 3 வருடங்களின் பின்னர் நேற்று நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

ரத்துபஸ்வெல பகுதியிலுள்ள தொழிற்சாலையினால் வெளியேற்றப்படும் கழிவானது குடிநீரில் கலப்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

குறித்த போராட்டத்தினை கலைப்பதற்காக சென்ற இராணுவத்தினர் அங்கு இருந்த தேவாலயத்தின் மீது துப்பாக்கி சூட்டு பிரயோகத்தில் ஈடுபட்டனர். இதன் காரணமாக அங்கிருந்த 3 பொதுமக்கள் பலியானதுடன் பலர் காயமடைந்திருந்தனர்.

குறித்த வழக்கானது நேற்று கம்பஹா நீதிமன்றத்தல் நீதவான் டி.ஏ. ருவன பத்திரண முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதில் குறித்த சம்பவம் தொடர்பில் மேல் மாகாணத்திற்குப் பொறுப்பாக இருந்த முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனாநாயக்கவிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றத்தில் சிறப்பு பொலிஸார் சமர்ப்பித்திருந்தனர்.

பல தடவைகள் குறித்த பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக்கொள்ள முயற்சிகளை மேற்கொண்ட போதும பயனளிக்கவில்லை என்றும், அன்று இராணுவத்தினரை அப்பகுதிக்கு யார் அழைத்தது என்று தெரியவில்லை என அநுர சேனாநாயக்க வாக்குமூலத்தில் தெரிவித்தார்.

அத்துடன் குறித்த துப்பாக்கி பிரயோகத்தின் போது ஒருவர் மட்டுமே பலியானதாக அரசாங்கத்தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

## ஜனாதிபதி தனது கட்சியினருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கையெடுக்க வேண்டும்

### விக்கிரமபாகு கருணாரத்ன வலியுறுத்து

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் தான் வழங்கிய வாக்குறுதிகளுக்கு முரணாக பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வரும் தனது கட்சியின் உறுப்பினர்கள் சம்பந்தமாக உடனடியாக ஏதாவது நடவடிக்கை எடுக்குமாறு நவசமசமாஜ கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார். வழங்கிய வாக்குறுதியின் படி பயணத்தை முன்னெடுக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன போட்டியிடுவார். அதிகார பரவலாக்கத்திற்கு நாங்கள் தயாரில்லை.

13 வது திருத்தச் சட்டத்திற்கு அப்பால் செல்ல நாங்கள் தயாரில்லை என சுதந்திரக் கட்சியினர் கூறுகின்றனர். அவர்கள் பற்றி ஜனாதிபதி என்ன சொல்லப் போகிறார். ஜனாதிபதி அவர்களின்வாயை மூட வேண்டும் அல்லது கட்சியில் இருந்து நீக்க வேண்டும்.

நீங்கள் அந்த வழியில் செல்லுங்கள் நான் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையிலான வழியில்தான் செல்வேன் என ஜனாதிபதி தனது கட்சியினருக்கு கூற வேண்டும் எனவும் விக்கிரமபாகு கருணாரட்ன மேலும் தெரிவித்தார். (இ-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் தூதாவளை, இரும்பு மதவடி, சக்களாவத்தை, Dr. சுப்பிரமணியம் வீதி, கந்தரோடை ஆகிய இடங்களிலும வவுனியா பிரதேசத்தில் குருமன்காடு கிராமம், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, செட்டிக்குளம் வைத்தியசாலை, செட்டிகுளம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், வலயம் 6 ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

## சாஸ்திரங்கள்

✦ திருமண நிகழ்ச்சிகளில் மரத்தினால் மணமேடை அமைப்பது மிகவும் விசேடமானதாகும். மரங்கள் புனிதத் தன்மை கொண்டவை. மங்கல நாண் சூடும் வேளையில் மணமக்களை துர்தேவதைகள் அண்டாமல் அவைகளை எட்டிப்போக வைக்கும் சக்தி மரத்திற்கு உண்டு. இதனால் திருமணம் விக்னமின்றி நடந்தேறும்.

-தேச ஆதாரங்கள்

✦ ஒருவன் ஆளும் நாட்டில் மக்கள் அச்சமுற்று வாழ்ந்தால் அவ்வரசன் இருந்தும் இறந்தவனே, நல்லவர், அல்லவர் என்று பாராது வஞ்ச மனதுடன் எல்லோருக்கும் துன்பம் தரும் மன்னன் மூடன். உடலை வருத்தினால் உயிர் அழியும். நாட்டிற்கு உயிர் அரசன். நாட்டை வருத்தினால், நாடு வருந்தினால் அரசன் அழிவான்.

- மனு சாஸ்திரம்

✦ தைப்பொங்கல் பண்டிகை விசேட தினமாகும். அன்றைய தினம் நடனப் பயிற்சிக்கு அங்குரார்ப்பணம் (நடனம் கற்க ஆரம்பித்தால்) செய்வது நன்று.

- பாகவதம்

✦ சனிபகவான் அஸ்தமன காலத்தில் பலமிக்கவராக விளங்குகின்றார். ஆகவே சூரிய அஸ்தமனத்தின் போது சனீஸ்வரனை வழிபட்டால் சகல நன்மைகளும் உண்டாகும்.

- காசி காண்டம்

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ எனது துணிவுடைய இளைஞர்களே நீங்கள் அனைவரும் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுங்காதீர்கள். வானத்தில் முழங்கும் இடிக்கும் அஞ்சவேண்டாம். நிமிர்ந்து நின்று வேலை செய்யுங்கள்.

❖ உங்கள் நாடு வீரர்களை வேண்டி நிற்கிறது. வீரர்களாகுக. ஒரு பாறையைப் போல் உறுதியாக நிற்பீர்களாக. உண்மையே எப்பொழுதும் வெல்கின்றது. இந்தியா வேண்டுவது நாட்டினரின் இரத்தக் குழாய்களிலே ஒரு புதுவலிமையை ஊட்டும் புதியதொரு மின்சாரத் தீயையே துணியுங்கள், துணியுங்கள் மனிதன் சாவது ஒருமுறையே. எனது சீடர்கள் கோழைகளாக இருக்கக்கூடாது. கோழைத்தனத்தை நான் வெறுக்கின்றேன். மிக ஆழ்ந்த மன அமைதியை குலையாது போற்றுங்கள். அற்பர்கள் உங்களை எதிர்ப்பதை எள்ளளவும் பொருட்படுத்தாதீர்கள். கண்களும் காதுகளும் இரண்டே என்பதையும் ஆனால் வாய் ஒன்றே என்பதையும் கருத்தில் வையுங்கள்.

# நல்லூர் பிரதேச செயலக மேசைப்பந்தாட்டப் போட்டி முடிவுகள்








நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான மேசைப்பந்தாட்ட போட்டியானது15.01.2017 அன்று கொக்குவில் இந்துக் கல்லூரி உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் ஆண்களுக்கான தனி வீரருக்கான போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீரர் ஜெ.டனுஸ முதலாம் இடத்தினையும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழக வீரர் என்.கோலிராஜ் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான தனி வீராங்கனைக்கான போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக் கழக வீராங்கனை எஸ்.பதுமிளா முதலாம் இடத்தினையும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீராங்கனை எஸ்.நர்தனா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான இரட்டையருக்கான போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழக வீரர்கள் ரீ.லோவிதன் மற்றும் ரீ.கிருசாந்த் முதலாம் இடத்தினையும் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழக வீரர்கள் என்.இசைப்பிரியன் மற்றும் ஜெ.அனோஜன் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான இரட்டையருக்கான போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழக வீராங்கனைகள் ஜெ.ஜெனசிகா மற்றும் ஜெ.சுகன்யா முதலாம் இடத்தினையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக வீராங்கனைகள கே.பார்மிளா மற்றும் சி.சானுஜா இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

ஆண்களுக்கான குழுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம முதலாம் இடத்தினையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பெண்களுக்கான குழுப் போட்டியில் திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ.விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர். (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

கம்பர்மலை யங்கம்பன்ஸ்விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ். மாவட்ட ரீதியிலான கிங் பட்டத்திற்கான கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் யங்கம்பன்ஸ் செயலாளர் அலீசன்(077 889 3330) தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடியும்.

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழா முடிவின் பின் இக் கிரிக்கெட் தொடர் ஆரம்பமாகவுள்ளது. (க)

## மென்பந்து போட்டிக்கு விண்ணப்பிக்குக

வதிரி சிறிமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் அணிக்கு 9 பேர் 8பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

வெற்றிபெறும் அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசில்களும் வழங்கப்படும்.ஒவ்வொரு போட்டியிலும் ஆட்டநாயகன் விருதும் சுற்றுத்தொடரின் இறுதியில் தொடர் நாயகன் விருதும் சிறந்த பந்து வீச்சாளர்,சிறந்த துடுப்பாட்ட விருதும் வழங்கப்படும்.

தொடர்புக்கு உமைசுதன்-077 169 7348

டெஸ்மன்-077 134 0927

பிரதாப்-077 732 3603

போட்டி மைதானமும் திகதியும் பின்னர் அறிவிக்கப்படும். (க)



உடுவில் பிரதேச செயலக விளையாட்டுப் போட்டிகளில் 15.01.2017 அன்று நடைபெற்ற ஆண்களுக்கான கூடைப்பந்துப் போட்டியில் அம்பாள் விளையாட்டுக்கழகம் சம்பியனாகியது.வெற்றிபெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம்.

## வடக்கின் சுப்பர்கிங் தொடர் இறுதிப்போட்டியில் மன்னார் கில்லறி



### றஞ்சா ஹெட்றிக் கோல்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங் பட்டத்திற்கான உதைபந்தாட்டத் தொடரில் (19.01.2017) அன்று நடைபெற்ற 2ஆவது அரை இறுதியாட்டத்தல் திக்கம் இளைஞர் அணியை 4-0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது மன்னார் கில்லறி அணி. இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் 6ஆவது நிமிடத்தில மன்னார் கில்லறி அணி வீரர் றஞ்சா ஒரு கோலினைப் போட்டு கோல்கணக்கை ஆரம்பிக்க மீண்டும் மன்னார் கில்லறி வீரன் யேசுதாசன் போட்டியின் 10 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினைப்போட முதற்பாதி 2-0 என முடிவுற்றது.

தொடர்ந்த இரண்டாம் பாதியாட்டத்தில் இரு அணிகளின் மேலும் கோல்போடும் முயற்சிகளை பின்கள வீரர்கள் சிறப்பாக தடுத்தாடினர்.

இருப்பினும் மன்னார் கில்லறி அணியின் அபார பந்துப் பரிமாற்றத்தின் மூலம் போட்டியின் 45,46 ஆவது நிமிடங்களில் அனுபவவீரர் றஞ்சா அடுத்தடுத்து இருகோல்களை போட அதிர்ச்சியடைந்த திக்கம் இளைஞர் அணி ஆட்ட வியூகங்களை மாற்றிய போதும் அதனை கில்லறியின் பின்கள வீரர்கள் முறியடித்தனர்.இளைஞர் அணி சிறப்பான பந்துப்பரிமாற்றத்தில (ball passing) ஆடியமை சிறப்பு.

இறுதியில் 4-0 என இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது மன்னார் கில்லறி.இறுதிப்போட்டி எதிர்வரும் 5ஆம் திகதியன்று நடைபெறும். (க)

## எமது நிபந்தனை...

அனைத்து தேர்தல்களிலும் தமிழ் மக்கள் தமது கோபத்தை வெளிப்படுத்தும் விதமாகவே வாக்களித்து இருந்தார்கள். துரதிர்ஷ்டவசமாக 2010ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் பொன்சேகா தோல்வியடைந்தார்.

சர்வதேச சமூகமும் மகிந்த ஏதாவது செய்வார் என நம்பி இருந்த தருணம் அது. ஆனால் மகிந்த போரின் போது தனக்கு உதவி வழங்கிய நாடுகளை கைவிட்டு தன்னை ஒரு இடதுசாரியாக காட்டிக் கொண்டு சீனா, கியூபா, ரஷ்யா போன்ற நாடுகளை கையில் வைத்துக் கொண்டு அமெரிக்காவையும், ஐ.நாவையும் ஏமாற்ற முற்பட்டதன் விளைவு அவர்களது கோபத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டி ஏற்பட்டது.

மறுபக்கத்தில், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஜனநாயக ரீதியில் நடைபெற்ற தேர்தல்கள் அனைத்திலும் தென்னிலங்கை பெரும்பான்மை அரசியல் கட்சிகளை பெரியளவில் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இருந்தாலும், மகிந்த ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்புவதற்காக அவர்கள் சரியான தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சர்வதேச சமூகம் இரண்டு பிரதான அரசியல் கட்சிகளையும் ஒரே இடத்திற்கு கொண்டு வந்து மாற்றத்தை ஏற்படுத்த முடிவு செய்தது.

தமிழ் மக்களும் சர்வதேச சமூகத்தையே நம்பியிருந்தனர். சர்வதேசத்தினுடைய ஆதரவு தமிழ் மக்களுக்கு தேவையாக இருந்ததால் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆட்சி மாற்றத்திற்கு நிபந்தனையற்ற வகையில் பூரண ஆதரவு வழங்கியது.

அதன் விளைவாகவே நல்லாட்சி அரசாங்கம் என்னும் பெயரில் ஒரு கூட்டு அரசாங்கம் உருவானது. இந்த அரசாங்கத்தின் உருவாக்கத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்கு பாரியளவிலானது.

இந்த நிபந்தனையற்ற எமது ஆதவை அரசாங்கம் சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றே நான் கருதுகிறேன். குறிப்பாக ஆட்சி மாற்றம் நடைபெற்ற உடனடியாகவே நூறு நாள் வேலைத்திட்டத்தில் பல மாற்றங்கள் ஏற்படும் என எதிர்பார்த்தோம்.

ஆனால் இன்று இரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் பல பிரச்சினைகள் அவ்வாறே உள்ளன. தமிழ் அரசியல் கைதிகளாக தடுத்து வைத்திருப்போரைக் கூட ஒரு நல்லெண்ண அடிப்படையில் இந்த அரசாங்கம் விடுவிக்கவில்லை.

காணாமல்போனோர் தொடர்பாக அரசாங்கம் இதுவரை உரிய பதிலை வழங்கவில்லை. காணி விடுவிப்பு பற்றி பார்க்கும் போது அங்கொன்றும், இங்கொன்றுமாக சில காணிகள் விடுவிக்கப்பட்ட போதும் அது முழுமையாக நடைபெறவில்லை.

புதிய காணி சுவீகரிப்புக்கள் கூட இடம் பெற்றிருக்கின்றது. சிங்கள குடியேற்றங்கள், புத்தர் சிலைகள் நிறுவுதல் என்பன முன்னைய ஆட்சியைப் போல தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

இவற்றுக்கு எதிராக நாம் கொடுக்கும் குரல்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராகவே இருக்கிறது. ஆகவே இரண்டு வருடங்களில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பாரிய நன்மைகள் எதுவும் கிடைத்ததாக இல்லை,என ஆனந்தன் எம்.பி மேலும் தெரிவித்தார். (செ-250)

## ஒற்றுமையை...

மையை வளர்ப்பதில் நாம் கவனத்தை செலுத்த வேண்டும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

குறிகாட்டுவான்-நெடுந்தீவுக்கிடையிலான நெடுந்தாரகை படகுச் சேவையினை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அதிகார பகிர்வு தொடர்பில் நிறைய கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. ஆனால் தரப்பட்டுள்ள அதிகாரங்களை சிறந்த முறையில் பயன்படுத்த வேண்டும். பொருளாதார ரீதியாக சமூக ரீதியாக மக்களின் வாழ்வை மேம்படுத்துவது என்பதுதான் அரசின் அடிப்படையான கொள்கையாகவுள்ளது.

வடக்கு-கிழக்கு 30 வருடகால யுத்தத்தினால் பின்தங்கியுள்ளது. எனவே அந்த மக்களினுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவேண்டும். எங்களுக்கிடையே பிரச்சினைகள் வேறுபாடுகள் இருக்கலாம் அந்த வேறுபாடுகளுக்கு மத்தியில் எவ்வாறு ஒற்றுமை காண்பது என்பது பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும்.

நாம் இனரீதியான அடையாளத்தை எப்போதும் கொண்டிருக்கிறோம். ஆனால் நாங்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்பதை முன்னிறுத்தி இனரீதியான அடையாளத்தை விட நாட்டின் பிரஜை என்ற அடையாளத்தை முன்னிலைப்படுத்தவேண்டும். இதுவரை காலமும் நடந்தவற்றை மறந்து எமக்கிடையில் சகோதரத்துவம் ஏற்படுமானால் பிரச்சினைகளை தவிர்க்கலாம். தேசிய கட்சிகள் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை சிறந்த முறையில் தீர்க்கமுடியாததால் தான் சிறுபான்மைக்கட்சிகள் வெற்றி பெற்று இருக்கின்றன.

நாங்கள் நாட்டை முன்னேற்றகரமான பாதைக்கு இட்டுச்செல்வோம். இந்த பிரதேச மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்ற வேண்டும் என்பதில் நாம் மும்முரமாக செயற்பட்டு வருகின்றோம். மக்களது வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படுமாமனால் நாட்டின் பொருளாதாரம் உயர்த்தப்படும் என அமைச்சர் முஸ்தபா மேலும் தெரிவித்தார். (செ-9)

## முன்னாள் போராளி...

ஐரோப்பிய ஒன்றியத்தின் பதில் உயர்ஸ்தானிகர் போல் மற்றும் அவரது பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனை கைதடியில் அமைந்துள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

இதன்போதே முதலமைச்சரினால் மேற்குறிப்பிட்ட விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு முதலமைச்சர் கருத்து தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் எம்முடன் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடியிருந்தனர். வடமாகாண மக்களுக்கு எவ்வாறான உதவிகளை செய்ய முடியுமென கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

அதற்கு போரினால் கணவனை இழந்த விதவை பெண்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தினை உயர்த்தும் முகமாக உரிய செயற்திட்டங்களை வகுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது என தெரிவித்தேன்.

முன்னாள் போராளிகள் தொடர்பாக பல முக்கிய விடயங்களை தெரிவித்திருந்தேன். அதாவது அவர்களின் வாழ்வாதார உதவிகளை செய்து மீண்டும் அவர்களை சமூகத்துடன் இணைக்க வேண்டியுள்ளது

முன்னாள் போராளிகளுக்கு உரிய முறையில் முழுமையான புனர்வாழ்வு அளிக்கப்படவில்லை மீளவும் தமது வாழ்க்கையினை தொடர்வதற்கான வாய்ப்புக்கள் பயிற்சிகள் என்பன புனர்வாழ்வின் போது செய்துகொடுக்கப்படவில்லை.

ஏதாவது குற்றங்கள் நடந்தால், பொலிஸ் மற்றும் இராணுவத்தினர் முன்னாள் போராளிகளையே கைது செய்து செல்கின்றனர். இவ்வாறான கைதுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். முன்னாள் போராளிகளுக்கு வாழ்கையில் சிறந்த அங்கீகாரம் கிடைக்கும்வகையில்நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் தெரிவித்தேன்.

அதற்கு அவர்கள் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கடந்த காலங்களில் பல உதவித்திட்டங்களை வழங்கி வந்துள்ளோம். மீண்டும் இவ்வாறான உதவிகளை வழங்குவோம் என உறுதியளித்துள்ளனர்.

மேலும் சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும் பேணுவதற்கும் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியுமென கேள்வி எழுப்பியிருந்தார்கள்.

இதற்கு போர்க்குற்றங்கள் சம்பந்தப்பட்ட விசாரணைகள் நடைபெற வேண்டும். உண்மைகள் கண்டறியப்பட்டு நடந்த பிழைகளுக்கு நீதி கிடைத்தால் மாத்திரமே சமாதானத்தினையும் நல்லிணக்கத்தினையும் உருவாக்க முடியும்.

அத்துடன் அரசியல் ரீதியான தரவேண்டிய உரித்துக்களைப் பெற்றுத்தந்தால் மாத்திரமே எம்மால் ஏனைய விடயங்களில் கரிசனை கொள்ள முடியும்.

அரசியல் ரீதியான உரித்துக்களை வழங்குவதற்கு தென்பகுதியினர் தடையாக உள்ளனர். இதை மாற்றுவதற்கு, அதிகார பகிர்வு எவ்வாறு நாட்டிற்கு நன்மைகளைப் பயக்கும் என்பதுபற்றி பல்கலைக்கழகங்களிலும், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபைஉறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்திட்டம் மேற்கொண்டு நாடு முழுக்க நன்மை பயக்கும் என்ற எண்ணத்தை விதைத்து விட்டால் வடமாகாண மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும்.

முதலமைச்சர் நிதியம் தொடர்பாக அரசு விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள வேணடும் என்றும் அரசு ஜெனிவா உடன்படிக்கையில் ஏற்றகொண்டது போல் இங்கு நடந்து கொள்கிறார்களா என தொடர்ச்சியாக உலக நாடுகள் அவதானிக்க வேண்டும் எனவும் அவர்களுக்கு எடுத்துக்கூறினேன் என முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஊடகங்களிடம் தெரிவித்தார். (செ-9)

## இலங்கை குறித்து...

யாளர் சையித் அல் ஹுசைன் தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்களின் அனைத்து உரிமைகளையும் பாதுகாக்கும் மற்றும் உறுதிப்படுத்தும் வேலைத்திட்டங்களின் நிலையானதாக முன்னெடுத்துச் செல்வது ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் எதிர்பார்ப்பாகும் என்று அவர் கூறியுள்ளார்.

சுவிட்ஸர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட குழுவினரை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சந்தித்த போது இவ்வாறு தெரிவித்ததாக பிரதமர் அலுவலகம் செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் இதயங்களின் காயங்களை ஆற்றுவது தொடர்பில் இலங்கை அரசாங்கம் அவதானம் செலுத்தியிருப்பது முக்கியமான விடயம் என்று சந்திப்பின் போது ஐ.நா ஆணையாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்து மக்களினதும் உரிமைகளையும் அரசியலமைப்பின் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதன்போது கூறியுள்ளார். (செ-11)

## காணாமல்...

வன்னியன் உருவச்சிலைக்கு முன்பாக நாளை மறுதினம் 23ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியிலிருந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக குறித்த சங்கத்தின் வவுனியா மாவட்டத்தலைவி திருமதி ஜெயவனிதா காசிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

குறித்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தினராகிய நாங்கள், அரச படைகள் மற்றும் அரச துணை ஆயுதகுழுக்களால் எமது உறவுகள் கடத்திச்செல்லப்பட்டமையை கண்கண்ட சாட்சிகளாக உள்ளோம்.

அரசினால் நியமிக்கப்பட்ட பலதரப்பட்ட ஆணைகுழுக்கள், உள்ளூர் மற்றும் சர்வதே மனித உரிமை அமைப்புகள், ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர், தமிழ் மக்களின் அரசியல் அதிகாரம் பெற்றுள்ள தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சர்வதேச சமூகம் என்று சகல தரப்புகளிடமும் முறையிட்டும், வருடங்கள் பல கடந்த நிலையிலும் எமது உறவினர்கள் விடுவிக்கப்படவில்லை.

இந்தநிலையில், சாத்வீக ரீதியாக சகல கவனவீர்ப்பு மற்றும் அழுத்த போராட்டங்களை நடத்தியும், எமது உறவினர்கள் தொடர்பில் உரிய தீர்வு எமக்கு வழங்கப்படவில்லை. ஆகவே வேறுவழியின்றி பின்வரும் கோரிக்கைகளை வலியுறுத்தி நாளை மறுதினம் திங்கட்கிழமை அன்று காலை 8.00 மணியிலிருந்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுப்பதை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

01.எமது உறவுகள் உயிருடன் இருக்கிறார்களா? இல்லையா?

02.உயிருடன் இருந்தால், அவர்கள் எந்த இரகசிய சித்திரவதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்?

03.உயிருடன் இல்லாவிட்டால், அவர்களுக்கு என்ன நடந்தது? யாரால்? எப்படி? கொலைசெய்யப்பட்டு, எங்கே புதைக்கப்பட்டுள்ளார்கள்? என்பவற்றை நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்த வேண்டும்.

04.கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள எமது உறவுகள் உயிரோடு இருப்பின், அவர்கள் தத்தமது குடும்பத்தினரோடு இணைந்து வாழ்வதற்கு உடனடியாக வழி விடுவதோடு, சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய வேண்டும்.

குறித்த எமது கோரிக்கைகள் அனைத்தும் நிபந்தனைகள் ஏதுமின்றி தங்களால் நிறைவேற்றப்படும் வரை சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளோம். நாங்கள் உயிர் இழந்தால் அதற்குரிய முழுப்பொறுப்பையும் ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதையும் தெரியப்படுத்துகின்றோம்.

இப்படிக்கு, தமிழர் தாயகத்தில் கையளிக்கப்பட்டு கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடிக்கண்டறியும் குடும்பங்களின் சங்கத்தின் தலைமைக்குழு மற்றும் உறுப்பினர்கள் என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-250)

## அநுராதபுரத்தில் இராட்சத முதலை

(அநுராதபுரம்)

அநுராதபுரம் எப்பாவல பகுதியில் உள்ள கிராமம் ஒன்றில் இராட்சத முதலை ஒன்று பிடிபட்டுள்ளது. குறித்த இராட்சத முதலை 8 அடி நீளமானது.

குளம் ஒன்றிலிருந்த முதலையே நேற்று முன்தினம் இரவு கிராமத்திற்குள் பிர வேசித்துள்ளது என பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த முதலையை பிரதேசவாசிகள் மரம் ஒன்றில் கட்டி வைத்து விட்டு சம்பவம் தொடர்பில் எப்பாவல பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வன விலங்கு திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளதாக எப்பாவல பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

## மான் இறைச்சியுடன் ஒருவர் கைதானார்

(கல்குடா)

சட்டவிரோதமாக மான் இறைச் சியை விற்பனை செய்த ஒருவரை நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதுடன் அவரிடம் இருந்து ஒரு தொகை மான் இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாழைச்சேனை பொலிஸ் நிலைய போதைப் பொருள் ஒழிப்பு பொறுப்பதிகாரி ரீ.மேனன் தெரிவித்தார்.

தொப்பிக்கல் காட்டுப்பகுதியில் இருந்து விலங்குகளை வேட்டையாடி வாழைச்சேனை கிண்ணையடி பிரதேசத்திற்கு கொண்டு வந்து ஒருவர் விற்பனை செய்து வருவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் மேற் கொண்ட நடவடிக்கையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவரிடம் இருந்து ஒரு தொகை மான் இறைச்சியும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

## போலி நாணயத்...

முற்பட்ட சமயம் நெல்லியடிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து நெல்லியடி பொலிஸ் உப பரிசோதகர் கே.விமலவீர தலைமையில் எஸ்.ஜெகதீஸ்வரன், ஏ.அஜித், ஜே.டென்சிராஜ், பெரெரா ஆகியோர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு புலன் விசாரணைகளை மேற்கொண்டனர். இதனடிப்படையில் மேலும் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

இதில் ஒருவர் பழைய வேதக்கோயிலடி இலக்கணாவத்தையைச் சேர்ந்த 26 வயதுடைய நபர் என்வும் மற்றைய நால்வரும் வன்னிச்சை அம்மன் கோயிலடி வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 17, 18, 21, 25 வயதுகளையுடையவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ச்சியாக இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் போலி நாணயத்தாள்களை அச்சிடுவதற்கு பயன்படுத்திய கணனி, பிரதியாக்கல் இயந்திரம், போலி நாணயத்தாளினை அச்சிட்டு வெட்டி எடுக்கப்பட்ட துண்டுகள் என்பன வன்னிச்சை அம்மன் கோயிலடியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இதேவேளை இப்போலி நாணயத் தாள்களினை அச்சிட்டு புழக்கத்தில் விடும் பிரதான நபர் கொழும்பில் இருந்து வடமராட்சிக்கு அடிக்கடி வந்து சென்று கொண்டிருப்பதாகவும் கூறப்படும் நிலையில் அவர் இன்றைய தினம் கைது செய்யப்படுவார் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-60)

## மோ.சைக்கிள்...

கெற்பேலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த வடி வாகனமும், கெற்பேலியிலிருந்து கச்சாய் நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கெற்பேலி மேற்கு மிருசுவிலைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான உதயகுமார் வினோத்குமார் (வயது32) என்ற குடும்பஸ்தர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உரிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் வடி வாகனத்தின் சாரதியைக் கைது செய்துள்ளதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (செ-3-89)

## கிழக்கில் எழுக...

தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் தமிழ் மக்கள் பேரவை நேற்று விடுத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அரசாங்கமானது கபடத்தனமான அரசியல் முன்னெடுப்புகள் மூலம் எமது அரசியல் விருப்புகளை புறந்தள்ளிய ஒரு போலியான அரசியலமைப்பு ஒன்றை எம்மக்கள் மீது திணிக்க முற்படுகின்ற இந்த சந்தர்ப்பத்தில், எமது மக்களின் உண்மையான கோரிக்கைகள் என்ன என்பதை மீண்டும் உலகிற்கு எடுத்துக்கூற வேண்டிய கட்டாயத்தில் தமிழர்களாகிய நாம் இருக்கின்றோம்.

குறிப்பாக, இலங்கையில் நியாயமான சமாதான முன்னெடுப்புகள், பொறுப்புக்கூறல் குறித்தான தமது செயற்பாட்டு அறிக்கையை ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை அரசு எதிர்வரும் மார்ச் மாதம் வழங்க வேண்டிய சூழ்நிலையில், பொறுப்புக்கூறல் மற்றும் நிரந்தர தீர்வு குறித்தான எமது எதிர்பார்ப்புகளை வெளிப்படையாக கூறவேண்டிய கடப்பாடு எம் அனைவருக்கும் இருக்கின்றது.

இவை குறித்தும் அரசியலமைப்பு மற்றும சமகால அரசியல் குறித்தும், எம் தாயகத்தின் அனைத்து இனக்குழுமங்கள் மீதான அடக்குமுறைகள் மற்றும் நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டியதன் அவசியம் குறித்ததுமான மக்கள் விழிப்புணர்வு பணிகளில் தமிழ் மக்கள பேரவை தொடர்ந்தும் ஈடுபட்டு வருகின்றது.

கிழக்கு மாகாணத்தின் அனைத்து நகரங்கள் கிராமங்கள் தோறும் சென்று முழு அளவிலாலான மக்கள் விழிப்புணர்வு பணிகளை இன்னமும் பரந்துபட்ட அளவில் முன்னெடுப்பதை நோக்கமாகக்கொண்டும், தவிர்க்கமுடியாத வேறுசில காரணங்களாலும், இந்த எழுக தமிழ் நிகழ்வானது எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10-ம் திகதி வெள்ளிக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது.

இந்த கால அவகாசத்தில், கிழக்கு மண்ணின் இளைஞர் கழகங்கள் தொழிற்சங்கங்கள், மாணவர் அமைப்புகள் மத நிறுவனங்கள், தன்னார்வ செயற்பாட்டாளர்கள் என அனைவரையும் பேரவையின் கலந்துரையாடலின் பங்காளர்களாகி, மக்கள் பணியாற்ற முன்வருமாறு தமிழ் மக்கள் பேரவை கோருகின்றது.

எம்மிடையேயுள்ள அனைத்து பேதங்களையும் களைந்து கொள்கையின்பாற்பட்டு அனைவரும் ஒன்றிணைவோம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)


கனடாவில் உயர்கல்வி

A/L சித்திபெற்றீர்களா? குறைந்தளவு கட்டணத்துடன் கனடாவில் (வெளிநாட்டில்) படிக்க, உழைக்க, நிரந்தரமாக குடியேற ஆசையா? இன்றே, இப்பொழுதே தெளிவாக திட்டமிடுங்கள் காலத்தினை, பணத்தினை விரயமாக்காது உடனடியாக எம்மை நாடுங்கள். எம்மிடம் வருபவருக்கு பிரத்தியேகமான தனித்துவமான வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் அனுமதிகளும் வழங்கப்படும்.



சர்வதேச அங்கீகாரம் பெற்ற உயர் கல்வி, குடியேற்ற ஆலோசகர்கள்

V4 EDUCATIONAL CONSULTANCY

49A சப்பல்லேன், யாழ்ப்பாணம். (யாழ் பொது நூலகம் முன்னால்)

0768226236

(E-7256)



விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு



UK-550/=Kg

மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்

DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS-0768226240

• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை



வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

100% SATISFACTION GUARANTEED

070 330 5500
021 221 5656

உங்கள் உறவுகளுக்கு துரிதமாகவும் நம்பிக்கையாகவும் பொதிகள் மற்றும் கடிதங்களை உலகின் முன்னணி நிறுவனங்கள் ஊடாக அனுப்பிவைத்திட

அண்ணா அன் கோ

976, கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணம் (C-7257)

எம்முடன் இணைந்து இந் நிறுவனங்களின் முகவர்களாக விரும்புவோரும் தொடர்புகொள்ளலாம்



FREE HOME DELIVERY

யாழ்.நகரம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பிரதேசங்களில் உள்ள வீடுகளுக்கு, நிறுவனங்களுக்கு 20 லீற்றர் குடிநீர் குறைந்த விலையில் வீட்டிற்கு கொண்டு வந்து தரப்படும்.

T.P: 077 338 4838, 077 634 7258 (7534)



SLEAS மட்டுப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கான விசேட இலவசக் கருத்தரங்கு

தை 30 தொடக்கம் மாசி 28 வரை நடைபெறவுள்ள 20 நிமிட வாய்மொழிப் பரீட்சைக்கான ஆயத்த வழிகாட்டல் கருத்தரங்கு ஞாயிறு 22.01.2017 பிற்பகல் 2.00 - 5.00 மணி வரை நடைபெறும்.

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ்.ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகாமை)

(C-7305)



ESWARRAN

Traders, Transport Service, Courier Service & Passenger Service

25 வருட கால நம்பிக்கையான ஸ்தாபனம் Trusted 25 Years Old Company

ESWARRAN EXPRESS

தினசரி பஸ் சேவை: கொழும்பு - யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - கொழும்பு

Daily Service: Colombo - Jaffna, Jaffna - Colombo,



ஈஸ்வரன் பயணிகள் போக்குவரத்துச் சேவை, பிறந்திருக்கும் 2017 புத்தாண்டில் புதுப்பொலிவுடன் புத்தம் புதிய அதிநவீன சொகுசு பஸ்களுடன், பாதுகாப்பும், சௌகரியமானதுமான தனது சேவையை காரைநகர் - யாழ்ப்பாணம்-வெள்ளவத்தை - யாழ்ப்பாணம்-காரைநகர் வரை தினசரி மீண்டும் ஆரம்பித்துள்ளது.



Hot Line : 0777 674119

Booking Hot Lines

Colombo : 0777 806583,

Jaffna : 0777 806 573, 0777 806574

Bus Fare பஸ் கட்டணம் 1300/=



- ★ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட அதி சொகுசு பயணிகள் போக்குவரத்து சேவை.
- ★ போக்குவரத்து ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட பஸ் போக்குவரத்து நிறுவனம்.
- ★ முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் போக்குவரத்து சேவை.
- ★ பாதுகாப்பு, சௌகரியம், நம்பிக்கை, துரித சேவை.
- ★ கொழும்பு கட்டுநாயக்க அதிவேக பாதையினூடாக யாழ்ப்பாணத்தை சென்றடையும்.
- ★ வாடிக்கையாளர்களுக்கு அவசர பொதிகள் அனுப்புவதற்கு எமது (Courier) சேவையூடாக இலவச கட்டணம்.
- ★ 24 மணி நேரமும் எமது தலைமை காரியாலயத்தில் பொருட்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
- ★ புறப்படும் முன் தெய்வ தரிசனம்.

(அ-7296)

வாடிக்கையாளர்களின் அனைத்து தேவைகளுக்கும் 24 மணி நேரமும் நிரந்தர முகவரியில்

201B, Dam Street, Colombo 12, Sri Lanka. Tel : +94 112 433 889, +94 115 232 331, +94 115 232 334, Fax : +94 112 435 247

Branch : No.69,115, Kasthuriyar Road, Jaffna, Sri Lanka. Tel : +94 21 222 4317

No.1, Kandy Road, Karadipoku, Killinochchi, Sri Lanka. Tel : +94 21 228 5306, Fax : +94 21 228 5307



மீண்டும் நாளை ஓர் அரிய சந்தர்ப்பம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு - மலேசியா



| JOB CATEGORY | QUT | SALARY (RM) |
|---|---|---|
| உற்பத்தி உதவியாளர் (பெண்) | 20 | 1200 + OT |
| உற்பத்தி உதவியாளர் (ஆண்) | 80 | 1200 + OT |
| தையல் இயந்திர திருந்துநர் | 10 | 1800 - 2500 |

மலேசியாவிலுள்ள பிரபல்யமான ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு உற்பத்தி உதவியாளர், தையல் இயந்திர திருத்துநர்களுக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது.

நிபந்தனைகள்

- இலவச தங்குமிட வசதி 3 வருடங்கள்.
- வேலை நேரம் 08 மணித்தியாலயங்கள் மேலதிகமாக வேலை செய்யும் நேரத்துக்கு 1.6 வீதமும் சனிக்கிழமை நாட்களில் இரண்டு மடங்கு கொடுப்பனவும் வழங்கப்படும்.
- வாரத்தில் இரண்டு நாட்கள் ஓய்வு / விடுப்பு வழங்கப்படும்.
- முன்னனுபவம் தேவையில்லை.
- வயது 18 - 35
- அரசாங்க அனுமதிக் கட்டணம் ரூபாய் 50,000
- வங்கிக்கடன் வசதி செய்து தரப்படும்.

(C-7296)

பொருத்தமானவர்கள் தங்கள் சுயவிபரம், புகைப்படம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை ஆகியவற்றுடன் நேர்முகத் தேர்வுக்கு சமூகமளிக்கவும்

இடம் : சுபாஸ் விருந்தினர் இல்லம், விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.ஆஸ்பத்திரி பின் வீதி)

காலம் : நாளை (22.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி

முற்பதிவுகளுக்கு : யாழ்ப்பாணத்தில் - 077 972 9481, 076 718 3799

கொழும்பு - 011 524 4146

Capital Recruitment International (Pvt) Ltd

No.130 3/1, 3rd Floor, Grand Pass, Colombo 14

அரச அனுமதி இலக்கம் LL No.: 2248


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.